
# 2016 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 8</u>

**18.01.2016** ஆர்வத்துடன் கல்வியை கற்கும் மாணவர்கள் ஒருபொழுதும் பாடத்தில் தோற்றுப் போவதில்லை, தேர்வில் தோற்பது (ஃபெயில்) என்றால் வருந்துவது (ஃபீல்)!

**12.02.2016** விஞ்ஞானத்தின் சாதனங்கள் பாபாவை சந்திப்பதற்கான வழியை மிகவும் எளிதாக மாற்றி விட்டது ஆனால் எல்லாவற்றையும் விட நல்லது மனதின் நினைவு, மனதில் பாபா, பாபா, என்ற நினைவே இருக்க வேண்டும். பாபா தான் இதயத்தில் நிரம்பியுள்ளார்!

**07.03.2016** சங்கமயுகத்தின் பாக்கியத்தை யார் அடைந்துள்ளாரோ அவர் மகான் யோகி ஆவார், இந்த யுகம் பரமாத்மாவின் பிறப்பு, பரமாத்ம சந்திப்பின் வைர யுகமாகும்! இதில் அலௌகீக சுகம், சாந்தி, மேலான பிறப்பு மற்றும் பாக்கியவான் குடும்பத்தின் பிராப்தியும் ஏற்படுகிறது! (சிவ ஜெயந்தி)

**31.03.2016** ஒவ்வொரு குழந்தைகளின் உள்ளத்தின் அன்பு, அந்த நிலையானது அந்த ரூபத்தின் மூலமாக (முகத்தின் மூலம்) தென்படுகின்றது, ஒவ்வொருவரும்

விதவிதமான சம்மந்தத்தின் அன்போடு சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள், சந்தித்துக் கொண்டிருப்பார்கள்!

**16.10.2016** ஓம் சாந்தி என்ற வார்த்தையின் பொருள் சொரூபத்தில் நிலைத்திருந்து மனதின் நடனத்தை (டான்ஸ்) அதிகரிப்பது. மன மௌனத்தின் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். அப்பொழுது வாய் சப்தத்திலிருந்து விலகிக் கொண்டே செல்வீர்கள் மற்றும் சாந்தியின் கிரணங்களினால் சேவை தானாகவே அதிகரித்துகொண்டு செல்லும்!

**15.11.2016** இன்று பாப்தாதா சாந்திவனத்தில் வந்தார்; ஆனாலும் குழந்தைகளை எதிர்கால இராஜ்யம் டெல்லிக்கு பயணிக்க வைத்தார், ஆகையால் டெல்லிக்கான இடங்களை அடிக்கடி நினைவு கூர்ந்தார்!

**05.12.2016** அனைவரது உள்ளமெனும் படத்தில் முதலில் அவ்யக்த சந்திப்பின் நினைவுகள் நிறைந்துள்ளது, அவரது வாயிலும் உள்ளத்திலும் என்னுடைய பாபா, இனிமையான பாபா, அன்பான பாபா!

**31.12.2016** உள்ளம் கவர்ந்தவர் ஒருவர், உள்ளம் படைத்தவர்கள் அனேகர், அனைவரது உள்ளத்திலும் எனது பாபா நிறைந்துள்ளார். இந்த சுகமான வாழ்வில் தான் ஆனந்தம்! எதுவானாலும் சரி, சைகை கிடைத்தவுடன் ஒரே ரசனையின் நிலையில் ஸ்திரமாகி

விடும் பயிற்சி செய்க! ஆர்டர் பிரகாரம் அதீந்திரிய சுகத்தில் திளைத்திடுங்கள்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂
☂☂☂☂☂☂☂

## 18.01.2016 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆர்வத்துடன் கல்வியை கற்கும் மாணவர்கள் ஒருபொழுதும் பாடத்தில் தோற்றுப் போவதில்லை, தேர்வில் தோற்பது (ஃபெயில்) என்றால் வருந்துவது (ஃபீல்)!

ஓம் சாந்தி! அனைவரும் பாப்தாதாவின் மூலம் ஏற்கனவே திருஷ்டியைப் பெற்றுள்ளீர்கள். இந்த ஸ்தூல கண்களால் பார்த்திருக்கலாம், ஆனால் இந்த கண்களின் மீது பாபாவினுடைய திருஷ்டி படுவதால் இந்த பார்வை (உங்களின்) கூட மாறி விடுகிறது. அனைவருக்கும் இந்த முழு சபையில் யார் தெரிகிறார்கள்? வரிசைப்பிரகாரமான பிராமணர்கள் தென்படுகின்றனர், இடையிடையே வேறு சிலரும் கலந்துள்ளனர் ஆனால் அனைவரின் புத்தியிலும் பாப்தாதாவே உள்ளார். ஒவ்வொருவரும் இப்படி எண்ணுகின்றார்கள், எங்களது பாபா வந்து விட்டார்! அனைவருடைய புத்தியிலும் என்னுடைய பாபா, என்னுடைய பாபா வந்து விட்டார். ஒவ்வொருவருடைய கண்களிலும் இந்த குஷியின் ஜொலிப்பு நிறைந்துள்ளது. என்னுடைய பாபா வந்து விட்டார். அனைவருடைய கண்களிலும் யார் நிறைந்துள்ளார்? என்னுடைய பாபா! கண்களில் கூட பாபா தென்படுகிறார். புத்தியிலும் கூட பாபாவே தெரிகிறார். எனவே உங்கள் அனைவரின் கண்களிலும், என்னுடைய பாபா நிறைந்துள்ளார். பாபாவும் குழந்தைகளை அதே ரூபத்தில் பார்க்கின்றார். எனது குழந்தைகள்! மேலும் குழந்தைகளும் இதே முறையில் பார்த்துக் கொண்டிருக்கின்றனர், என்னுடைய பாபா! எல்லோருடைய உள்ளத்திலும் என்ன தென்பட்டுக் கொண்டிருக்கிறது. என்னுடைய பாபா வந்து விட்டார் எனது பாபா, எனது என்று சொல்லும் போது எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது. என்னுடைய பாபா. சரி. இவர் லண்டனை

சார்ந்தவர்கள், இவர் இந்தியாவை சார்ந்தவர்கள், என்று எவ்வளவு தான் அதிகமாக கூறினாலும் முதலில் வருவது எது? என்னுடைய பாபா வந்து விட்டார். பாபா மற்றும் குழந்தைகளின் சந்திப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த சந்திப்பும் கூட மிகவும் விசித்திரமானது. பௌதீக ரீதியில் யார் எந்த வயதைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, ஆனால் யார். சுருக்கமாக கூறினால் தந்தை மற்றும் குழந்தை அமர்ந்திருக்கின்றனர் என்றே கூறுவர். 100-வயது ஆனவர்களாக இருந்தாலும் சரி, அல்லது 150-வயதானவர்களாக இருந்தாலும் சரி, சொல்லும் போது எப்படி சொல்வர்? அனைத்து பாபா குழந்தைகளும் அமர்ந்திருக்கின்றனர். இங்கு அமர்ந்திருக்கும்போது உங்களை எப்படி அறிமுகப்படுத்திக் கொள்வீர்கள். எந்த ரூபத்தில் வந்தாலும் சரி இங்கே வந்த பிறகு எந்த ரூபத்தில் அமர்கிறீர்கள்? மாணவர்கள் என்ற ரூபத்தில். பாபாவின் முன்னால் மாணவர்கள் என்ற ரூபத்தில் அமர்ந்திருக்கின்றனர். பாபாவின் குழந்தைகள் முழு உலகின் நாலா புறங்களிலிருந்தும் அனைவரும் வந்துள்ளனர். யார் எந்த தேசத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி ஆனால் இங்கே அமர்ந்திருக்கும் போது எப்படி உணர்கின்றீர்கள்? இறை மாணவர்கள். மேலும் கற்பிக்கும் டீச்சர் யார்? சுயம் பகவான். நம்மை விசேஷமாக சந்திப்பதற்காக வந்துள்ளார் -பகவான் நம்மை சந்திக்க வந்துள்ளாரா? அல்லது நாம் பகவானை சந்திக்க வந்துள்ளோமா? யாரெல்லாம் வந்துள்ளனரோ அவர்களை தெரிந்தவர்களாக இருந்தால் என்ன கூறுவீர்கள்? பாபாவிடம் போய்க் கொண்டிருக்கிறோம். மேலும் ஒவ்வொருவருடைய முகத்திலும் சந்திப்பின் அந்த பாவனை எவ்வளவு தென்படுகிறதோ அனைவருடைய முகத்திலும் பாபா மற்றும் குழந்தைகளின் பாவனையின் முகம் தான் தெரிகிறது. எல்லோருடைய முகத்திலும் எவ்வளவு அன்பு, ஆஹா பாபா ஆஹா! அனைவருடைய உள்ளத்திலும் இதே பாடலை பாடிக் கொண்டிருக்கின்றனர். மேலும் எவ்வளவு அன்பு, தந்தைக்கும் குழந்தைகளுக்குமான இது எப்படிப்பட்ட சந்திப்பு. இன்றைய சபையைப் பாருங்கள். வேறு எந்த உறவும் இல்லை, தந்தை மற்றும் குழந்தை. வயதானவர்களாக இருந்தாலும் சரி, எந்த சம்மந்தத்தில் இருந்தாலும் சரி ஆனால் அனைவருமே இறை மாணவர்களின் ரூபத்தில். எல்லோருடைய புத்தியிலும் மாணவன் என்ற பாவனை நிறைந்து உள்ளது. எல்லோருடைய புத்தியிலும் இதே இலட்சியம் தான், அநேக நாடுகளில் இருந்து அநேக ஆத்மாக்கள்

ஆனால் இந்த பிராமண வாழ்க்கையில் அனைவருமே மாணவர்கள் தான். வயதானவர்களாக இருந்தாலும் சரி, சிறிய குழந்தையானாலும் சரி! குழந்தையாக இருப்பினும் கல்வியை கற்க கூடிய அனவைருமே மாணவர்களாகத்தான் அமர்ந்திருக்கிறீர்கள்.

இன்று பாபா இவ்வாறு கூறினார். பாபா இன்று அசரீரி அவதற்கான விசயத்தைக் கூறினார். இவ்வளவு மிகச் சிறந்த விசயத்தை பாபா கூறிக் கொண்டிருக்கிறார். அனைவருடைய மனதிலும் இச்சமயத்தில் தங்களது எந்த ரூபம் தென்பட்டுக் கொண்டிருக் கிறது. மாணவர்கள்! வயதானவர்களாக இருந்தாலும் சரி, அல்லது சிறியவர்களானலும் சரி! ஒரே வேலை, பாடம் படிக்கின்றார்கள். மேலும் இக்கல்வியில் எவ்வளவு சக்தி நிறைந்துள்ளது. மிகவும் எளிமையாக உள்ளது, ஆனால் அந்த கல்வியின் மூலம் என்னவாக ஆகிக் கொண்டிருக்கின்றறீர்கள்? இன்று என்ன கற்க வந்திருக்கிறீர்கள் என்று யாரைக் கேட்டாலும் சரி, அனைவரும் நாங்கள் மனிதர்களிலிருந்து தேவதை ஆகிக் கொண்டிருக்கின்றோம் என்றே கூறுவர். மேலும் எவ்வளவு அன்போடு கல்வியை கற்கிறார்கள். ஒவ்வொருவரும் இப்படி ஆர்வத்துடன் கற்றுக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் இடையே வேறு ஏதேனும் விசயம் வந்து விட்டால் முக்கியமான இந்த விசயம் தவறிப் போய் விடும் அல்லவா? ஆனால் பெரும்பாலனோர் வேறு பலரும் கலந்துள்ளனர் என்பதும் தெரியத் தான் செய்கிறது. அனைவருமே கற்பதற்காக வந்திருக்கிறார்கள். மாணவர்களின் ரூபத்தில் இவர்கள் கற்றுக் கொண்டிருக்கும் பொழுது முகத்திலிருந்து இவர்கள் மிக அதிகமான பாடங்களைப் படிப்பத்தில் மிகவும் மூழ்கிப் போய் இருக்கிறார்கள். இவர்களுக்கு கற்பிப்பது யார்? இது உண்மையிலேயே கவனத்தில் இருந்தால் படகு அக்கரை சேர்ந்து விடும். பரமாத்மா கற்பிக்கக்கூடியவர், பரமாத்மா கற்பிக்கவும் செய்கிறார் என்பதை எப்பொழுது தாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஆனால் இந்த பாடத்தில் அனைவருமே வெற்றி அடைந்து விடுகின்றனர் ஏன்? இங்குள்ள இந்த டீச்சர், கேட்கும்போதே மனதில் பதியும்படி அம்மாதிரி கற்பிக்கின்றார். மறக்கவே மறக்காது. எல்லோரும் மிக மகிழ்ச்சியோடு படித்துக் கொண்டிருக்கின்றனர். இப்போது கூட சில சமயம் இப்படியும் பார்க்கின்றீர்கள், மிக சிலர் ஏதேனும் சூழ்நிலை காரணமாக படிப்பதற்காக வந்து விடுகின்றனர் ஆனால் அந்த கல்விக்குப் பதிலாக

வேறு ஏதேனும் விசயங்கள் மீது கவனம் சென்று விடுகிறது. எல்லோருக்கும் விசேஷமான வீட்டுப்பாடம் கொடுக்கப்பட்டுள்ளது. அனேகர் இப்பொழுதும் கூட அதன் பக்கம் (வீட்டுப்பாடத்தின் மீது) கவனத்தை செலுத்திக் கொண்டு தான் இருக்கிறீர்கள். அதையே இப்பொழுது கூட நினைத்துக் கொண்டிருக்கின்றனர். படிப்பின் மீது அவ்வளவு ஆர்வம், கடைசி நேரம் வரை கூடி படிப்பின் மீது கவனம், இப்படிப்பட்ட மாணவர்கள் இந்த ஹாலில் முக்கால் வாசிக்கும் அதிகமாக இருக்கின்றனர். இந்த வகுப்பில் அமர்ந்திருக்கக்கூடிய மாணவர்களின விசேஷம் அற்புதம் என்னவென்றால் படிப்பின் மீது முழு கவனம் வைக்கக்கூடியவர்கள் என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். அப்படியானால் நீங்கள் யார்? இதை ஒவ்வொருவரும் தாமே அறிவார்கள். இப்பொழுது அமர்ந்திருக்கக்கூடிய மாணவர்களில் அநேகம் பேர் பாடத்தை படிக்கும் ஆர்வம் மிக உள்ளவர்கள். இதனைப் பார்த்து பாபாவிற்கும் மிக நன்றாக இருக்கிறது. படிப்பின் மீது நன்றாக கவனம் செல்கிறது. இது ஒரு நல்ல ரிசல்ட் இதை மேலும் முன்னேறச் செய்ய வேண்டும். கல்வியின் மீது இருக்கும் ஆர்வத்தை அதிகரிக்க வேண்டும். படிப்பின் மீது கவனம் செலுத்துவோர் மிக நல்லவர்கள், இன்றைய ரிசல்டில் படிக்கக்கூடியவர்கள் அதிகமாக இருந்தனர். தங்களது பாடத்தை ஆர்வத்துடன் படித்துக் கொண்டிருக்கின்றனர். எண்ணிக்கையும் அதிகமாக உள்ளது. கல்வியைக் கற்பவர்கள் கூட மிகவும் ஆர்வமாக உள்ளனர் என்பது தெரிகிறது. டீச்சருக்கும் கூட கற்பிக்கும் அந்த ஆர்வம் நன்றாகவே உள்ளது. அவரும் எப்பொழுதும் இவ்வாறே நினைக்கின்றார். மாணவர்கள் யாதேனும் காரணத்தால் தோல்வி அடைந்து விடக்கூடாது (பெயில்) குறைந்த மதிப்பெண்ணும் எடுக்கக் கூடாது. இங்கோ அனைவருமே கல்வியின் பலனை எடுத்துக் கொண்டிருக்கின்றனர். அனைவருமே கல்வியின் பலனை எடுப்பவர்கள். எனவே இது வரை அமர்ந்துள்ளனர். இல்லையென்றால் அறை வகுப்பிற்கும் மேலானவர்கள் எழுத்து சென்றிருப்பர். ஆர்வத்தின் விசயமாகும் இது. கல்வியின் மீது ஆர்வம் இருக்கும்போது கல்வியை விட்டுவிடுவது மிகவும் கெடுதலாகத் தென்படுகிறது. பிறகும் இந்த வகுப்பில் வந்திருக்கக்கூடியவர்களின் ரிசல்ட் பிரகாரம் ஆர்வம் படிப்பின் மீது உள்ளது என்பது தெரிய வருகிறது. கை தட்டுங்கள்! கல்வியின் மீது கவனம் உள்ளது. இதற்கான வாழ்த்துக்கள்! ஏனெனில்

நீங்கள் இருப்பதே இறை மாணவர்களாக! மாணவர்களாக இருந்து கொண்டு படிப்பின் மீது ஆர்வம் இல்லை என்றால் அது அழகல்ல. எனவே அனைத்து மாணவர்களும் கல்வியின் மீது கவனம் தரக்கூடியவர்கள் என்று கூறினோம். ஆக, எவ்வளவு பேரோ அதன் பிரகாரம் ரிசல்ட் மிக நன்றாக இருக்கிறது. எனவே இந்த வகுப்பிலுள்ளோரை தேர்ச்சியுற்றவர்கள் (வெற்றி) என்றே கூறுவோம். அனைவருடைய முகத்தையும் பாருங்கள். அனைவரும் அழகாக புன்சிரித்துக் கொண்டிருக்கின்றனர். எப்பொழுதுமே என்ன செய்தாலும் சரி. அதற்கென்று நேரத்தை ஒதுக்குகிறீர்கள், 1-மணி நேரமோ, அல்லது அரை மணி நேரமோ என்று நேரத்தை ஒதுக்கத்தானே செய்கிறீர்கள். ஆக நேரத்திற்கு மதிப்பு என்பது உள்ளது. எனவே உங்களுடைய இயற்கையான தன்மை என்னவென்றால், என்ன செயலை செய்தாலும் அதனை முழு ஈடுபாட்டோடு செய்வீர்கள், ஆக இந்த வகுப்பில் உள்ளோர் இம்மாதிரி நல்ல ரிசல்ட்டைத் தரக்கூடியவர்கள், மேலும் கற்றுத் தரும் டீச்சருக்கு எப்படிப்பட்ட மாணவர்களைப் பிடிக்கும்? உங்களைப் போல! இன்றிலிருந்து தான் நாங்கள் ரெகுலராக ஆனோம் என்று ஒரு சிலர் சொல்லலாம், ஆனால் அப்படி ஆகி விட்டதே நல்லது தான் இல்லையா? ரெகுலராக வருவோரது அட்டவணையில் வந்து விட்டீர்கள் தானே! ஒரு நாள் வந்தால் கூட. ஒரு நாள் படித்தாலும் கூட போதும் என்றிருக்கக்கூடாது. நிறைய ரிசல்ட்டை பார்க்கும்பொழுது மகிழ்ச்சி அடைகிறார்கள் நாங்களும் கூட வெற்றி அடைந்தவர்கள் வரிசையில் வந்து விட்டோம் என்று. இதன் மூலம் அனைவருமே புரிய வந்திருப்பர், மற்றபடி கவனம் கொடுப்பது நமது கடமை. ஏனெனில் டீச்சர் கூட உங்களுக்காக முயற்சி எடுக்கிறார்கள் தானே! ஆக டீச்சர்கள் மற்றும் மாணவர்கள் இருவருக்கும் அதிகமாக வெற்றி அடைவதற்கான வாழ்த்துக்கள்! ஆக ஒருபொழுதும் எவரும் எந்த பாடத்திலும் தோல்வி அடையக் கூடாது. இது உங்களுக்கு ஒரு பாடம் புகட்டியுள்ளது. அன்று அவர் கற்பித்தார். இன்று நீங்கள் வெற்றி அடைந்து (பாஸ்) விட்டீர்கள், ஆக முகத்தைப் பாருங்கள். யார் தோல்வி அடைந்தார்களோ, அவர்கள் தலையை கீழே தொங்கப் போட்டு விடுகின்றனர். இது இயல்பாகவே நடக்கிறது. எவ்வளவு தான் விரும்பினாலும் தலை கீழே தொங்கி விடுகிறது தான். ஆக எப்பொழுது தேர்வு வைக்க அமர்கிறீர்களோ அப்பொழுது இந்த நாளை நினைவில் கொள்ளுங்கள். பாஸாகியே தீர வேண்டும் என்று. ஒட்டுமொத்த ரிசல்ட்டும் முடிவும்

பார்க்கப்பட்டுள்ளது. ஒரு கணக்கில் ரிசல்ட் என்பதும் என்றாகவே இருக்கிறது. எப்பொழுதாவது அமர்ந்தீர்கள் என்று சொன்னால் எப்பொழுதும் இதன் மீது கவனம் வைக்க வேண்டும். அதாவது ஒருபோதும் தோல்வி அடையக்கூடாது. தோல்வி அடைவது என்றால் வருந்தக்கூடியவர்கள். வருடம் முழுவதும் உங்களுக்கு நினைவு இருந்துக் கொண்டே இருக்கும், நான் தோல்வி அடைந்து விட்டேன், தோல்வியானது, எனவே சட்டபிரகாரம் மாறிப் போய் விடலாம் ஆனால் இந்த சங்கல்பம் ஒருபொழுதும் வைக்கக்கூடாது, அதாவது எது நடந்ததோ அது நல்லதே, சில நேரம் தோல்வி, சில நேரம் வெற்றி என்பது நடக்கத்தானே செய்யும். எப்பொழுதுமே பாஸ் என்பது நடக்குமா என்ன? ஆனால் இந்த கல்வி அனைவருக்குமே கிடைத்துள்ளது. யார் பாஸாகியுள்ளீர்கள், அல்லது எவ்வளவு பேர் அவ்வாறு ரெடியாகியுள்ளனர். கை உயர்த்துங்கள். பாஸானவர்கள். கை உயர்த்துவோர் குறைவாகவே உள்ளனர். சபையின் எண்ணிக்கையை பார்க்கும் போது இது குறைவே. எப்பொழுதுமே படிக்கும் பொழுது நான் பாஸாகியே தீர வேண்டும் என்ற லட்சியம் வைக்க வேண்டும். இதுவரை நீங்கள் என்ன படித்துள்ளீர்களோ முதல் வகுப்பிலிருந்து இது வரை எவ்வளவு வகுப்புகள் படித்துள்ளீர்களோ அதில் 8வது வகுப்பு நடந்து கொண்டிருக்கிறது என்று எண்ணுங்கள். இதில் எத்தனை பேர் வெற்றி அடைந்துள்ளனர், எத்தனை பேர் வெற்றி அடைய வேண்டும்? முழுமையாக வெற்றியடைவில்லை என்றாலும் சற்று குறைவாக, ஒன்றிரண்டு மார்க்குள் சற்று குறைவாக உள்ளது என்றால் சரி, ஆனால் அதிக மார்க் குறைவாகப் பெற்று தோல்வி (பெயில்) ஆகியிருந்தால் அது சரியல்ல. எனவே என்னவொரு லட்சியத்தை மேற்கொள்வீர்கள். தோல்வி அடைந்தாலும் கூட ஒன்றும் பரவாயில்லை அப்படியா? ஒன்றிரண்டு மார்க்குள் சற்று அதிகமாகப் பெற்று வெற்றி அடைந்தால், இது சரியா? அப்படித்தான் நடக்கும்.... அப்படியா? ஒரே ஒரு லட்சியத்தை வையுங்கள். ஒரு வகுப்பு கூட தவற விடக்கூடாது. ஏனெனில் மாணவர்களின் லட்சியம் என்பது இதுவாகவே இருக்க வேண்டும். நாள் நிச்சயமாக, வெற்றி அடைந்தே தீர வேண்டும். முயற்சி செய்வேன், ஆகி விடுவேன், என்பது சரியல்ல.

ஆக இன்று அனைவருமே மிகுந்த முயற்சி செய்தீர்கள். எவ்வளவு சதவீதம் கை உயர்த்தினீர்கள்? கை என்னமோ உயர்த்தினீர்கள் ஆனால்

பாஸ் என்பது எதுவரை நடந்தேறியுள்ளது என்பதை பார்க்க வேண்டும் அல்லவா? பாஸ் என்னவோ ஆகி விட்டீர்கள் ஆனால் பாஸ் என்பது இல்லை என்கிற அளவிற்குத்தான் (மிகக் குறைவாகவே) ஆனது. அதாவது ஒன்றிரண்டு நம்பர் அதிகமாக கிடைத்து பாஸாவது. அல்லது சரியாக பாஸ்மார்க் வாங்கி பாஸானது. (இதுவெல்லாம் ஒரு நல்ல பாஸ் என்று சொல்ல முடியாது) எப்பொழுதுமே இதை கவனத்தில் வையுங்கள். எந்த ஒரு விசயத்தையும் தேர்வில் வெற்றி (பாஸ்) என்றால் முழு வெற்றியாக இருக்க வேண்டும். பெயில் ஆகி விட்டால் அது நன்றாகவே இருக்காது. ஏதேனும் ஒரு (வேண்டாத) பழக்கம் இருக்கும். அதிலேயே பிஸியாக இருந்திருப்பீர்கள். பிறகும் கூட எத்தனை பேர் இங்கு அமர்ந்தள்ளீர்கள், பாஸானவர்கள். கை உயர்த்துங்கள். நல்லது. அல்லது முன் வரிசையில் மட்டும் தான் பாஸானவர்கள் அமர்ந்துள்ளனரா! நல்லது. பாஸானவர்கள் என்கிறபோது கை உயர்த்துவோர்! அவர்களுக்கு எவ்வளவு போதை ஏறுகிறது.

**சேவையின் வாய்ப்பு மகராஷ்டிரா மண்டலம் -மகாரஷ்டிரா, ஆந்திரபிரதேசம், மும்பை:** 15-ஆயிரம் பேர் வந்துள்ளனர். மற்றபடி மொத்தமாக 22-ஆயிரம் பேர் வந்துள்ளனர். மகாராஷ்டிரா பாப்தாதா இவர்களுக்கு வாழ்த்துக்களை வழங்கிறார் ஏன் தெரியுமா? தேர்வு வழங்கப்பட்டதும் இங்கே, மேலும் இங்கேயே அனேகம் பேர் பாஸாகியுள்ளனர். ஆக யார் பாஸாகியுள்ளனரோ அவர்களுக்கு நல்வாழ்த்துக்கள்! நன்கு முயற்சி செய்தார்களோ. அல்லது அதிர்ஷ்டமோ எப்படியோ ஆகி விட்டீர்கள். யார் நன்கு முயற்சி செய்தார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள், முயற்சி குறைவாக செய்தவர்கள் குறைவானவர்களே! பிறகும் இவ்வளவு பேர் பாஸாகியுள்ளது இது பாப்தாதாவிற்கு நன்றாக பிடித்துள்ளது. ஹாலில் அரை வாசி பேருக்கும் அதிகமானோர்! நல்லது.

**இரட்டை வெளிநாட்டினர்:** 50-நாடுகளிலிருந்து 550-பேருக்கு மேல் வந்துள்ளனர். நல்லது. இவ்வளவு பேர் வந்துள்ளனரே! நன்றாக முயற்சி செய்துள்ளனர். இப்படி பாஸாகி உள்ள இவர்களுக்கு கைத்தட்டுங்கள். ஏனெனில் ரிசல்ட் கிடைத்த உடனே இந்த மாதிரி பிரபாவம் ஏற்படுகிறது. இவர்கள் எப்படி இருந்தனர் என்று பிரபாவம் ஏற்படுகிறது.

அதாவது படிப்பின் மீது ஆர்வம் இருந்தது அல்லது வேறு எந்த விசயத்தின் மீதாவது ஆர்வம் இருந்தது நல்லது. (ரத்தன் தாதா, ரத்தன் சகோதரி, லண்டன் வாசிகள்) இவர்கள் குடும்பத்திலோ அவர்கள் இருவருமே பாஸாகி விட்டனர். இது மிகவும் நல்லது. உங்கள் அனைவரின் தரப்பிலிருந்தும் பாபாவே இவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். அதுவும் சபையின் நடுவிலேயே தெரிவித்துக் கொள்கிறார். நல்லது. தேர்வின் முடிவு நன்றாக இருக்கும்போது ஆர்வம் அதிகமாகிறது. இவ்வளவு ரிசல்ட் ஏன் குறைவாக ஆனது? ஒவ்வொருவரும் நினைத்துக் கொள்வர் நாமும் கூட சற்று அதிகமாக படித்திருந்தால் நம்பரில் வந்து முன்னேறிச் சென்று இருக்கலாமே. மேலும் அவ்வாறு செய்யவும் முடியும். சற்று அலட்சியமாக இருக்கின்றனர். நடந்து விடும். பின்னால் எப்படியாவது நடந்தேறி விடும் அப்படி கிடையாது. நடந்தே தீர வேண்டும்!

மூன்று முக்கியமான இடங்களிலும் பூக்களின் மூலம் கல்கத்தாவை சார்ந்தவர்கள் அலங்கரித்துள்ளனர். கல்கத்தாவில் இருந்து அநேகம் பேர் வந்துள்ளனர். இவர்களிடம் இருந்து இதைக் கற்றுக் கொள்ளுங்கள், நல்லது. யார் கையை உயர்த்தினரோ அவர்கள் தரப்பிலிருந்து இவர்களுக்கு 100-மடங்கு அதிகம் வாழ்த்துக்கள். அனைவரும் உற்சாகம் ஆவர்த்தில் உள்ளனர். அடுத்த முறை இன்னும் அதிகமானோர் முன் வருவர். ஒரு முறை செய்துள்ளீர்கள் அல்லவா? இப்பொழுது உற்சாகம் வந்து விட்டது. அதாவது நாம் கூட அவ்வாறு ஆக முடியும் என்றால் அடுத்த முறை நிச்சயமாக வெற்றி பெறுவோம். மேலும் நம்பர் முன்னால் வருவதற்கும் முயற்சி செய்ய வேண்டும்.

முதல் முறையாக அநேகம் பேர் வந்துள்ளனர். பாதி ஹாலுக்கும் அதிகமாக உள்ளனர். இவ்வளவு பெரிய சபையில் கொஞ்சம் பேரே கையை உயர்த்தினார்கள். அந்த கொஞ்சம் பேர் அதிகமானால் எவ்வளவு நன்றாக இருக்கும். இவர்கள் உற்சாகம் ஆர்வத்துடன் இருக்க வேண்டும் என்றே நாம் கூறுவோம். முன் வரிசை நம்பரை அடைவது என்பது ஏதோ பழக்க வழக்கம் என்பது அல்ல. தயாராகி விடுகிறது அல்லவா? பெயர் என்பது கிடைத்து விடுகிறது அல்லவா? முழு ஹாலில் உள்ளவர்கள் இவர்களது உற்றார் உறவினர் எல்லோரும் எவ்வளவு குஷி அடைகின்றனர். அவர்களது தாய் தந்தையர், சித்தி

சித்தப்பா என்று எவ்வளவு பேர் மகிழ்ச்சி அடைகின்றனர் ஆனால் நல்லது என்னவென்றால், தனது நம்பரை அவர்கள் பெற்று விட்டார்கள். பிறகு இந்த எண்ணிக்கையிலும் வந்து விட்டனர் இல்லையா? இதுவும் நல்லதே. இல்லை என்பதை விட இது நல்லது தானே! நல்லது.

முதல் முறையாக வந்திருக்கும் இவர்களுக்கு இந்த பெரிய சபையில் உள்ளோர் அனைவரின் வாழ்த்துக்கள்.

**தாதி ஜனாகியுடன்:** உங்களைப் பார்த்து எல்லோருக்கும் உற்சாகம் எழும். இவர்கள் செய்யும் பொழுது நாம் ஏன் செய்ய முடியாது. (மோகினி சகோதரி நியூ யார்க்கிலிருந்து அன்பார்ந்த நினைவுகளை அனுப்பியுள்ளர், ஜெயந்தி சகோதரி அவர்களும் அனுப்பியுள்ளார்) நினைவை அனுப்பியுள்ளனர், ஆனால் வர முடியவில்லை அங்கும் கூட ஜனவரி-18 நினைவு தினத்தை மிக அன்போடு கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். கல்கத்தாவை சார்ந்தவர்கள் பாப்தாதாவிற்கு மிக அன்போடு மாலை அணிவித்தனர். முன்னி சகோதரியைப் பார்த்து நீங்களும் கல்கத்தாவிலிருந்து வந்தவர்கள் தானே!

**மோகினி சகோதரி:** (பாபா உங்களது வரதானத்தினால் நன்றாக உள்ளேன்) மேலும் நன்றாகவே இருப்பீர்கள். அது மிகவும் நல்லது தான். அனைவருக்குமே பாப்தாதா வரதானமாக ஆம் ஆம் என்று கூறி விடுகிறார் ஆனால் நினைவில் இருத்த வேண்டும்.

**மது பெகன் (கல்கத்தா):** 20-வருடமாக ஜனவரி-18 தினத்தை பூக்களால் அலங்கரிக்கின்றனர். இவர்கள் முதல் நம்பரில் வருவதற்காக முயற்சி செய்துள்ளார். முயற்சியிலும் சிறிது எண்ணிக்கையில் வந்துள்ளனர். வேறு சிலரும் இன்னும் வருவர். பரவாயில்லை ஆனால் உற்சாகம் வரும். நாம் சற்றே தான் பின்னால் இருக்கிறோம் என்று.

**நாராயாண் தாதாவிடம் (பிரம்மாபாபாவின் லௌகீக மகன்):** இன்னும் முன்னேறிச் சென்று காண்பியுங்கள். எப்படி தற்போது அருகில் வந்து காண்பித்தாயோ அவ்வாறு இதிலும் (புருஷார்த்தம்) முன்னால் வந்து காண்பிக்கவும். உன்னால் செய்ய முடியும், தற்போது வயது முதிர்ந்தவர் அல்ல இன்னும் இளைஞரே. இதைச் செய்ய விரும்பினால்

கட்டாயம் செய்ய முடியும். நம்பரை அடைய முடியும். கொஞ்சம் தனக்குள் வேகத்தை நிரப்பிக் கொள்ள வேண்டும். (அனைவரது ஒத்துழைப்பும் உள்ளது) முதலில் உங்களது ஒத்துழைப்பு (சப்போர்ட்) அனைவருக்கும் தேவை. நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 12.02.2016 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## விஞ்ஞானத்தின் சாதனங்கள் பாபாவை சந்திப்பதற்கான வழியை மிகவும் எளிதாக மாற்றி விட்டது ஆனால் எல்லாவற்றையும் விட நல்லது மனதின் நினைவு, மனதில் பாபா, பாபா, என்ற நினைவே இருக்க வேண்டும். பாபா தான் இதயத்தில் நிரம்பியுள்ளார்!

ஓம் சாந்தி அனைத்து பாப்தாதாவின் மிகச் செல்லமான குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா மிகவும் மகிழ்ச்சி அடைகின்றார். ஏனென்றால் ஒவ்வொரு குழந்தையும் பாபாவிற்கு அந்தளவு அன்பானவர்கள். ஒவ்வொருவருடைய முகத்தையும் பார்த்து பாப்தாதாவின் மனதில் அதாவது, ஒவ்வொரு குழந்தையின் முகத்தில் பாபாவின் முகத்தைப் பார்த்து பாபாவுக்கும் அவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது. இவ்வாறு குழந்தைகள் ஒவ்வொருவரின் முகத்தின் மூலம் பாபாவைப் பார்த்து பாபா மகிழ்ச்சி அடைந்து கொண்டேயிருப்பதைப் போல ஒவ்வொரு பாரதவாசி மற்றும் வெளி நாட்டினர் இரண்டு விதமான குழந்தைகளையும் சாகாரத்தில் எதிரில்

பார்த்து பாபா விற்கும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஆஹா! ஒவ்வொரு குழந்தையும் ஆஹா! அனைவரது கண்களும் மிகவும் பற்றற்ற நிலையிலும், அதே சமயத்தில் மிகவும் அன்பாகவும் இருப்பதைப் பார்க்க முடிகின்றது. ஏனென்றால், ஒவ்வொருவருடைய இதயமும் இதைத்தான் கூறுகின்றது ஆஹா பாபா ஆஹா! சாகார ரூபத்தில் அதாவது பௌதீக ரூபத்தில் பாபா மற்றும் குழந்தைகளுடைய இந்த சந்திப்பு எவ்வளவு அன்பு நிறைந்ததாக இருக்கின்றது. எவ்வளவு காலத்திற்கு பின்பு பௌதீக உலகத்தில் சாகாரமாக பாப்தாதா குழந்தைகளைப் பார்த்து, அதே போன்று குழந்தைகளும் தந்தையைப் பார்த்து எவ்வளவு மகிழ்ச்சி அடை கின்றனர். ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இதே பாடல் ஒலித்துக் கொண்டிருக்கின்றது -ஆஹா பாபா ஆஹா! அதே போன்று பாபாவின் உள்ளத்திலும் இதே பாடல் ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஆஹா குழந்தைகளே! ஆஹா! ஒவ்வொரு குழந்தைக்கும் இந்தக் கண்கள் மூலமாக இந்த சாகார உலகத்தில் இந்த இனிமையான சந்திப்பு, எவ்வளவு அன்பு நிறைந்ததாக இருக்கின்றது. குழந்தைகளினுடைய உள்ளத்திலும் ஆஹா பாபா ஆஹா! மேலும் பாபாவின் உள்ளத்திலும் ஆஹா! சிறிது நேரத்திற்கான இந்த சந்திப்பு எவ்வளவு அன்பு நிறைந்ததாக விளங்குகிறது. ஒவ்வொரு குழந்தைகளின் மனதிலும் பாபா நிறைந்திருக்கின்றார். இப்படிப்பட்ட அன்பின் சொரூபமாக விளங்கும் ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்திலும் என்னுடைய பாபா, பாபாவின் உள்ளத்தில் எனது அருமைக் குழந்தைகள் இந்த நேரத்தில் பெரும்பாலானோர் அதுவும் ஒவ்வொரு குழந்தையும் நேர் எதிரிலேயே பாபாவைப் பார்த்து உள்ளத்திலும், வாய் மூலமாகவும் 'என்னுடைய பாபா' இதே பாடலைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு வரின் உள்ளத்திலும் என்னுடைய தந்தை, வரிசைக்கிரமமாக இருந்தாலும் உள்ளத்தில் நிரம்பியுள்ளது யார்? மேலும் பாபாவின் மனதில் யார்? என்னுடைய குழந்தாய். இவ்வளவு எதிரில் சந்தித்திக் கொண்டு பாபாவும் ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்தின் நினைவு செய்யக்கூடிய போட்டோவைப் பார்த்து பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றார், ஆஹா குழந்தைகளே ஆஹா! இந்த சந்திப்பானது நேரடியான சந்திப்பு. யார் மூலமாக இருந்தாலும் இந்த சந்திப்பு, தற்போது நடந்து கொண்டிருக்கின்ற இந்த சந்திப்பு, இந்த சந்திப்பினுடைய அனுபவம் சாதாரணமானது கிடையாது. பாபாவின் உள்ளத்தில் இவ்வளவு அனைத்து குழந்தைகளும்

நிரம்பியுள்ளார்கள். குழந்தைகளின் உள்ளத்தில் ஆஹா பாபா ஆஹா மற்றும் பாபாவின் உள்ளத்தில் ஆஹா குழந்தாய் ஆஹா! ஒவ்வொருவரின் உள்ளத் திலும், குழந்தைகளின் மனதில் பாபா, பாபாவின் மனதில் குழந்தைகள். இந்த உள்ளத்தின் சந்திப்பை சித்திரங்களின் மூலமாகப் பார்க்கும் பொழுது ஒவ்வொருவரும் அன்பில் மூழ்கி யுள்ளார்கள். ஒவ்வொருவரின் உள்ளத்திலும் இருந்து என்ன வெளிப்படுகின்றது? என்னுடைய பாபா, இனிமையான பாபா, அன்பான பாபா மேலும் பாபாவின் இதயத்தில் கூட ஒவ்வொரு குழந்தைகளின் அன்பானது நிரம்பியுள்ளது. பக்தியில் இந்த மாதிரி நினைத்துக் கூட பார்த்ததில்லை. அதாவது இந்த மாதிரி பிரபுவின் சந்திப்பு நம் குழந்தைகளின் பாக்கியத்தில் உள்ளது ஆனால் டிராமா என்றும் கூறலாம். அல்லது அதிர்ஷ்டம் என்றும் கூறலாம். ஒவ்வொரு வரின் பாக்கியத்தைப் பார்த்து பாபாவிற்கு எவ்வளவு சந்தோஷம் ஏற்படுகிறது. ஆஹா குழந்தாய் ஆஹா! இந்த மாதிரி சந்திப்பானது, அனைவரும் நேரடியாக சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். இதற்குத்தான் கூறப்படுகிறது. இந்த சந்திப்பினுடைய வாய்ப்பானது டிராமாபடி கிடைத்துள்ளது. மிகவும் நல்லது. மனம் மிகவும் ஆனந்தத்தில் திளைக்கின்றது. ரூபம் வேறாக இருந்தாலும் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம் தான் இல்லையா? எந்த உணர்வு ஏற்படுகிறது? பாபா சந்திப்பதற்காவே வந்துள்ளார். குழந்தைகளும் சந்திப்பதற்காகவே வந்துள்ளனர். இந்த மாதிரி ஒரு பாக்கியம் சாகார ரூபத்தில் இந்த ஒரு வாய்ப்பு கிடைக்குமா? இது டிரமாவில் உள்ளது. நிச்சயிக்கப் பட்டுள்ளது. இதைப் பார்த்து ஒவ்வொரும் எவ்வளவு குஷி அடைகின்றார்கள்.

இப்பொழுது பாபாவின் மனதில் ஒவ்வொரு குழந்தையும் கூடவே இருக்கின்றார் என்பது மட்டும் உள்ளது. ஒவ்வொருவரின் மனமும் இதைத்தான் கூறுகின்றது. குழந்தைகள் ஒவ்வொருவரும் ஒரே பாபாவின் நினைவில் முழ்கி இருக்கின்றனர். அன்பில் மூழ்கி மூழ்கி அந்த அளவு சந்தோஷத்தின் அனுபவத்தை செய்து கொண்டிருக்கிறீர்கள், எவ்வளவு தான் அனுபவம் செய்து கொண்டிருந்தாலும் மனமானது நிறைவு பெறவில்லை. மனதிலும் ஒவ்வொரு நேரமும் இது தான் வெளிப்படுகிறது. இது போன்று தந்தை கிடைப்பாரா? கலியுகத்தில் இந்த மாதிரி ஒரு பொருள். எவ்வளவு பாக்கியம் செய்திருக்க வேண்டும் ஆனால் விஞ்ஞானிகளுக்கு நன்றி

சொல்ல வேண்டும். இந்த மாதிரி சந்திப்பதற்கான வழியைக் காண்பித்துள்ளார்கள். எதிரில் இல்லாவிட்டாலும் எதிரில் இருப்பதற்கான அனுபவத்தைக் கொடுக்கின்றது. சில குழந்தைகளின் அனுபவத்தை பார்த்தும், கேட்டும் பாபாவும் சந்தோஷம் அடைகின்றார். பாபா குழந்தைகளைப் பார்த்து சந்தோஷம் அடைகின்றார். பாபாவும் குழந்தைகளும் சந்திக்கும்போது சந்தோஷம் அடைகின்றார்கள். ஆகையினால் நீங்கள் அனுபவிகளாக மாறி விட்டீர்கள். மேலும் இந்த நிமித்தமாக உள்ள விஞ்ஞானிகளைப் பார்த்து பாப்தாதா மனதார பாடல் பாடுகின்றார், ஆஹா! ஆஹா! தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பானது தொடர்ந்து நடந்து கொண்டேயிருந்தால் எவ்வளவு நல்லதாக இருக்கும் ஆனால் டிராமாவில் இவ்வளவு தான் இருக்கிறது? ஆனாலும் கூட அறிவியல் சாதனமானது சந்திப்பினுடைய வழியையும் மிகவும் சகஜமாக்கி விட்டது. நேரடியாக பார்க்கவும் முடிகிறது, கேட்கவும் முடிகிறது. பாபா குழந்தைகளை எப்போதெல்லாம் பார்க்கின்றாரோ மிகவும் சந்ததோஷம் அடைகின்றார் ஆனால் கலியுகத்தில் சாதனங்களை மிகவும் நல்லதாக உருவாக்கியுள்ளார்கள். மேலும் எதிரிலேயே இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துகின்றது. எதுவாக இருந்தாலும் நேரடியான சந்திப்பின் உணர்வு இருக்க முடியாது. ஆனாலும் பாபாவின் முகம், கண்கள், பாவனை, சந்திப்பு, இது கூட இந்த சங்கம யுகத்தின் அதிசயமாகும். ஆகையினால் அனைத்து குழந்தைகளும் அதைப் பார்த்து சந்தோஷம் அடைகின்றீர்களா? இதைப் பார்த்து கூறிக் கொண்டிருக்கின்றார்கள். சந்தித்துக் கொண்டே மகிழ்ச்சி அடைகின்றார்கள். ஆகையினால் மதுபன் செல்ல வேண்டும். மதுபன் செல்ல வேண்டும் என்று முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். மேலும் பாபாவும் ஒவ்வொரு குழந்தைகளைப் பார்த்து எவ்வளவு குஷி அடைகின்றார்? முழு நாடகத்தில் இந்த ஒரு சந்திப்பானது மிகவும் விசித்திரமானது. எப்பொழுதெல்லாம் இந்தமாதிரி ஒரு நாள் கிடைக்குமா என்று குழந்தைகள் முயற்சி செய்கின்றார்களோ, அப்பொழுது நாம் அங்கு சென்று விடலாம் என்று முயற்சிக்கின்றனர் ஆனால் கலியுகம். கலியுகத்தில் அனைத்து சுகங்களையும் அடைய முடியாது. மனிதர்கள் என்ன விரும்புகின்றார்களோ அதை முழுவதும் அடைய முடியாது ஆனால் பாப்தாதா எப்பொழுது இதைக் கேட்கின்றாரோ இந்த ஒரு சந்திப்பானது நடக்கும் என்றால் உள்ளுக்குள் எவ்வளவு சந்தோஷம் ஏற்படும். குழந்தைகளுக்கும் ஏற்படுகின்றது.

பாபாாவிற்கும் ஏற்படுகிறது. ஒவ்வொருவரின் மனதிலும் பாபாவினுடைய நினைவு எப்பொழுதும் நிறைந்துள்ளதா? அல்லது கடினமாக உள்ளதா? பாபாவின் நினைவை மறப்பது என்பது கடினம் என்று நினைப்பவர்கள் கையை உயர்த்துங்கள். மறப்பது கடினம் தானே? சரி! அப்படியிருந்தால் நீங்கள் என்ன செய்கின்றீர்கள். உள்ளத்திலேயே (பாபாவை) நிரப்பி விடுகிறீர்களா? மேலும் சில குழந்தைகளைப் பார்க்கும் பொழுது அவ்வளவு மனதில் நினைவு வருகின்றது அமைதியாக இருக்கின்றார்கள். தனியாகவும் இருக்கின்றனர் ஆனால் யாருடனோ பேசிக் கொண்டிருப்பது போன்று இருக்கின்றனர். ஏனென்றால் இந்த சந்திப்பின் நாளானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனாலும் கூட அறிவியலார்களுக்கு நன்றி கூற வேண்டும் தானே! எந்த ஒரு சாதனங்கள் மூலம் பாபா முன்னால் வந்தாலும், சப்தங்கள் கேட்டாலும், எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. இதை பாப்தாதா கேட்கும் போது இந்த ஒரு சாதனம் கிடைத்ததன் வாயிலாக இந்த சாதனம் மூலம் கேட்கவும் முடிகிறது, பார்க்கவும் முடிகிறது. ஆகையால் பாபாவின் வாயிலிருந்து என்ன ஏற்படுகின்றது. ஆஹா! விஞ்ஞானி குழந்தைகளே ஆஹா! எப்பொழுது வேண்டுமானாலும் பாபாவைப் பார்க்கலாம். கேட்க வேண்டும் என்றாலும் கேட்கலாம் அந்த மாதிரி சாதனங்களை உருவாக்கியுள்ளனர், எவ்வாறு எதிரில் பாபா உட்கார்ந்து இருப்பது போன்ற சாதனங்களை உருவாக்கியுள்ளீர்கள் தானே! ஆனால் முதல் விசயம் உண்மையான விஷயம் என்னவென்றால், தனது மனதிலிருந்து வெளிப்படுகின்றது, சந்திக்கவும் முடிகிறது. இது கூட டிராமாவில் நிச்சயிக்கப்பட்டுள்ளது. ஆகையினால் பாபா அறிவியலார்களைக் கூட மிகவும் நினைவு படுத்துகின்றார். ஏனென்றால் மேலும் இன்னும் நெருக்கத்தில் மிக எளிதாக புதிதாகக் கொண்டு வாருங்கள். இதன் மூலம் குழந்தைகளும் குஷி, பாபாவும் குஷி அடைய வேண்டும். குழந்தைகள் எவ்வளவு யோகா செய்து இந்த விஞ்ஞானிகளின் பின்னால் இருந்து இந்த புதிய கண்டுபிடிப்புகளைக் கொண்டு வந்துள்ளனர். அதே போல் பாப்தாதா கூட மனதின் அன்பு நினைவுகளைப் பார்த்து ருக்க முடிவதில்லை. ஏதாவது ஒரு சாதனம் வெளிப்படுகின்றது, அதன் மூலமாக ஏழைகளும் பார்க்க முடியும், செல்வந்தர்களும் பார்க்க முடியும். எல்லாவற்றையும் விட சகஜமான சந்திப்பானது மனதின் சந்திப்பு. இதயத்தின் சந்திப்பு!

இன்று காலை எழுந்த உடனே எப்பொழுது பாபாவை சந்திக்கிறோமோ. அதுவரை மனம் என்ற கண்ணாடியில் என்னென்ன தென்பட்டது? அடிக்கடி இப்பொழுது செல்வோம். பாபா வருவார், பாபா முரளி கூறுவார், அந்த ஒரு நினைவு தாள் இருந்தது அலவா? ஆகையினால் விஞ்ஞானிகளுக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கின்றார். ஏனென்றால் .அந்த மாதிரி ஒரு புதிய கண்டுபிடிப்பை கண்டுபிடித்துள்ளார்கள், இது வரை வந்து விட்டோம். அதாவது நீங்கள் பாபாவின் முன்னால் உள்ளீர்கள், பாபா உங்கள் முன்னால் இருக்கின்றார். ஆனாலும் கூட இந்தளவு நடந்து விட்டது. தானே ஒரு சிறிய சந்திப்பு தாள் ஆனாலும் கூட சந்திப்பு அல்லவா! பாபாவும் நினைவு செய்கின்றார், குழந்தைகளும் நினைவு செய்கின்றார்கள் ஆனால் நிளைவின் பிரதிபலன் (ரெஸ்பான்ட் கிடைப்பது மூலமாக எவ்வளவு மகிழ்ச்சி அடைகின்றீர்கள். அளைவகும் நினைவு செய்கின்றார்கள், யாராவது இருப்பார்கள்தானே, அஞ்ஞானிகளாக இருந்தாலும், சிறிய குழந்தைகள் என்று தான் கூறுவார்கள். இன்று புகைப்படத்தைப் பார்த்து பாபா எப்படி முரளி சொல்கின்றார்கள் என்று பார்ப்பார்கள். இது தான் உள்ளத்தினுடைய ஈடுபாடு. பாபா பாபா என்ற சப்தத்தைக் கேட்டாலும் பார்த்தாலும் பாபா, பாபா, பாபா! பாபா குழந்தைகளிடத்திலும், குழந்தைகள் பாபாவின் மனதிலும் நிரம்பி விடுகின்றார்கள். மேலும் குழந்தைகளும் முயற்சி செய்து பார்க்கின்றார்கள், குழந்தைகளின் முயற்சியைப் பார்த்து எங்கெங்கு, எப்படியெல்லாம் வந்து அடைந்து விட்டார்கள். இது பாபா மற்றும் குழந்தைகளின் சந்திப்பு, அல்லது ஆத்மா பரமாத்மா சந்திப்பு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது. குழந்தைகள் மனதில் பாபா மூழ்கியிருக்கின்றார். குழந்தைகள் கூட முயற்சி செய்து எங்கிருந்தெல்லாமோ வந்திருக்கிறார்கள். எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த முக்கியத்துவமான சத்திப்பின் சமயம் சங்கமயுகம் என்று கூறப்படுகிறது. இந்த யுகத்தின் மகிமையைப் பாடும் பொழுது எவ்வளவு கண்களில் ஆனந்த கண்ணீர் நிரம்பி வழிகிறது. பாபா பரீட்சை கொடுப்பார். இப்பொழுது திடீரென அந்த பரீட்சை வரும். முழு நாளில் எவ்வளவு நேரம் நினைவு செய்தீர்கள். ஏனென்றால் மிகவும் அன்பானவர்கள். இதைத் தான் அனைவரும் கூறுகின்றீர்கள். இதை செய்யுங்கள், இதை செய்யுங்கள் எல்லாம் சரி தான், அனைவரின் மனதில் அன்பு இருக்கிறது ஆனால் எவ்வளவு நேரம் ஒதுக்கி பாபாவின் நினைவில் இருந்தீர்கள், எவ்வாறு இருக்கின்றீர்கள், இந்த

ஒவ்வொருவரின் வரலாறும் உங்களுக்கும் தெரியும். பாபாவிற்கும் தெரியும். அனைத்து குழந்தைகளும் நன்றாக இருக்கின்றீர்களா? யாருடைய உடல் நலமாக உள்ளதோ அவர்கள் கை தூக்குங்கள். அனைவரின் கையைப் பார்ப்பது எவ்வளவு நன்றாக இருக்கிறது. எப்பொழுது ஹால் நிரம்பி வழிகின்றதோ இந்த காட்சியானது மிகவும் நன்றாக உள்ளது. அனைத்திலும் முக்கியமானது மனதின் அன்பு. மனதில் பாபா. பாபா என்ற நினைவு தான் இருக்க வேண்டும், நடந்தாலும், அங்கு இங்கு சென்றாலும், எதைச் செய்தாலும் பாபாவின் நினைவு தான். ஆகையினால் பாபாவின் மனதிலும், குழந்தைகள் மனதிலும் நினைவு இல்லாமல் இருக்க முடியவில்லை. ஆகையினால் டிராமாவில் சந்திப்பின் சாதனம் மிக நன்றாக உள்ளது. விஞ்ஞானம் இந்த சமயத்தில் சந்திப்பதற்கான இந்த நல்ல வழியைக் காண்பித்துள்ளது. சிறிய கேசட்டில் பதிவு செய்து எப்பொழுது வேண்டுமனாலும் பாபாவின் வார்த்தைகளைக் கேட்கலாம். ஆகையினால் பாபா கூறுகின்றார். கேட்பதற்கும். பார்ப்பதற்காவும் உள்ள அதிசயத்தை விஞ்ஞானம் உருவாக்கியுள்ளது? ஆனால் பாபா சதா கூறுகின்றார். இவையெல்லாம் அல்ப காலத்திற்கான சாதனங்கள் ஆனால் எப்பொழுதுமே உங்கள் கூடவே இருப்பது அந்த மனம் தான். உள்ளத்தில் பாபாவை நினைவு செய்யுங்கள். மேலும் பாபாவின் நினைவு வெளிப்பட வேண்டும். இந்த ஒரு பயிற்சி மிகவும் அவசியம். நல்லது. இப்பொழுது எங்கிருந்து வந்துள்ளார்கள்.

சேவையின் வாய்ப்பு கிழக்கு மண்டலம் (பீஹார், அசாம், பெங்கால், ஒரிசா, நேபாளம் மற்றும் தமிழ்நாடு) 18-ஆயிரம் பேர் வந்துள்ளனர். மொத்தமாக 23-ஆயிரம் பேர் வந்துள்ளனர்: நல்லது. விஞ்ஞானிகள் கூட தன்னை குறை கூறாத அளவிற்கு எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு செய்துள்ளார்கள் ஆனால் அனைத்தையும் விட மிக சகஜமானது நினைவு செய்வதற்கான வழி தான் ஆனால் அனைத்தையும் விட சகஜமான வழியானது எந்த ஒரு சாதனமும் இல்லாமல் பாபாவின் நினைவானது உள்ளத்தில் வரவேண்டும். அதை வெளியில் எடுக்க வேண்டும் என்று நினைத்தாலும் அதை வெளியே எடுக்க முடியாது. சாதனங்கள் அவ்வளவு இருக்கின்றன. இது விஞ்ஞானத்தின் அதிசயம். மேலும் இந்த சமயத்தில் அறிவியலாரின் சாதனமானது உருவாக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் உலகில்

எங்கிருந்தாலும் சரி, உள்நாட்டிலிருந்தாலும், வெளிநாட்டிலிருந்தாலும், அனைவருமே சாதனங்கள் மூலமாக பாபாவை சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். பாபா மட்டும் கூட இல்லை, ஆனால் சாதனம் என்ன உள்ளதோ அதுவும் கூட கிடைக்கின்றது. பாபாவை சந்திப்பதற்கான விஞ்ஞானத்தின் சாதனம் எவ்வளவு உள்ளது. இந்த சங்கமயுகத்தில் பாபா மற்றும் குழந்தைகளின் சந்திப்பின் சாதனம் குறைந்தது கிடையாது. ஆகையினால் விஞ்ஞானத் திற்கும் கூறுகின்றோம் நாங்கள் சந்திப்பதற்கு இந்த சாதனம் நிமித்தமாக உருவாக்கப்பட்டுள்ளது. பணம் மிகவும் அவசியம். தூரத்தில் இருந்தாலும் பாபாவை சந்திக்க முடிகின்றது. எப்படியானாலும் ஏதாவது செய்து பணத்தை ஒன்று சேர்த்து என்ன செய்தாவது சந்திக்க வைத்து விடுகின்றனர்.

**இரட்டை வெளிநாட்டினர் 60-நாடுகளிலிருந்து 700-சகோதர சகோதரிகள் வந்துள்ளனர்:** இங்கிருந்தோ. அங்கிருந்தோ எல்லோரும் சேர்ந்து எப்படியோ இங்கு வந்து விட்டீர்கள் மிகவும் நல்லது. பாப்தாதாவிற்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்படுகிகின்றது. ஏனென்றால் குழந்தைகள் எவ்வாறெல்லாம் பணத்தை சேமித்து ஒன்று அவர்களுடைய அற்புதம் மிகவும் நன்றாக உள்ளது. எவ்வாறு பணத்தை சேமிக்கிறார்கள் என்று பாபா கேள்விப்பட்டுள்ளார். இரண்டாவது மனதில் ஆர்வம் எவ்வளவு உள்ளது. மேலும் ஆர்வத்தின் கூடவே சாதனங்களையும் எவ்வாறு சேர்க்கின்றனர். இது எல்லாம் மிகவும் அதிசயம். ஏனென்றால் முதலில் டிக்கெட் வேண்டும் ஆனால் பாபா பார்க்கின்றார், குழந்தைகளின் மனதில் பாபா, பாபாவின் மனதில் குழந்தைகள். நாள் முழுவதும் நினைவு செய்து கொண்டே இருக்கின்றார்கள், எப்பொழுது நாம் சந்திப்போம். எப்பொழுது நடக்கும் என்று. குழந்தைகளுக்கு பாபாவிடம், பாபாவிற்கு குழந்தைகளிடம் மிகவும் உளப்பூர்வமான அன்பு உள்ளது. அந்த நாள் எப்பொழுது வரும் என்று நினைத்து நினைத்து அது எப்பொழுது ஆரம்பமாகும். இது தான் நினைவில் உள்ளது. அனைவரும் நன்றாக இருக்கின்றீர்களா? அனைவரின் உடல் நிலையும் நன்றாக உள்ளதா? பாபாவும் குழந்தைகளைப் பார்த்து சந்தோஷம் அடைகின்றார். எவ்வளவு குழந்தைகள் அதிகமாக உள்ளனரோ அவ்வளவு பாபாவிற்கும் சந்தோஷம். அனைவருக்கும் மிகமிக உளப்பூர்வமான அன்பு நினைவுகள் இருக்கின்றன. ஏனென்றால்

உள்ளத்தில் நிரம்பியிருப்பது யார்? முக்கியமாக இந்த சமயத்தில் இங்கு முரளி நடக்கின்ற போது அதே சமயத்தில் தன்னுடைய வீட்டிலும் கூட முரளியின் நேரத்தை எப்பொழுது சீசன் ஆரம்பிக்கின்றதோ அப்பொழுதெல்லாம் நினைவில் வைத்துக் கொண்டு நேரத்தை ஒதுக்குகின்றார்கள். இதைப் பார்த்து பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகின்றார். குழந்தைகளின் மனதில் முரளிக்கான அன்பு எவ்வளவு உள்ளது. இது பொக்கிஷம் தானே! ஆகையினால் எப்பேற்பட்ட சூழ்நிலையிலும் முரளி கேட்பதற்காக வந்து விடுகின்றார்கள். இங்கு கூட யார் மனதின் மூலமாக வந்து அடைந்து விட்டார்களோ அவர்கள் அனைவரையும் நேர் எதிரில் சந்தித்து விட்டோம். நேரடியாக சந்தித்து விட்டோம். இந்த மாதிரி சந்திப்பை எவ்வளவு முடியுமோ அவ்வளவு அதிகரிக்க வேண்டும். இந்த ஒரு முயற்சி செய்து இன்னும் முன்னேறிச் செல்லுங்கள். ஹால் நிரம்பியுள்ளது. பாபா குழந்தைகளைப் பார்த்து மிகவும் சந்தோசம் அடைகின்றார். யாரெல்லாம் வந்துள்ளனரோ அந்த ஒவ்வொரு குழந்தைகளுக்கும் பாபாவினுடைய இதயப் பூர்வமான அன்பு நினைவுகளுக்குப் பதிலாக அன்பு நினைவுகளைத் தருகின்றார்.

**தாதி ஜானகியிடம்:** முயற்சி நன்றாக செய்கின்றீர்கள். இயற்கையை விட நன்றாக முயற்சி செய்கின்றீர்கள். அனைவரும் உங்களைப் பார்த்து எவ்வளவு சந்தோஷம் அடைகின்றார்கள். இது நல்லது. எங்கு சென்றாலும் உடல் நிலை சரியாக உள்ளது. ஆனாலும் வயதிற்குத் தகுந்தாற்போல் சரியாக உள்ளது. நல்லது. (பெக்ரைன் இப்ராஹிம் சகோதரர் அன்பு நினைவுகளை பாப்தாதாவிற்கு தெரிவித்தார்.) நல்லது. ஒருவருக்கு ஒருவர் சகயோகியாக ஆகியுள்ளனர். மிகவும் நல்லது. மொத்தத்தில் இப்பொழுது சேவா நடந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது சரியான கவனம் உள்ளது. வெளிநாட்டினரின் சாயல் தேசத்தில் வந்துள்ளது. தேசத்தினுடையது வெளிநாட்டில் உள்ளது. ஒருவருக்கொருவர் உதவியாளர்களாகவும் இருக்கின்றார்கள்.

**மோகினி சகோதரியிடம்:** உடல் நிலை குறைவு கொஞ்சம் காணப்படுகிறது. ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். (உங்கள் மடியில்) அங்கு ஓய்வே தான். எப்பொழுதுமே சரியாக இருந்தால் சரியாகி விடும். நல்லது.

**ஈஷூ தாதியிடம்:** (என் உடல் நிலை சரியில்லை) பயப்பட வேண்டாம், பயப்படுவதன் காரணமாகத் தான் அந்த மாதிரி ஆகி விடுகிறது. எதைப் பற்றி நினைக்கின்றீர்களோ அது அதிகமாகி விடுகின்றது, ஆகையினால் இதை எண்ணுங்கள், என்னுடைய மருந்து வந்து விட்டது. பாபாவை நினைவு செய்தீர்கள் என்றால் நோய்க்கான மருந்தை ஒரு முறை எடுத்து விட்டேன் போதும். எந்த ஒரு மருந்தானாலும் அதை எந்த சமயத்தில் எடுக்கின்றீர்களோ அதை அந்த சமயம் இந்த மருந்தானது எனக்கு மிகவும் உதவி புரியும். சரி. மெது மெதுவாகத் தெரியும், ஆனால் கண்டிப்பாக வித்தியாசத்தை உணர்வீர்கள். இவரின் உடல் நிலை சரியில்லை என்று அனைவருக்கும் தெரியும். ஆகையால் அனைவரின் கவனமும் உங்களிடம் இருக்கும்.

**மூன்று மூத்த சகோதரர்களிடம்:** அனைவரும் குஷியாக இருக்கின்றீர்களா? சந்தோஷம் தானே! அனைவரும் நன்றாக சாப்பிடுகிறீர்கள் தானே! இதை சாப்பிட்டுக் கொண்டேயிருக்கலாம், சாப்பிடுங்கள், அருந்துங்கள், இது அவசியம் இல்லை டோலி சாப்பிடக் கூடாது, ஏனென்றால் எனது உடல் நிலை சரியில்லை. 'போக்' அனைவருக்கும் தானாகவே கிடைக்கின்றது. நோய்வாய்ப்பட்டாலும் 'போக்' அனைவருக்கும் கிடைக்கிறது ஆனால் அந்த மாதிரி கவலையற்றவர்களாக கவனக்குறைவாக இருக்கக்கூடாது. நல்லது. உங்களை கவனித்துக் கொள்ளுங்கள் ஆனால் அதிலே மூழ்கி விடாதீர்கள். ஒரு மத்யமான நிலையில் எவ்வாறு வேண்டுமோ அவ்வாறு. ஏனென்றால் இங்கு அநேகர் உள்ளனர். ஒருவருக்கு ஒருவர் மற்றொருவரைப் பார்த்து பிறருக்கும் ஆர்வம் வருகின்றது. (இப்பொழுது இன்னும் கூட்டம் அதிகமாகும்) சாதனம் தன்னுடையதாக்கிக் கொள்ளும். வந்தாலும் இங்கு தான் வருவார்கள், எங்கு செல்வார்கள், இங்கு தான் வருவார்கள். (இருப்பதற்கான சாதனத்தை அதிகரிக்க வேண்டும்) இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது அல்லவா? (அதிகமான குழந்தைகள் வெளியில் அமர்ந்துள்ளார்கள்). இதில் எந்த ஒரு கஷ்டமும் இல்லை தானே.

ரமேஷ் சகோதரர் பாபாவிடம் நீங்கள் வருவதன் நாட்களை (முறை) அதிகப்படுத்த வேண்டும் என்று கூறினார். அதைப் பின்னர் பார்த்துக் கொள்ளலாம். முதலில் இங்கு உள்ள சாதனங்கள் சரியாக இருக்க

வேண்டும். குழந்தைகள் இருக்கிறார்கள் என்றால் சாதனங்களை அதிகப்படுத்த வேண்டும். முரளி கேட்க வேண்டும் என்றால் அதற்குண்டான கட்டுமான வசதிகள் வேண்டும். சரியான வசதியில்லை என்றால் எவ்வாறு முரளி கேட்பார்கள். (மழையிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக ஹாலின் மேல் வேறு ஒரு கூரை போட்டுள்ளார்கள்) நல்லது. சாதனம் கண்டிப்பாக வேண்டும். இல்லையென்றால் முரளி நேரத்தில் மழைத் தண்ணீர் கீழே விழும். ஆகையால் அனைத்திற்கும் லிமிட் வேண்டும். சாதனங்கள் வேண்டும் ஆனால் சாதனத்தின் கவர்ச்சியில் செல்லக்கூடாது. இங்கு சாதனங்கள் இல்லாமல் நடக்க முடியாது. ஏனென்றால் மழை அவ்வாறு இருக்கின்றது. அதாவது ஞானத்தின் அடிப்படையில் பார்க்கும் பொழுது கூடுதலாக செல்ல வேண்டாம். சாதனங்களை கண்டிப்பாக உபயோகிக்க வேண்டும் ஆனால் குறிப்பிட்ட அளவிற்கு!

**வெளிநாட்டின் மூத்த சகோதரிகளிடம்:** நீங்கள் அனைவரும் உங்களின் சரீரத்திற்கு தகுந்தவாறு கவனித்துக் கொண்டிருக் கிறீர்கள். அந்த மாதிரி கிடையாது சரீரம் தானே! என்ன செய்வது! அனுபவித்துத் தானே ஆக வேண்டும், கணக்கு வழக்கை கண்டிப்பாக முடித்துத்தான் தீர வேண்டும். அவ்வாறு இல்லை. தன்னை முதலிலேயே கவனித்துக் கொள்ள வேண்டும். எப்பொழுது இந்த நோய் வருவதற்குக் காரணம் அடையாளம் இது தான் என்று தெரிந்து விடுகிறதோ அதற்கு மருந்து இது தான். இதைக் கூட நீங்கள் தெரிந்துள்ளீர்கள். ஆகையினால் முதலிலேயே எல்லாவற்றையும் ஏற்பாடு செய்ய வேண்டும். இப்பொழுது டாக்டர்கள் சிறியவர்கள், பெரியவர்கள் இருக்கின்றார்கள். ஆகையால் சரீரத்தை கவனித்துக் கொள்ளுங்கள். (பாபா புதிய வெப் சைட் ஆரம்பித்து வைக்கின்றார்) பாக்கி அனைத்தும் நன்றாக நடக்கிறது அல்லவா. நன்றாக நடக்கிறது. நல்லது. (நியூயார்க் மோகினி சகோதரி அனைவரின் அன்பு நினைவுகளைக் கூறினார்)

நினைவுகளை கண்டிப்பாகக் கொடுங்கள். அவர்களும் சந்தோஷம் அடைவார்கள் தானே. (தாதி ஜானகிக்காக) இவர்களையும் நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள்.

(பாபா நீங்கள் அடுத்த சீசனிலும் கண்டிப்பாக வர வேண்டும்). (நீலு சகோதரி கூறினார் -ரதத்தை சரியாக வைக்க வேண்டும். அதன் பின்னர் நிகழ்ச்சிகளைக் கொடுங்கள்): டிராமாவில் என்ன நடக்க வேண்டுமோ அது நடக்கும், ஆகையினால் நீங்கள் அனைவரும் உங்களது எண்ணங்களைக் கூறுங்கள், ஆனால் இது தான் நடக்க வேண்டும் என்று கூறாதீர்கள். இல்லையென்றால், பாபா வரும்போதுள்ள சேவை மண்டலத்தினர் சந்தோஷம் அடைவார்கள். வேறு எந்த ஒரு சேவை முறையில் வரவில்லையென்றால் அவர்களது சங்கல்பம் ஓடிக் கொண்டேயிருக்கும். ஆகையினால் இந்த மாதிரி நடக்க வேண்டும் என்று இதை விரும்பவில்லை. வெறும் ஒரு விசயம் மட்டும் கிடையாது, பல விசயங்கள் இருக்கின்றன. பாபா இதையெல்லாம் பார்த்து அதற்குத் தகுந்தாற்போல் தானாகவே செய்வார். ஏனென்றால் ஒருவரின் மனதில் மட்டும் இருந்தால், நானும் இருக்கிறேன் தானே! என்று அடுத்தவர் நினைப்பார். அனைவருமே முக்கியமானவர்கள். ஒவ்வொருவரினுடைய முறையிலும் 23-ஆயிரம் அல்லது 24-ஆயிரம் பேர் இருக்கின்றனர். (டி.வி. மூலமாக லட்சக்கணக்கான பேர் பார்க்கின்றனர். மண்டலம் வாரியாக இங்கு வருகிறார்கள். இந்த நிகழ்ச்சி மிக நன்றாக உள்ளது) வரட்டும். அவர்கள் வரலாம். (பாபா வர இருக்கும் தேசீய மீட்டிங்கிற்காக தங்களின் பிரேரணை தாருங்கள், ஏதாவது சேவை பாக்கி இருக்கிறது என்றால் அதை செய்யலாம்) நீங்களே தயார் செய்யுங்கள். (இந்த வருடத்தின் சேவைக்கான தலைப்பு என்ன வைப்பது) நீங்கள் உங்களுக்குள் மீட்டிங் வைத்து அதிலிருந்து நீங்கள் தீர்மானியுங்கள் பின்னர் பாபா அங்கீகரிப்பார். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 07.03.2016 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## சங்கமயுகத்தின் பாக்கியத்தை யார் அடைந்துள்ளாரோ அவர் மகான் யோகி ஆவார், இந்த யுகம் பரமாத்மாவின் பிறப்பு, பரமாத்ம சந்திப்பின் வைர யுகமாகும்! இதில் அலௌகீக சுகம், சாந்தி, மேலான பிறப்பு மற்றும் பாக்கியவான் குடும்பத்தின் பிராப்தியும் ஏற்படுகிறது! (சிவ ஜெயந்தி)

ஓம் சாந்தி. அனைவருடைய முகத்திலும் மிகவும் நன்றாக புன்சிரிக்கின்றனர். அனைவரும் மிகவும் குஷியில் தந்தையின் பிறந்த தினத்தை உற்சவமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். அனைவருடைய முகமும் மிகவும் சிநேகம் நிறைந்ததாகவும் மிக இனிமையான புன்சிரிப்புடன் தந்தையினுடைய பிறந்த நாளை மிகவும்

சிநேகத்துடன் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். தந்தை குழந்தைகள் கொண்டாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார், குழந்தைகள் தந்தை மற்றும் தனது தெய்வீக பிறந்த தினத்தை கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். நீங்கள் மற்றும் அக்கம்பக்கத்திலுள்ள அனைத்து குழந்தைகளும் பாபாவினுடைய பிறந்த தினத்தை. விசித்திரமான மகிழ்ச்சியை கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர் மேலும் அனைவரது உள்ளத்திலும் இந்த தெய்வீகப் பிறவியின் பிறந்த தினத்தின் குஷி, அனைவரது முகத்திலும் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. தந்தையும் குழந்தைகளின் இந்த அலௌகிக பிறவியின் முகத்தைப் பார்த்து, மிகவும் உள்ளபூர்வமாக பிறந்த தினத்தின் நினைவால் குஷி அடைந்துக் கொண்டிருக்கின்றனர். ஆஹா! ஒவ்வொரு குழந்தையும் பிறப்புரிமையைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றனர். அனைவருக்கும் இந்த அலௌக்க பிறவி எவ்வளவு அன்பானதாக இருக்கிறது. அது ஒவ்வொருவனுடைய முகத்திலும் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் இந்த பிறவியின் அதாவது அலௌகீக பிறவியில் மிகவும் குஷி உள்ளது. ஏனெனில் இந்த அலௌகீக பிறவி எவ்வளவு அன்பாகவும் பற்றற்றதாகவும் விளங்குகிறது. அனைவரும் இந்த ஒரு பிறவியின் தனது அலௌகீக பிறவியை உணர்ந்து தனது இந்த தெய்வீக பிறவியைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்துக் கொண்டிருக்கின்றனர். ஏனெனில், இந்த பிறவி சுயம் பிரம்மாபாபாவின் மூலம் பிரம்மா குமார் மற்றும் பிரம்மா குமாரியின் பெயரால் மிகவும் பிரசித்தமாய் உள்ளது. ஒவ்வொருவருக்கும் இந்த பிறவியினால் மிகுந்த மகிழ்ச்சி இருக்கிறது. ஆஹா, எனது இந்த அலௌகீக சுகம் நிறைந்த பிறவியே! மேலும் ஒவ்வொருவருடைய வாயிலிருந்தும் இந்த சிரேஷ்ட பிறவியின் மிகுந்த மகிழ்ச்சி முகத்தின் மூலம் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே தான் மகிமையும் செய்யப்படுகிறது. இந்த சங்கமயுக பிறவியில் பிரம்மாபாபா கொடுத்துள்ள உங்களது மற்றும் பாபாவின் இந்த பிறவி மிகவும் சிறியது ஆனால் பிராப்தியோ அனைத்து பிற ஜென்மங்களிலிருந்தும் வித்தியாசமாகவும் அன்பு நிறைந்தும் உள்ளது. ஒவ்வொரு குழந்தையும். தனது இந்த தெய்வீகப் பிறவி. அலௌகீக பிறவியின் மகிமையை மறக்க முடியாது ஏனெனில் இது சிறிய பிறவி ஆனால் இந்த விசேஷத்தைக் கொண்டுள்ளது. இந்த ஒரு சிறிய பிறவியில் அனைத்து பிறவிகளின் விஷயங்களையும் அறிந்து

கொள்கிறீர்கள். மேலும் இந்த ஒரு பிறவியில் தனது எதிர்காலத்தையும் அறிகிறீர்கள். எனவே சங்கமயுகம் வைரயுகம் என்று அழைக்கப்படுகிறது. பரமாத்ம சந்திப்பு, பரமாத்ம பிறவி இந்த சிறிய யுகத்தில் அனுபவம் ஏற்படுகிறது. அனைத்திலும் மிகச் சிறிய யுகம் ஆனால் பிராப்தியோ முழு கல்பத்தில் இந்த சங்கமயுக பிறவியில் தான் ஏற்படுகிறது. அலௌகீக சுகம். அலௌகீக சாந்தி, பிறவினுடைய சிரேஷ்டத் தன்மை மற்றும் குடும்பமும் மிகவும் பாக்கியம் வாய்ந்தது. ஆக இப்படிப்பட்ட பிறவி இந்த சங்கமயுகத்தின் ஒரே ஒரு பிறவி தான்! பாப்தாதாவும் சங்கமயுகத்தில் தான் குழந்தைகளைச் சந்திக்கிறார். அதுவும் நன்கு அறிதலோடு அலௌகீக தந்தை, அவரை பிரம்மாபாபா என்கின்றனர். அந்த தந்தை உங்கள் அனுபவத்தில் வருகிறார். இருப்பதோ சிறிய யுகம், ஆனால் அனைத்து பிறவிகளிலும் இந்த சங்கமயுகத்தின் காலம் மிக மிக பாக்கியம் நிறைந்ததாகும். மிகச்சிறிய யுகம் ஆனால் மிகவும் பிராப்தி நிறைந்த யுகம். இவ்வளவு பிராப்தி வேறு எந்த யுகத்திலும் இல்லை. கூடவே இந்த சங்கமயுகம் அப்படிப்பட்ட மகான் தன்மையுடையது. எல்லா யுகங்களிலும் மிக முக்கிய யுகம் இந்த சங்கமத்தின் யுகம் என்று பாடப்பட்டுள்ளது. மேலும் சங்கமயுகத்தில் முழு சக்கரத்தை அறியக்கூடிய பாக்கியமும் கிடைக்கிறது. முழு சக்கரத்தின் இரகசியம் என்னவோ அதுவும் இந்த சங்கமயுகத்தில் தான் கிடைக்கிறது.

ஆக, நீங்கள் அனைவரும் எந்த யுகத்தில் இருக்கிறீர்கள்? பதில் என்ன சொல்வீர்கள்? சங்கமயுகத்தில் தானே! சங்கமயுகத்தில் நாங்கள் இருக்கிறோம் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். பின்னால் இருப்பவர்கள் பார்ப்பதற்குத் தென்படவில்லை ஆனால் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். சங்கமயுகம் அனைத்து யுகங்களிலும் சிரேஷ்ட யுகம், மிகச் சிறிய யுகம் ஆனால் பாக்கியமோ மிகவும் பெரியது! சங்கமயுகத்தில் யார் பாக்கியத்தை அடைந்துள்ளார்களோ அவர்கள் மகான் யோகி என்று அழைக்கப்படுகின்றார்கள். இந்த மகான் யோகி வாழ்க்கை எவ்வளவு மகான் தன்மையுடையது. இந்த சங்கமயுகத்தின் பிராப்தியின் மூலம், அனைத்திலும் சிரேஷ்ட சத்யுகத்தின் பிறவிகளை பகவான் மூலம் நீங்கள் தெரிய வருகிறீர்கள். பகவான் தானே சுயம் சங்கமயுகத்தில் உங்களுக்குக் கிடைக்கிறார். முழு கல்பத்தில் அனைத்திலும் பாக்கியவான் யுகம் என்று கூறினால் அது சங்கமயுகமே

அப்படிப்பட்ட யுகத்தில் நீங்கள் பகவானுடைய தெய்வீகப் பிறவியை அடைந்துள்ளீர்கள். இன்று கூட எதைக் கொண்டாட வந்துள்ளீர்கள்? சங்கமயுகத்தின் எது பாக்கியம் நிறைந்த சமயமோ அதைக் அடைந்து கொண்டிருக்கிறீர்கள், அடைந்து கொண்டும் இருப்பீர்கள், சத்யுகத்தினுடைய தேவதைகள் மிகவும் சிரேஷ்டமாக இருக்கலாம் ஆனால் இந்த சங்கமயுகத்தில் அதை விட அதிகமான சமர்ப்பணம் (தியாகம்) உள்ளது. சங்கமயுகத்தில் தான் பகவானுக்கு அவரது சொந்த குழந்தைகள் கிடைக்கின்றனர். பாபாவினுடைய அன்பு வெளிப்படையாக இந்த சங்கமயுகப் பிறவியில் தான் கிடைக்கிறது. ஒவ்வொருவருடைய வாயிலிருந்தும் இந்த சொற்கள் தான் வெளிவருகின்றன. ஆஹா! சங்கமயுகத்தின் எவ்வளவு திவ்யமான பிறவி இது மேலும் பிறந்த தினத்தை நீங்களும் கொண்டாடுகிறீர்கள். மனதில் குஷியையும் அனுபவம் செய்கிறீர்கள். மகிழ்ச்சியோ மிக அதிகம் (பலரகம்) உண்டு ஆனால் சங்கமயுகத்தின் மகிழ்ச்சியோ, அதன் மகிமையின் பாடல்களோ சங்கமயுகத்தில் தான் கிடைக்கிறது. கூடவே சங்கமயுகத்தின் திவ்யமான பிராப்திகள். அதே போன்று வருமானமும் சங்கமயுகத்தில் மிக அதிகம் ஆனால் சங்கமயுகத்தின் மகான் தன்மையானது, அந்த பிராப்தியினுடைய பாக்கியம் ஆகியவை குறைந்த எண்ணிக்கையுள்ள குழந்தைகளாகிய உங்களுக்குக் கிடைத்துள்ளது. சங்கமயுகத்தில் முதல் பிராப்தி, மிகப் பெரிய பிராப்தி உங்களுடையதாகும். சுயம் பரமாத்மாவின் அவதாரம் சங்கமயுகத்தில் தான் ஏற்படுகிறது. சங்கமயுகத்தின் பிராமணர்களின் மகிமை மிகவும் சிரேஷ்டமானது. அதில் நீங்கள் இன்று அமர்ந்துள்ளீர்கள். இது சங்கமயுகத்தின் உன்னத பிராப்தியாகும். அனைவரும் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்துக் கொண்டிருக்கிறீர்கள். சங்கமயுகம் மற்றும் நீங்கள், பிராப்தியைப் பாருங்கள் எவ்வளவு உன்னதமான பிராப்தி, சங்கமயுகத்தில் தான் சுயம் பகவான் தானே வந்து முழு ஞானத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். எப்படி இப்பொழுது கொடுத்துக் கொண்டிருக்கிறாரோ, இதனைக் குறைவாக எண்ணாதீர்கள். நேரடியாக பகவான் சங்கமயுகத்தில் சாதாரண ரூபத்தில் பிரவேசமாகி கொடுத்துக் கொண்டிருக்கிறார். இந்த பாக்கியம் குறைவானது அல்ல! இந்த சங்கமயுகத்தின் ஒரு பிறவி மகான் பிறவியாகும். அனைத்து யுகங்களின் ஞானம் அனைத்து யுகங்களையும் விட சிரேஷ்டமான வருமானம், முழு கல்பத்தினுடைய ஞானம் அனைத்தும் இந்த

சங்கமயுகத்தில் தான் கிடைக்கிறது. சங்கமயுகத்தில் என்னென்ன கிடைக்கிறது என்னும் லிஸ்ட் உங்களிடம் இருக்கும். அது வேறு எந்த யுகத்திலும் கிடைக்காது. ஆக சங்கமயுகத்தின் பிராப்தி கிடைத்தது என்றால் முழு கல்பத்தின் என்ன பாக்கியமோ இந்த சிறிய யுகம் கிடைக்கச் செய்கிறது. ஆக. பாபா ஒவ்வொரு கல்பத்திலும் இந்த சங்கமயுகத்தின் பிராப்தியை செய்விக்கிறார். அதிலும் முக்கிய பிராப்தி என்ன? பிரம்மா குமார் மற்றும் பிரம்மா குமாரி இந்த பிறவி மிகவும் சிரேஷ்டமானது. முழு சுல்பத்தின் ஞானத்தை அடைகிறீர்கள். ஆக இந்த பாக்கியம் சங்கமயுகத்தில் மட்டுமே கிடைக்கிறது. பரமாத்மாவின் மூலம்! ஆக சொல்லுங்கள். நீங்கள் அனைவரும் சங்கமயுகத்தின் பாக்கியத்தை அறிந்துக் கொண்டு முன்னேறிச் செல்கிறீர்கள் இல்லையா! சங்கமயுகத்தின் மகிமை, இது சங்கமயுகத்தில் மட்டுமே கிடைக்கக் கூடியது. வேறு எந்த யுகத்திலும் கிடைக்க முடியாதது. ஆக பாப்தாதாவோடு சந்திக்க வந்துள்ளீர்கள். இந்த பாக்கியம் கூட சங்கமத்தில் தான் கிடைக்கிறது. இந்த சந்திப்பு சாதாரணமானது அல்ல. மிகவும் உன்னத சந்திப்பு நல்லது!

பாபாவினுடைய பிறந்த நாளின் நினைவை நன்றாக வைத்துள்ளீர்கள். யார் நேரடியாக வருகிறார்களோ அவர்கள் வரத்தான் செய்கிறார்கள் ஆனால் இந்த பிராப்தியின் மதிப்பு மிகவும் மேலானது. பாப்தாதாவும் தினமும் இப்படிப்பட்ட குழந்தைகளைப் பார்த்து குஷி அடைகின்றார். ஆஹா! ஒவ்வொரு கல்பத்தின் பாக்கியவான் குழந்தைகளே ஆஹா! சுயம் பகவானும் சங்கமயுகத்தின் மகிமையைப் பாராட்டுகிறார். எவ்வளவு சிரேஷ்டமான பாக்கியம் இது. கல்பத்தில் ஒரே ஒரு முறை தான் பரமாத்மாவின் மூலம் கிடைக்கிறது. கிடைத்துள்ளது அல்லவா! யாருக்கு கிடைத்துள்ளதோ அவர்கள் கையை உயர்த்துங்கள்! ஆக இந்த பாக்கியம் சாதாரண பாக்கியம் அல்ல வரிசைக்கிரமமாக உள்ளது என்பதோ உண்மை தான், ஆனால் இந்த சங்கமயுகத்தின் பாக்கியம் முழு கல்பத்தில் முதல் நம்பர் ஆகும். நல்லது. தற்போதோ நேரம் அதிகமாகி விட்டது!

**சேவை முறை -குஜராத் மண்டலத்தினுடையது, 14000-பேர் வந்துள்ளனர். மொத்தம் 22000-வந்துள்ளனர்**: குஜராத்காரர்கள் சரியாக வருகிறார்கள்! நல்லது சங்கமயுகத்தின் பாக்கியத்தை குஜராத்

எடுத்துள்ளது. மேலும் விதவிதமான பாக்கியங்களை பல்வேறு நாட்டினரும் எடுத்துள்ளனர். பாதி பேர் குஜராத்காரர்கள் உள்ளனர். நல்லது சொல்லுங்கள் குஜராத்திலிருந்து யாருடையது அதிக எண்ணிக்கை? குஜராத் தம்மைப் போன்று பிறரையும் ஆக்க வேண்டும் நல்லது, குஜராத் எப்படி முன் வரிசை நம்பரை எடுத்துள்ளதோ அதே போன்று பிறரும் எடுக்க முடியும். இரண்டாவது நம்பராக கூட இருக்கலாம், ஆனாலும் இரண்டாவது நம்பரில் வந்து விடுகிறீர்கள்! ஆக பாப்தாதாவும் குஜராத்திற்குக் கூறுகிறார், நன்கு முயற்சி செய்கிறீர்கள் மேற்கொண்டும் செய்வீர்கள்!

**இரட்டை வெளிநாட்டினர் 100-நாடுகளிலிருந்து 1200-சகோதர சகோதரிகள் வந்துள்ளனர்:** நல்லது கணக்குப்படி பார்த்தால் 1200-நல்ல நம்பர். சாகார பாபா இருந்த போது அடிக்கடி கூறுவார். யாராக இருந்தாலும் சரி, எந்த மண்டலமாக இருந்தாலும் சரி, அவர்கள் அப்படியே கை உயர்த்திக் கொண்டே செல்லுங்கள். நிறைய பேர் வருகிறார்கள் ஆனால் (ஞானத்தில்) சென்று கொண்டிருக்கிறார்கள். மேலும் சேவாதாரிகளும் இருக்கிறார்கள். நல்ல பெயரும் நன்றாக எடுத்துள்ளீர்கள். ஆக இந்த ரிசல்ட் சொல்கிறது. நன்கு முயற்சி செய்து முன்னேறியிருக்கிறார்கள், முன்னேற்றவும் செய்கிறார்கள். ஒவ்வொருவரும் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு முன்னேறிச் செல்ல முடியும்.

**குஜராத்** வளர்ச்சியடைவதில் இதுவரை முதல் வரிசையில் இருப்பது தெரிகிறது. நல்லது. ஆக நன்கு வளர்ச்சியடைவது என்றால் பிராமணர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது. எவ்வளவு வளர்ச்சியாகுமோ அவ்வளவு சீக்கிரமாக சத்யுகமும் வரும். இது பாபாவுக்கு பிடித்துள்ளது! எப்படி குஜராத் முதல் நம்பரில் இருக்கிறதோ, அதையும் தாண்டிச் (பிறர்) செல்வதற்கு புதியவைகளைக் கண்டுபிடியுங்கள். இவ்வாறு முன் நம்பரில் வர முடியும் தானே? இதில் யாரும் யாரையும் தடுக்க முடியாது ஆனால் வளர்ச்சி என்பது நிச்சயம் வேண்டும். ஏனெனில் முழு உலகத்தினுடைய கணக்கைப் போட்டு பார்த்தால் நமது கணக்கில் அவ்வளவு அதிகமில்லை. குஜராத் இப்பொழுது எவ்வளவு முன்னேறிச் சென்றுள்ளதோ அதைவிட அதிகம் செல்ல முடியும். நன்கு முயற்சி செய்து தன்னை முன்னேற்றிக்

கொண்டுள்ளது அவ்வாறு ஒவ்வொரு மண்டலமும் இதே போன்று முயற்சி எடுத்து, வளர்ச்சி செய்து வருகின்றன. அதை மேலும் அதிகரிக்க முடியும். மிகவும் முன்னால் நம்பரில் வாருங்கள். இது முடியும் தானே! அவ்வாறு குஜராத்தை தாண்டிச் செல்ல முடியாது என்று நினைப்பவர்கள் கையை உயர்த்துங்கள். ஆக இப்பொழுது முன்னேற்றத்தை (வளர்ச்சியை) அதிகரியுங்கள்.

தாதி ஜானகியுடன்: மிகவும் அதிகமாக முயற்சி அதிகம் செய்கிறீர்கள். இவரது இலட்சியம் குஜராத்தை முன்னால் கொண்டு சென்று காண்பிக்க வேண்டும் ஆனால் யார் வேண்டுமானாலும் செய்யட்டும் உற்சாகம் அனைவரிடமும் உள்ளது. நாம் முன்னேறி முதல் நம்பரில் வருவோமென்று அனைவருமஎண்ணுகின்றனர். நல்லது

ஈஷூ தாதியின் நினைவை கொடுத்தார். அவர் அஹமதாபாத்திற்கு பரிசோதனைக்காகச் சென்றுள்ளார்: அவ்வப்போது இவருக்கு ஏதோ நடந்து விடுகிறது. அதிக காலத்திற்கல்ல. விரைவில் சரியாகி விடுகிறது.

மூன்று முக்கிய சகோதரர்களும் பாப்தாதாவிற்கு பிறந்த நாள் விழாவின் வாழ்த்துக்களைக் கூறி பூச்செண்டுகளை வழங்குகின்றனர்)

நல்லது! அனைவரும் (மதுபனில் சமர்ப்பணமானோர்) நன்றாகச் செல்கின்றனரா? உற்சாகம் ஆர்வத்தில் முன்னேறிச் செல்கின்றனரா? யாராவது ஒரு கடமையாக எடுத்துக் கொள்ளுங்கள், இவ்வளவு மகாரதிகள் இருக்கின்றீர்களே! எவரேனும் இடையிடையே அனைவரது (புருஷார்த்த) ரிசல்ட்டைக் கேளுங்கள். ரிசல்ட்டை கேட்கும்பொழுது தான் அனைத்து விஷயங்களும் தெரிய வருகின்றன. புருஷார்த்தம் என்னவோ அனைவரும் செய்து வருகின்றனர். இதில் பாபா பார்த்தார். அநேகரிடம் உற்சாகம் உள்ளது ஆனால் அவர்களுக்கு சற்று சக்தி தேவை. அதன் மூலம் அவர்கள் முன்னேறிச் செல்ல முடியும். அதுவும் நடந்தேறிவிடும்! மற்றபடி அனைத்தும் சரியாகச் செல்கிறது தானே! ஏதேனும் கொஞ்சம் (சுகவீனம்) இருந்தால் அது பருவ நிலை பாதிப்பாகும். மற்றபடி எல்லோரும் நலம் தானே? மாத்திரை மருந்து தேவையில்லையே? ஒவ்வொருவரும் முயற்சி செய்து

கொண்டிருக்கின்றனர். மேலும் பாப்தாதா பார்த்தார். புருஷார்த்தத்தின் பிறகு கொஞ்சம் நன்றாகச் செல்கிறது ஆனால் சற்று அதிக நேரம் எடுத்துக் கொள்கிறது. பிறகு வேறு பக்கம் செல்கிறது. இதற்கு, வகுப்பு எடுக்கக் கூடியவர்கள் பலர் இருக்கிறார்கள் இல்லையா? ஆக எல்லோரும் சேர்ந்து அதற்கு ஒருவரை தீர்மானியுங்கள், மாதத்தில் ஒருமுறை அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை உங்களுக்குள் கூடி ரிசல்ட்டை பாருங்கள்.

பாப்தாதா **80**வது சிவஜெயந்தியின் கொடியேற்றி வைத்து அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்! சிவஜெயந்தி நாளன்று முதலில் தந்தையின் நினைவு வருகிறது. சிவபாபா மற்றும் பிரம்மாபாபா! அடுத்து அனைத்து பெரிய தாதிகளின் நினைவு வருகிறது. இந்த முழு சபையில் யாரெல்லாம் இருக்கிறீர்களோ அனைவருக்கும் பிறந்த நாளின் நல்வாழ்த்துக்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 31.03.2016 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## ஒவ்வொரு குழந்தைகளின் உள்ளத்தின் அன்பு, அந்த நிலையானது அந்த ரூபத்தின் மூலமாக (முகத்தின் மூலம்) தென்படுகின்றது, ஒவ்வொருவரும் விதவிதமான சம்மந்தத்தின் அன்போடு சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள், சந்தித்துக் கொண்டிருப்பார்கள்!

ஓம் சாந்தி! இந்த உயிரோட்டமுள்ள (சைத்தன்ய) தீபங்களின் கூட்டத்தைப் பார்த்து பாப்தாதா மிகவும் சந்தோஷம் அடைகின்றார். எங்கெங்கிருந்தோ ஒவ்வொரு தீடங்களும் தீப ராஜாவைச் சந்திப்பதற்கு வந்துள்ளனர். தீப ராஜா எவ்வளவு பெரிய தீபங்களின் கூட்டத்தைப் பார்த்து குஷி அடைகின்றார். ஆஹா தீபமே ஆஹா! ஒவ்வொருவரையும் பார்த்து பார்த்து புன்முறுவல் அடைகின்றார். ஏனென்றால் இந்த சந்திப்பானது, ஒருவருக்கொருவர் சந்திப்பது மேலும் எவ்வளவு காலத்திற்குப் பிறகு சந்திக்கிறோம். ஆகையினால் இந்த சந்திப்பானது, இந்த சந்திப்பிற்கு மிகவும் உயர்ந்த மதிப்புள்ளது. நாம் ஒருவருக்கொருவர் சந்திக்கின்றோம். பேசுகின்றோம். முரளி கேட்கின்றோம், சாப்பாடு சாப்பிடுகின்றோம், ஆன்மீக உரையாடல் செய்கின்றோம் ஆனால் இந்த சந்திப்பானது எவ்வளவு அன்பாக இருக்கின்றது. ஏனென்றால் கூட்டத்தோடு நடந்தாலும், சுற்றினாலும் தீப ராஜா மற்றும் தீப ராஜாவினுடைய குழந்தைகள், இருவரும் ஒருவரையொருவர் சந்திப்பதாகும். குழந்தைகள் கூறுகின்றார்கள் பாபா, ஓ! பாபா மேலும் பாபா கூறுகின்றார் ஆம் குழந்தாய் இனிமையான குழந்தாய் இன்று பாபா உங்களுக்காகவே வந்துள்ளார்.

ஆகையினால் இதன் பெயரை 'தீபாவளி' என்று வைத்துள்ளார்கள். தீபங்களைச் சந்திப்பதற்கு. ஒவ்வொரு தீபத்தையும் நீங்கள் சமயம் எடுத்து மிகவும் கவனமாக உட்கார்ந்து பார்த்தீர்கள் என்றால், ஒவ்வொருவருடைய முகத்தின் வாயிலாகவும் எவ்வளவு இனிமையிலும் இனிமையான விஷயங்கள் மனதில் வருகின்றன. ஒவ்வொருவரின் முகமும் மனதின் அநேகவிதமான விஷயங்களை இப்பொழுது இந்த சமயத்தில் மனதில் என்ன உள்ளதோ அது சிலருக்கு எழுதியது போல் தெரிகின்றது. ஏனென்றால் பாபா எதிரில் காணப்படுகின்றார், அந்த சமயமானது மிகவும் குறைவாக கிடைக்கின்றது. வெளி நாட்டவராக இருந்தாலும் சரி. இந்தியாவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, ஆனால் பாபாவினுடைய மனதில் குழந்தைகள்! குழந்தைகளின் மனதில் பாபா! இந்த சந்திப்பை மிகவும் அன்பான சொரூபத்தில் பார்க்க வேண்டும் என்றால் மதுபனில் பாருங்கள். இப்பொழுது ஒவ்வொருவரின் மனதில் யார் உள்ளார்? பாபாவின் மனதில் குழந்தைகள், குழந்தைகளின் மனதில் பாபா! இது எவ்வளவு அழகான சந்திப்பு: பார்க்கும்பொழுது ஒவ்வொரு குழந்தையும் வாயால் தனக்குள்ளேயே என்ன விஷயங்களைப் பேசிக் கொண்டிருக்கின்றார்களோ அது பதிவாகிக் கொண்டிருக்கின்றது ஆனால் இப்பொழுது அவர்களுடைய மூகத்தில் அந்த பதிவானது தெளிவான ரூபத்தில் வெளிவருகிறது. மேலும் சந்திப்பும் நடந்துக் கொண்டிருக்கின்றது. இப்பொழுது எல்லோரும் ஒருமித்து ஒரே நேரத்தில் இவ்வளவு பேரோடு சந்திப்பு நடந்துக் கொண்டிருக்கிறது, ஆனால் இந்த மனதின் சந்திப்பு பாபா மற்றும் குழந்தைகளின் ரூபத்தில், துணைவரின் ரூபத்தில், தோழன், தோழியின் ரூபத்தில் எவ்வளவு அன்பாக இருக்கின்றது. உங்களுடைய பாடல் இருக்கிறது அல்லவா! நீங்கள் தான் தாயும், நீங்களே தந்தையுமாக... எல்லாமே அனைத்தும்! ஆகையினால் நீங்கள் இங்கு வந்து பாருங்கள். எந்த சமயத்தில் ஒவ்வொரு குழந்தைகளின் மனதில் இந்த நினைவின் சொரூபம் வந்துள்ளது, நீங்கள் யோசித்துப் பாருங்கள், எப்பொழுது ஒவ்வொருவரின் முகத்தில் சந்திப்பின் ரூபம் வருகின்றதோ அப்பொழுது எவ்வளவு அன்பாகத் தென்படுகின்றது. எப்படி யிருந்தாலும் ஒவ்வொருவரின் மனதிலும், நடக்கும்பொழுதும், போகும்பொழுதும் வரும்பொழுதும் காரியங்கள் செய்து கொண்டிருக்கும்பொழுதும் மனதை கொள்ளைக் கொள்பவர் மனதில் தென்படுகின்றார் ஆனால்

இந்த சந்திப்பானது மிகவும், குறைந்த நேரத்திற்குத் தான் சந்திக்க முடிகின்றது. ஆனாலும் எவ்வளவு அன்பாக இருக்கின்றது! ஒவ்வொருவரின் மனதிலும் விசேஷமாக இது தான் இருக்கின்றது மேரா பாபா (என்னுடைய தந்தை), ஆஹா பாபா, ஆஹா! தன்னுடைய ஒவ்வொரு குழந்தைக்கும் தன்னுடைய மனதில் இடத்தை ஒதுக்கி விட்டார். ஒவ்வொருவரின் மனதில் பாருங்கள். இந்த மாதிரி மனதினுடைய வரைப்படத்தை வரைபவராக இருந்தால் அதில் மிகுந்த அதிசயம் தென்படும். சிலர் எந்த ரூபத்தில் இருக்கின்றனர், சிலர் வேறு ரூபத்தில். ஆனால் ஒருவரை மட்டும் தான் நினைவு செய்து கொண்டிருக்கின்றனர்.

இந்த சபையானது சிறியதாக இருக்கின்றது ஆனால் இந்த சமயம் இங்கிருந்தாலும் சரி. சென்டர்களில் இருந்தாலும் சரி. அனைத்துக் குழந்தைகளின் மனதிலும் யார் தென்படுகின்றார்? கூடுதலாக. இப்பொழுது ஒவ்வொருவரின் முகத்தையும் போட்டோ எடுத்தால் எவ்வளவு சந்தோஷமான மனதாக இருக்கும். பாபா மற்றும் குழந்தைகளினுடைய இந்த சந்திப்பானது மனதிற்கு ஆறுதலைத் தரக்கூடியதாக உள்ளது. யாரிடம் வேண்டுமானாலும் கேட்டால் உங்களுடைய மனதில் யார் இருக்கின்றார்? என்ன கூறுவீர்கள்? என்னுடைய பாபா! இனிமையான பாபா! என்னுடைய மனதிற்கு அன்பானவர். மேலும் ஒவ்வொருவரின் முகத்தையும் போட்டோ எடுத்தால் முகத்தில் வித்தியாசம் இருக்கின்றது. ஒவ்வொருவரின் மனதின் வார்த்தைகளின் வாயிலாக, ஒவ்வொருவரின் மனதும் கூறுகின்றது. அது என்ன கூறுகின்றது? அனைவருடைய பாவனையும் ஒன்றாகத்தான் இருக்கின்றது, ஆனால் விதவிதமான வார்த்தைகளைக் கூறுகின்றனர். அனைவரின் உள்ளத்தின் வார்த்தையும் ஒன்றாகத்தான் உள்ளது. மனதின் ராஜா வந்து விட்டார். ஒவ்வொருவரின் மனதையும் பாருங்கள். அந்த மாதிரி ஒரு போட்டோகிராபர் இதுவரைக்கும் போட்டோ எடுக்கவில்லை, ஆனால் பாபாவின் மனதில் ஒவ்வொரு குழந்தைகளும் எவ்வாறு மூழ்கியிருக் கின்றனர். அந்த காட்சியை நீங்கள் பார்த்தீர்கள் என்றால், பார்த்துக் கொண்டேயிருப்பீர்கள். ஏனென்றால் இந்த சமயம் மனதின் உள்ளே உள்ள வரைப்படம் அனைவருக்கும் பிரத்யட்ச சொரூபத்தில் இருக்கின்றது. ஒவ்வொருவரும் அந்த ரூபத்தில் மனதில் இருக்கின்றார்கள். அது

பார்ப்பதற்குத் தென்பட்டால் மிகவும் ஆச்சரியமடைவீர்கள், சிலர் எந்த ரூபத்தில், சிலர் வேறு ரூபத்தில் எந்த சமயத்தில், விதவிதமான பாவனையில் சந்திப்பை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அது பார்ப்பதற்கு யோக்கியமாக இருக்கின்றது. அங்கு தான் ஒவ்வொரு குழந்தைகளின் ரூபத்தில் தென்படுகிறது. இரண்டாவது தாய் தந்தையினுடைய ரூபத்தில். துணைவனின் ரூபத்தில், விதவிதமான ரூபத்தில் மேலும் ஒவ்வொருவரும் தன்னுடைய ரூபத்தின் போதையில் மிதந்துக் கொண்டிருக்கின்றார்கள். சிலர் என்னுடைய தந்தை என்று கூறுகின்றார்கள். அவ்வாறு இருந்தால் சிலர் என்னுடைய மனதின் மாலையாகும். விதவிதமான ரூபத்தில், விதவிதமான சம்மந்தத்தின் அன்பிற்குப் பாத்திரமானவர்களாக இருக்கின்றார்கள். அது ஒவ்வொருவரின் முகத்திலும் பிரத்யட்சமாகத் தென்படுகின்றது. அப்படியிருந்தால் நீங்கள் சிந்தனை செய்து பாருங்கள். ஒவ்வொருவரின் மனதின் போட்டோவை வெளிப்படையாக பாப்தாதா பார்ப்பதால் எவ்வளவு நன்றாக இருக்கிறது. இந்த சாதாரண ரூபத்தில் இல்லை ஆனால் இந்த சாதாரண ரூபத்திலும், மனதில் எந்த ரூபத்தில் நினைவு செய்து கொண்டிருக்கின்றார்கள், அந்த ரூபமானது தென்படுகின்றது. கூறுங்கள் எவ்வளவு நன்றாக இருக்கும். மனதினுடைய போட்டோ, இந்த முகமானது தென்படுவதே கிடையாது.

பாப்தாதா அவ்வப்பொழுது சாகார ரூபத்தில் வெளிப்படுகின்றார், வகுப்பிலும் தென்படுகின்றார். இருப்பதோ இப்பொழுது ஒவ்வொருவரும் சங்கமயுக ரூபத்தில், அதில் தான் இருக்கின்றீர்கள். அதன் உள்ளே உள்ள ரூபத்தை பார்க்க வேண்டும் என்றால், அதுவும் தெள்ளத் தெளிவாக தென்படுகின்றது. ஒவ்வொருவரின் மனதும் குஷி என்ற ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கின்றது. பாப்தாதாவும், ஒவ்வொருவரையும் சாதாரண ரூபத்தில் பார்ப்பது கிடையாது, ஆனால் சம்மந்தத்தின் சொரூபத்தில் பாபா மற்றும் குழந்தைகளின் சொரூபத்தில், அந்த மாதிரி கிடையாது. வெளிப்பட்டால் சாதாரணமாகத் தான் தெரியும், ஆனால் மனதின் அன்பின் சொரூபமானது வெளிப்படு கின்றது. நீங்கள் பாருங்கள் அனைவரின் மனதில். முழுமையிலும் முழுமையாக ஹால் நிரம்பியுள்ளது. இப்பொழுது இந்த சபையில் தென்பட்டுக் கொண்டிருக்கின்றது. பாப்தாதாவிற்கு எவ்வளவு அன்பு. ஒவ்வொருவரின் மனதினுடைய

ஆழமான ரூபத்தைப் பார்த்தால் ஒவ்வொருவரின் மீதும் அன்பு மற்றும் சிநேகம். வெளிப்படையாகத் தென்படுகின்றது. எந்த மூலையில் இருந்தாலும் இப்பொழுது மூலை என்பது கிடையாது, மேலும் நாம் எங்கிருந்தாலும் ஒவ்வொருவரின் முகமும் பாப்தாதாவிற்கு சமீபத்தில் தென்படுகின்றது. எந்த ஒரு பொருளையும் பெரிய ரூபத்தில் பார்க்கும்பொழுது மிகவும் நெருக்கத்திலும், இயற்கையான ரூபத்தில் பார்க்கும்பொழுது அதில் எவ்வளவு வித்தியாசம் உள்ளது. ஆகையினால் பாப்தாதா எப்பொழுதுதெல்லாம் வருகின்றாரோ உங்களுடைய அதே உண்மையான ரூபத்தைப் பார்க்கின்றார். மேலும் மனதிலிருந்து என்ன வெளிப்படுகின்றது. ஆஹா குழந்தாய், ஆஹா! சிறிது நேரம் தான் எதிரில் சந்திக்கின்றோம். விஷயங்களை மனதின் மூலமாகத் தான் பேசிக் கொண்டிருக்கின்றோம். மேலும் மனதினுடைய விஷயத்தை மனதிலேயே கூறுகின்றோம். எவ்வாறு நேர் எதிரில் பேசுகிறோமோ அவ்வாறு! அந்த எதிரில் உள்ள அனுபவம் குஷியாக உள்ளது. மேலும் மனதில் அடக்குவதாகும். இந்த அனுபவம் எவ்வளவு மனதிற்கு மிகவும் பிடித்தமானதாக இருக்கின்றது. சிலர் கடைசியில் இருந்தாலும் மனதினுடைய நினைவு எவ்வளவு யாருக்கு உறுதியாக இருக்கின்றதோ அவர்கள் இந்த மாதிரி நான் பாபாவினுடைய துணையாக இருக்கின்றேன் என்ற உணர்வோடு இருக்கின்றார்கள். துணைவன் மற்றும் சாட்சியாக. இந்த இரண்டு ரூபமும் தென்படுகின்றது. ஒவ்வொருவரின் மனதின் அனுபவமானது தனித்தனியானது. கூறுவது என்னவோ அனைவரும் பாபாவின் நினைவு மிகவும் நல்ல அனுபவமாகிக் கொண்டிருக்கின்றது. ஆனால் அனுபவத்தில் விதவிதமான ரூபம் உள்ளது. அநேகருடைய மனதில் கூட்டத்தின் (சங்கம்) சந்திப்பானது மிகவும் அன்பாக இருக்கின்றது. ஏனென்றால் அதில் உண்மையான உணர்வு தென்படுகின்றது. பாபா மற்றும் குழந்தைகளின் சந்திப்பு மிகவும் அன்பானதாக இருக்கின்றது. இங்குள்ள விதிப்படி கடைசியில் இருந்தாலும் சரி, ஆனாலும் அனைவரும் மனதில் உள்ளனர். மனதைக் கொள்ளைக் கொள்பவர் மற்றும் குழந்தைகளின் மனது. இந்த சந்திப்பானது எவ்வளவு அன்பாக இருக்கின்றது! இப்பொழுது ஒவ்வொருவரும் எங்கு இருக்கின்றீர்கள், நாற்காலி மீதா? ஒவ்வொருவரும் தன்னுடைய அன்பின் நம்பர்படி அந்தந்த இடத்தில் அமர்ந்திருக்கின்றீர்கள். கூறுங்கள் எவ்வாறு இந்த சபை தென்பட்டுக் கொண்டிருக்கிறது? ஒவ்வொருவரின் மனதின்

சித்திரத்தில் எவ்வாறாக இருக்கின்றது. இந்த சித்திரமானது ஒவ்வொருவரின் மனதின் சித்திரம் வெளிப்படையான ரூபத்தில் தென்படுகின்றது. அவ்வாறு இருந்தால் எவ்வளவு நல்ல சபையாகத் தென்படும். ஒவ்வொருவரின் மனதின் சித்திரம் உள்ளது. அனைவரின் முகமும் மிகவும் அழகானதாக, கருப்பு, கருப்பாக அல்ல. சிநேகத்தில் மூழ்கியுள்ள அலங்காரத்தில் உள்ளனர். ஆகையால் நீங்கள் கூறுங்கள், இந்த சபையானது எவ்வாறு இருக்கிறது? இந்த சபையை பாபா மட்டும் தான் பார்க்க முடியும். ஒரு வினாடியில் பாபாவின் முன்னால் எந்த ஒரு நிலையுள்ளதோ அதனடிப்படையில் அந்த ரூபமானது தென்படுகின்றது. மேலும் சபாவனது மிகவும் அழகானதாக காட்சியளிக்கின்றது. சிலர் வெள்ளையாகவும், சிலர் கருப்பாகவும் ஆனால் பாபாவின் மீது அன்பில் முழ்கிய சித்திரம் தான் தென்படுகின்றது. அன்பினுடைய சித்திரமானது முகத்திலேயே நீங்கள் பாருங்கள். ஒவ்வொருவரின் முகமும் தற்போதைய சமயத்தில் மனதினுடைய அன்பின் சொரூபம் வெளிப்படையாக தென்பட்டுக் கொண்டிருக்கின்றது.

பாப்தாதா இதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். சமயத்தின் அடிப்படையில் தாய்மார்களின் கூட்டம் கூட குறைவாக வருவதில்லை. அவர்கள் மேலும் அதிகமாக வருகின்றார்கள். கால் முட்டியில் வலி இருந்தாலும் அவர்களுக்கு சிறப்பாக கால் போன்று கிடைத்து விடுகிறது. பாபாவிற்கு அந்த மாதிரி குழந்தைகளின் நடுவில் வருவது எவ்வளவு நன்றாக இருக்கிறது. ஆஹா! பக்தியில் இவர்களை விதவிதமான ரூபத்தில் காண்பித்துள்ளார்கள். பாப்தாதா கூட இந்த நாள் எப்பொழுது வருகிறதோ ஒவ்வொரு குழந்தையையும் மிகவும் நன்றாகப் பார்க்கின்றார். மேலும் குழந்தைகளும் அதே சினேகத்தின் ரூபத்தில் தென்படுகின்றனர். ஒவ்வொருவரின் மனதிலும் ஆஹா பாபா! ஆஹா! ஆஹா பாபா ஆஹா! இந்த பாடல் கேட்கின்றது. மேலும் பாபாவிற்கு குழந்தைகளின் விதவிதமான ரூபத்தினுடைய பாடலானது மிகவும் நன்றாகக் கேட்கின்றது. சிலர் எவ்வாறு தென்படுகின்றார். சிலர் அவ்வாறு இல்லை. ஒரே மாதிரியான அன்பின் ரூபத்தில் தென்படுகின்றார்கள். உங்களுடைய முகமானது சிறிது மாறுகின்றது. ஆனாலும் அதே முகம் தான். உள்ளன்பானது அன்பின் சொரூபம் அது தென்படுகின்றது. குழந்தைகளுக்கு அதிகமாக கஷ்டம் ஏற்பட்டிருக்கும். ஆனாலும் மனதின் குஷியில் அது மேலும் தூரத்தில் இருந்தாலும்

தனது மனதின் அன்பினால் வந்து விடுகிறார்கள். அவர்களின் முகத்தைப் பார்த்து பாப்தாதா மனதோடு பேசுகின்றார்.

இப்பொழுது அவ்வளவு ஸ்பீக்கர் வைக்க முடியாது. மனதின் ஸ்பீக்கர் வைக்க முடியும். அனைவரும் சந்திக்கின்றீர்கள் தானே! அனைவரும் கூறுகின்றார்கள், என்ன நடந்தாலும் சரி, சந்திக்கின்றோம். உங்களுக்கு என்ன தோன்றுகிறது? இதில் சந்தோஷம் தானே! வருகிறதா? அனைவருக்கும் விருப்பம் உள்ளது, இன்னும் அதிக நேரம் வேண்டும் ஆனால் பாப்தாதா பார்க்கின்றார், மேலும் நாடகப்படி இது தான் நடக்கும். பாப்தாதா ஒவ்வொருவரையும் தன்னுடைய விருப்பத்திற்கு ஏற்ப, ஏனென்றால் விருப்பமானது, இவ்வளவு பேர் நீங்கள் இருக்கின்றீர்கள், ஆனாலும் ஒவ்வொருவரின் விருப்பமானது அவரவர்களுடையது ஆனால் அன்பின் சந்திப்பு 10-நிமிடம் ஆனாலும் அது 10-நிமிடமாகத் தெரிவதில்லை. ஒரு கணக்குப்படி பார்த்தால் குறைவாகத் தான் தெரிகின்றது; மற்றொரு கணக்குப்படி அதிகமாக உள்ளது. பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து சந்தோஷம் அடைகின்றார். பாருங்கள், எங்கோ ஏதோ மூலையில் அமர்ந்துள்ளார்கள் ஆனால் இவ்வளவு நேரம் சந்தோஷத்தில் இருக்கின்றனர். வெளிமுகமாக அல்ல, மனதின் மூலமாக. ஏனென்றால் வேறு எதுவும் நடக்க முடியாது. மிகவும் முயற்சி செய்து பார்த்தோம், ஒவ்வொருவரின் விருப்பமும் உள்ளது கொஞ்ச நேரம் எங்களுக்கு கிடைக்கட்டும் என்று. விருப்பமானது அதிகரித்துக் கொண்டே தான் செல்லும். இதை பாப்தாதாவும் தெரிந்துள்ளார் ஆனால் இல்லையென்றாலும் அதையும் விரும்புகிறார்கள். இல்லையென்றாலும் சரி என்று கூற முடியும். உங்களுக்கு கஷ்டம் ஏற்படுவதில்லை தானே! வெயிலின் நாள் (கோடைகாலம்) வருவது செல்வது என்றாலே ஒரு துளி நீர் வருவது போல் சூடாக வரும். பின்னர் அனைத்தும் சேர்ந்து வரும் சாதனங்களைக் கூட தன்னுடையதாக மாற்றலாம் ஆனால் கலியுகமாக இருக்கின்றது. கலியுகத்தில் அனைத்து சாதனங்களும் கிடைக்கின்றது. கலியுகத்தில் அனைத்து சாதனங்களும் கிடைப்பது என்பது அசம்பவம். ஆம். நாம் சம்பன்னம் (முழுமை) ஆகி விட்டால் முடிவும் வந்து விடும் ஆனால் அந்த ஒரு நிமிடத்தின் சந்திப்பில் மிகுந்த அன்பு நிறைந்திருக்கின்றது. மேலும் பாபா கூட ஒரு நாளில் இத்தனை குழந்தைகளையும் சந்தித்து

விடுகின்றார். ஆகையினால் பாபாவிற்கும் நன்றாக இருக்கிறது. பாப்தாதாவின் சந்திப்பு இல்லை என்பதை விட இது நல்லது. ஏனென்றால் இதைவிட கூடுதலாக இருந்தால் பின்னர் எப்படி கிடைக்கிறதோ. தூரத்தில் இருந்து தான் சந்திக்க முடியும். பாபாவிற்கு குழந்தைகள் அன்பானவர்கள் தானே! ஒருவரே இவ்வளவு பேரையும் சந்திக்க வேண்டும். அனைவரையும் சந்திப்பதற்கான அன்பான நேரம். ஆனாலும் சந்திப்பு தானே! பெயர் என்ன வைக்க வேண்டும்? பாபாவைச் சந்தித்து விட்டு வருகிறோம். எவ்வாறு சந்தித்தாலும், எப்படி சந்தித்தாலும் பாப்தாதா கூட புரிந்திருக்கின்றார். தற்போதைய காலத்தில் கோடைக்காலம், குளிர்காலம் இவைகளை எவ்வாறு நாம் எதிர்கொள்கின்றோமோ அதேபோல் இது எவ்வாறு நடந்து கொண்டிருக்கிறதோ அவ்வாறே அதிகரிக்கும். மேலும் நடந்து கொண்டிருக்கும். முதலில் இந்த சபையும் (ஹால்) கூட மிகவும் பெரியதாக இருந்தது. இப்பொழுது சாதாரணமாகத் தோன்றுகிறது. ஒரே சபையில் எவ்வளவு இடத்தைச் சார்ந்தவர்கள் தங்கள் ஸ்தானத்தில் இருந்து சந்திக்கின்றனர். தங்களுடைய ஸ்தானத்திலிருந்து ஒரே இடத்தில் சேர்ந்து விட்டனர். ஆனாலும் முயற்சி செய்கின்றார்கள், எவ்வளவு நேரம் இங்கு பாபாவிற்கு எதிரில் அமர்ந்திருக்கின்றோம், ஒன்றாக ஒவ்வொருவரும் தங்களது ஸ்தானத்தில் இருக்கின்றார்கள். திறந்த வெளி மைதானத்தில் வருவது பாபாவிற்குப் பிடித்தமானதாக இருக்கின்றது ஆனால் திறந்தவெளி மைதானத்தில் கேட்பது, புரிந்து கொள்வது கொஞ்சம் கடினமாக இருக்கும். இப்பொழுது இந்த நேரமானது மிகவும் நெருக்கத்தில் வந்து கொண்டிருக்கிறது. முடிவை நோக்கி, ஆனாலும் சந்திப்பானது நடந்து விடுகிறது. எவ்வளவு தூரம், எவ்வளவு அதிக தூரத்தில் இருந்து சந்திக்கின்றனர். மேலும் பாபாவிற்கும் நன்றாக உள்ளது ஆனால் தைரியத்தின் காரணமாக எவ்வாறு நமக்கு வாய்ப்பு (ப்ரோகிரம்) கிடைக்கிறதோ அதன்படி நடக்க வேண்டும். குழந்தைகள் எப்போது கொஞ்சம் குழப்பத்தில் வருகின்றார்களோ அப்போது பாபாவின் மனதில் வருகின்றது ஆனால் பாபா மற்றும் குழந்தைகளின் சந்திப்பு இது ஒருபோதும் விடுபடாது. ஆகையால் யாரெல்லாம் இப்பொழுது வந்திருக்கின்றீர்களோ, சிலருக்கு கஷ்டம் ஏற்பட்டிருக்கும், ஏற்படாமலும் இருக்கலாம்; நல்ல இடம் கிடைத்திருக்கும் அல்லது கொஞ்சம் கஷ்டம் ஏற்பட்டிருக்கும் ஆனாலும் பாப்தாதா அனைவரையும் சந்திக்கின்றார். கஷ்டம்

ஏற்பட்டிருந்தாலும் அதற்கு வசதிகள் கண்டிப்பாக செய்து கொடுக்கப்படும். ஒவ்வொருவரும் புரிந்து கொண்டிருக்கின்றார்கள். நாங்களும் சந்தித்து வந்திருக்கின்றோம், வசதியைப் பார்த்தால் கொஞ்சம் சேவையை இன்னும் அதிகரிக்க வேண்டும். நிமித்தமாக இருக்கின்ற ஆத்மாக்கள் அவர்களுடைய சேவையை செய்து இதை அதிகரிக்க வேண்டும் ஆனால் அதற்கு தைரியசாலியானவர்கள் வேண்டும். இல்லையென்றால் கொஞ்சம் 4-6 போலீஸ் வந்தாலே அடுத்த நாள் அனைவரும் பயந்து விடுவார்கள். ஆகையினால் அந்த மாதிரி குழப்பத்தை ஏற்படுத்தக்கூடாது. அரசாங்கமும் கோபம் கொள்ளக்கூடாது. ஆனாலும் பின்னர் நடக்கும் ஆனால் அந்த மாதிரியில்லை. சுகத்தினுடைய சாதனமும் உள்ளது. மேலும் நீங்கள் இந்த வகையில் சந்திப்பது மிகவும் நல்லது. யார் இதைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்? எவ்வாறு இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது இது கூட நல்லது தான். அவர்கள் கையை உயர்த்துங்கள். அனைவரும் கையை உயர்த்தினார்கள். நீங்கள் நினைக்கின்றீர்கள். மேலும் நன்றாக இருக்க வேண்டும் ஆனால் அனைத்தையும் பார்க்க வேண்டியதாக இருக்கின்றது. எங்களைப் பாருங்கள், தாதி எவ்வளவு வயதானவர்கள், இவர்களை போன்று வயதானவர்கள் இருக்கிறார்கள். ஏனென்றால் இன்றைய சபாவில் அந்த மாதிரி வயதானவர்கள் தென்படுகின்றார்கள். உங்களுக்கு பிடித்தமானதாக இருக்கிறது தானே! இல்லையென்றாலும் பிடித்தமாகதான் இருக்க வேண்டும். யாரும் விரும்பவில்லை, ஆனாலும் செய்ய வேண்டியதாக இருக்கிறது. மேலும் பாப்தாதாவும் புரிந்திருக்கின்றார் தன்னுடைய இராஜ்யம் எப்பொழுது வருமோ அப்பொழுது அவ்வளவு சாதனங்கள் இருக்கும். நாம் அதை உபயோகிக்க முடியாது. அந்தளவு சாதனங்கள் இருக்கும் ஆனால் எப்பொழுது இருக்க வேண்டுமோ அப்பொழுது ஒவ்வொருவரும் நினைக்கின்றார்கள். இது இருந்தால் நல்லது இந்த வசதி இருந்தால் மிக நல்லது. மேலும் பாப்தாதாவோடு குழந்தைகள் சந்திக்கும்பொழுது ஒவ்வொருவரை சந்திப்பது என்பது மிகவும் கடினம் ஆனால் அனைவரிடமிருந்தும் திருஷ்டி எடுப்பது, கொடுப்பது இது கூட நன்றாக உள்ளது. இவ்வளவு பெரிய ஹால் உங்களுக்கு கிடைத்திருக்கிறது. பாபாவும் கிடைத்துள்ளார் தானே! ஆனால் கொஞ்சம் வெப்பத்தைத் தாங்க வேண்டியதாக உள்ளது. அல்லது கேட்பதில் கொஞ்சம் குறைவாக

உள்ளது. இதெல்லாம் நடக்கும். ஆனாலும் இது கூட கொஞ்சம் கொஞ்சமாக சரியாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் செய்வார்கள் ஆனால் பாபா மற்றும் குழந்தைகளின் சந்திப்பு என்பது ஏற்படும். அல்லது யாராவது இந்த மாதிரி நினைக்கின்றீர்களா, இதை விட சந்திக்காமல் இருப்பது மேல் என்று. இல்லை. பாபாவிற்கு கூட நினைவு வருகின்றது குழந்தைகளைப் பற்றி! பாபாவிற்கு குழந்தைகளைப் பற்றி நினைவு இல்லை என்பது கிடையாது. பாபாவிற்கும் நினைவு வருகின்றது. நீண்ட நாட்கள் ஆகி விட்டது குழந்தைகளை சந்திக்கவில்லை என்று, ஆனால் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. எப்பொழுதெல்லாம் குழுந்தைகளைச் சந்திக்கின்றாரோ அது மிகவும் பிரியமானதாக இருக்கின்றது. கொஞ்சம் வெப்பம். கொஞ்சம் வேர்வை சிந்த வேண்டியதாக இருக்கிறது. ஆனாலும் பாபாவிற்கு முன்னால் அது ஒன்றும் இல்லை. பக்தியில் என்னவெல்லாம் செய்துள்ளீர்கள். இது ஞானம் இங்கே உங்களுக்கு ஓய்வு கிடைக்கின்றதல்லவா! அனைவரும் நன்றாகத்தானே உட்கார்ந்திருக்கின்றீர்கள். ஓய்வாக படுக்கவில்லை என்றாலும் நல்ல முறையில் அமர்ந்திருக்கின்றீர்கள் தானே! மேலும் இந்த மாதிரி தான் இருக்க வேண்டும். இல்லையென்றால் படுப்பதற்குக் கூறினால் பாதி பேர் பரந்தாமம் (தூங்கி விடுவார்கள்) சென்று விடுவார்கள். பாப்தாதா எப்பொழுதெல்லாம் வரவேண்டியதாக இருக்கின்றதோ, அதிகமான விஷயங்கள் எதிரில் தெரிகின்றது. இதெல்லாம் நடக்கத்தான் செய்யும். இயற்கை கூட நமக்கு நன்றாக ஒத்துழைக்கின்றது. எங்கு பஸ் நிலையம் இல்லையோ அங்கு பஸ் நிலையம் உருவாகிக் கொண்டிருக்கின்றது. எங்கெங்கெல்லாம் கடினமாக இருக்கின்றதோ அதை முயற்சி செய்து சரி செய்துவிடுவார்கள். மனதின் அன்பு வேண்டும் மற்றும் சிறிது நேரம் பஸ் நிலையத்தில் இருக்க வேண்டும். வந்தாலும் தூரத்தில் இருக்க வேண்டும். எவ்வாறு இப்பொழுது கடைசியில் அமர்ந்திருக்கின்றார்களோ அவர்களுக்கு என்ன பார்க்க முடியும்? ஆனாலும் அனைவரும் டிராமாவின் அடிப்படையில் சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் சந்தித்துக் கொண்டேயிருப்பார்கள். விருப்பம் தானே! இவ்வளவு பேர் உட்கார்ந்திருக்கின்றீர்களோ அப்படிதான் இருக்க வேண்டும். விருப்பம் தானே! இதன் மீது யோசித்துப் பாருங்கள். இவர்கள் கொடியை அசைக்கின்றார்கள். ஏனென்றால் இவர்கள் வருவதற்கும் போவதற்கும் கொஞ்சம் கஷ்டம்

இருந்திருக்கும். ஆனாலும் மனது பெரியதாக உள்ளது. எவ்வளவு ஏழையோ அவ்வளவு மனது பெரியதாக உள்ளது. நல்லது. இப்பொழுது இந்த ஒரு முடிவுக்கும் வர வேண்டியதாக இருக்கிறது.

**சேவையின் வாய்ப்பு: உத்திரப்பிரதேசம், பனாரஸ், மத்திய நேபாளம்:** (13-ஆயிரம் பேர் உத்திரப்பிதேசத்தில் இருந்து வந்திருக்கிறார்கள்) மொத்தமாக 27-ஆயிரம் பேர் வந்துள்ளனர். இதில் கூடுதலாக உ.பி. வந்துள்ளனர். இங்கிருந்து பார்க்கும்பொழுது மிகவும் நன்றாக உள்ளது. எங்களுக்கு மிகவும் முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது ஆனால் நீங்கள் சுகமாக வந்தடைந்து விட்டீர்கள். நாங்கள் இருக்கும்பொழுது ஸ்கூட்டர் கூட கிடையாது. இவை அனைத்தும் மெது மெதுவாக வந்தது. அனைவரும் குஷியாக இருக்கின்றீர்கள் தானே! குஷி இருக்கிறதா? குஷியாக சந்திக்கின்றீர்கள் தானே! குஷியாக சந்தித்துக் கொண்டேயிருப்பீர்கள்.

**இரட்டை வெளிநாட்டினர்**: (50-நாடுகளிலிருந்து 900-பேர் வந்துள்ளனர்.) கஷ்டம் இருந்திருக்கும். நாங்கள் முதன் முதலில் ஆரம்பிக்கும்பொழுது எவ்வாறு நிலையிருந்திருக்கும் ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக புரிந்துக் கொண்டிருக்கின்றார்கள். இது அனைவருக்கும் பிடித்துள்ளது தானே: இது இவ்வாறு நடப்பது அனைவருக்கும் பிடித்தமானதாக உள்ளதா? நல்லது. அனைவரும் புத்திசாலியானவர்கள் தான். புரிந்து கொள்ள முடியும். கூற வேண்டிய அவசியம் இல்லை. எவ்வாறு சமயமானது விலைமதிக்க முடியாதாக மாறி விட்டதோ, அதே அடிப்படையில் வசதியும் செய்ய வேண்டியதாக இருக்கிறது. கவனம் உள்ளது. எவ்வளவு சகஜமாக மாற்ற வேண்டுமோ அவ்வளவு செய்ய வேண்டும் ஆனால் சில சில காரணங்களினால் பணத்தை அதிகரிக்க வேண்டியதாக உள்ள ஆனாலும் பாபா நம்முடன் இருக்கின்றார். நமக்கு உதவியானதை அரசாங்கமும் செய்கின்றது. நல்லது தானே!

உங்களுக்கு விருப்பம் தானே! சாதாரணமாக சந்திக்கின்றீர்கள். மேலும் சந்தித்துக் கொண்டேயிருப்பீர்கள். வீட்டிற்குச் சென்றுவிட்டால் சாப்பிடுவது. குளிப்பது, துவைப்பது இதற்கு நேரம் கிடைக்கும். பாக்கி வேறு ஏதாவது சௌகரியம் வேண்டும் என்றால் உங்களுடைய கருத்துகளைக் கூறலாம். ஏன் முடியாது? ஏன் நடக்கவில்லை அதில்

நீங்கள் தீவிரமாக இருக்கக்கூடாது. எவ்வளவு முடியுமோ அவ்வளவு உங்களது விஷயங்களை ஏற்றுக் கொள்வோம்.

தாதிகளுடன்: அனைவரும் பாபாவிடம் கூறுகின்றார்கள், பாபா அந்த மாதிரி சகஜமாக மாற்றிவிடுங்கள். யாருக்கும் கடினம் என்பதே இருக்கக் கூடாது என்று. அனைவருக்கும் பாபா கூறுகின்றார் ஆகி விடும் (தாதி ஜானகியை தன் பக்கத்தில் அமர வைக்கின்றார்) நீங்கள் ஒருவர் வசதியாக அமர்ந்தீர் என்றால், அனைவரும் அமர்வது போல். நிகழ்ச்சிகளை நீங்கள் தான் உருவாக்குகின்றீர்கள். நீங்கள் எஜமானர்கள். (மோகினி சகோதரிக்கு 75வது பிறந்த நாள்) மோகினி சகோதரி பாப்தாதாவிற்கு மாலை அணிவித்தார், பாப்தாதாவும் மோகினி சகோதரிக்கு மாலை அணிவித்தார்.

என்னவெல்லாம் உருவாகிக் கொண்டிருக்கின்றதோ அவை அனைத்தும் பொதுவில் உபயோகித்துக் கொண்டிருக்கின்றார்கள். யாரும் குறை கூறவில்லை தானே! சிறிது சிறிதாக இருக்கின்ற கஷ்டங்களும் அதுவும் முடிந்து விடும். கவனம் வைக்க வேண்டும்.

மூன்று மூத்த சகோதரர்களும் பாப்தாதாவிற்கு பூங்கொத்து கொடுத்தார்கள். அனைவரும் நலம் தானே! எவ்வெவ்வாறு மீட்டிங் செய்து கொண்டு வந்திருக்கின்றீர்களோ, அவ்வாறே கொஞ்சம் கொஞ்சமாக தெள்ளத் தெளிவாகிக் கொண்டேயிருக்கும். (பூனாவின் ஜெகதம்பா பவன் பிளானை பாப்தாதாவிற்கு காண்பித்தனர்) பிரிஜ்மோகன் சகோதரர் ஒரு சீடி வெளியிட்டார்.

ஈஸூ சகோதரியுடன்: உடல்நிலை சரியாக இருக்கிறது தானே! (எஸ்.டி.எம். மற்றும் எஸ்.பி.யோடு பாப்தாதா சந்திக்கின்றார்) இப்பொழுது சந்தித்து விட்டீர்கள் தானே? மிகவும் நன்றாக சகயோகம் செய்கின்றார்கள் தேசத்தினுடைய காரியங்கள் தானே! அனைவருக்கும் செய்ய வேண்டும். தேசத்தின் வேலை. பிரம்மா குமாரிகளுக்காக தனிப்பட்டதாகச் செய்யவில்லை.

நல்லது. இப்பொழுது அனைவரும் சந்தித்து விட்டனர். மேலும் சந்திப்பு நடந்து கொண்டேயிருக்கும். எவ்வாறு நிகழ்ச்சிநிரல் நடக்கிறதோ அவ்வாறே நடக்கும்.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵
✵✵✵✵✵

## 16.10.2016 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## ஓம் சாந்தி என்ற வார்த்தையின் பொருள் சொரூபத்தில் நிலைத்திருந்து மனதின் நடனத்தை (டான்ஸ்) அதிகரிப்பது. மன மௌனத்தின் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். அப்பொழுது வாய் சப்தத்திலிருந்து விலகிக் கொண்டே செல்வீர்கள் மற்றும் சாந்தியின் கிரணங்களினால் சேவை தானாகவே அதிகரித்துகொண்டு செல்லும்!

ஓம் சாந்தி! இந்த மகாவாக்கியம் எவ்வளவு தூரம் அனைவருக்கும் அன்பாக உள்ளது. என்ன நேர்ந்தாலும் எவ்வளவு தான் அழுகைக்கான வாயுமண்டலமாக (சூழ்நிலை) இருந்தாலும், ஓம் சாந்தி என்ற வார்த்தை நமக்கு அமைதியின் நினைவை ஏற்படுத்துகின்றது. ஓம் சாந்தி என்று சொல்லும் பொழுதே, எப்படிப்பட்ட காட்சி நம்முன் வந்தாலும் ஓம் சாந்தியின் பொருள் அதன் சொரூபத்தை காட்டும். ஓம் சாந்தி சொல்வதால் தானாகவே நம்முள் சாந்தியின் அலை பரவுகின்றது. அனைவரின் உள்ளத்திலும் ஓம் சாந்தி என்பது தனது அர்த்தத்தை பரப்புகின்றது. எப்படி பாபா என்ற வார்த்தை தனது அர்த்தத்தைப் பரப்புகின்றதோ, அப்படி ஓம் சாந்தி என்ற வார்த்தையும் தனது அர்த்தத்தை உள்ளத்தில் பரப்புகிறது. உள்ளத்தில் பரவினாலும், அவ்வாறு பரப்பிக் கொண்டே அதன் அர்த்த சொரூபத்தில் நிலைத்து விடுகின்றனர், வெறும் சொல்வதோடு மட்டுமின்றி, நாலா புறமும் பார்த்தால், ஓம் சாந்தியின் அர்த்த சொரூபத்தில் அதிகபட்சம் பேர் நிலைத்திருக்கின்றார்கள். அனேகரின் ரூபம் ஜொலித்துக் கொண்டிருக்கின்றது. ஒருவர் மற்றவரைப் பார்த்து, ஒருவர் மற்றவரின்

தொடர்பின் நிறம் முகத்தில் ஜொலித்துக் கொண்டிருக்கின்றது ஆகையால் பாப்தாதாவும் ஓம் சாந்தியின் நினைவை ஏற்படுத்து கின்றார். ஒவ்வொருவரின் வாயிலும் ஓம் சாந்தியின் அர்த்தம் தென்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொருவரின் உள்ளத்தினுள் ஓம் சாந்தியின் அர்த்த சொரூபம் தென்பட்டுக் கொண்டிருக்கின்றது. உங்கள் அனைவரின் உள்ளத்திலும் இதன் அர்த்தம் வந்து விட்டதா? ஒவ்வொருவரும் ஓம் சாந்தியின் அர்த்த சொருபத்தில் தென்பட்டுக் கொண்டிருக்கின்றனர், ஓம் சாந்தி என்று சிலர் பேசிக் கொண்டிருக்கின்றனர். பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இப்பொழுதும் அனைவரும் இந்த நிமிடம் கூட ஓம் சாந்தியின் அர்த்த சொரூபத்தில் அதிகமாக மூழ்கியுள்ளார்கள். அதனால் பாபாவும் கூறுகின்றார்: இந்த ஓம் சாந்தியின் அர்த்தத்தில் நிலைப்பதனால், அனைவரின் முகங்கள் அதிகபட்சமாக ஓம் சாந்தியின் அர்த்தத்தில் மூழ்கியுள்ளது. முன்னே பின்னே இருப்போரின் கைகளை ஏன் தூக்கச் செய்ய வேண்டும்? அதிகபட்சமாக அனைவருமே இந்த அர்த்த சொரூபத்தில் மூழ்கியுள்ளார்கள். அனைவரின் வாயிலும் ஓம் சாந்தி தான் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அனைவரின் உள்ளத்திலும் ஓம் சாந்தி என்ற வார்த்தை பொதிந்துள்ளது. அனைவரின் மனதிலும் இதன் அர்த்தம் எமர்ஜ் (வெளிப்படு) ஆகின்றது. அனைவரும் இந்த ஓம் சாந்தியின் அர்த்தத்தில், மனதால் நடனமாடிக் கொண்டு இருக்கின்றார்கள். காலினால் என்னவோ நடனமாடவில்லை, ஆனால் அதிகபட்சம் பேர் மனதின் நடனமாடுகின்றார்கள். மேலும் மனதின் நடனம் தான் எத்தனை தனிப்பட்டது. யாரையும் குழப்பமடையச் செய்யாது. ஒவ்வொருவரும் தனது மனதில் சாந்தி நிறைந்திருப்பதன் காரணத்தால், அனேகம் பேர் வெளியிலும் சாந்தி, மனதிலும் சாந்தியாக உள்ளனர். அப்படி இரட் ட்டை ஓம் சாந்தி வெளியில் வாயிலும் ஓம் சாந்தி, மனதிலும் ஓம் சாந்தி, இது ஒருவிதமான நடனம் (டான்ஸ்) தான். இது மனதின் டான்ஸ்! அமைதியாக அமர்ந்து கொண்டு எவ்வளவு இனிமையான டான்ஸ் ஆடிக் கொண்டிருக் கின்றீர்கள் ஆனால் மனதின் டான்ஸ் என்பதன் காரணத்தினால் வெளியில் சப்தம் வரவில்லை. ஒவ்வொருவரும் தனது மனதின் டான்ஸில் மிகவும் பிஸியாக உள்ளீர்கள், ஆகையால் மனதின் ஒலியாக உள்ளது, ஆனால் வாயின் ஒலியாக இல்லை. இத்தனை பேர் இருந்தாலும் அருகாமையில்

யாரேனும் வந்தால் தான் கேட்க முடியும். ஏனெனில், மனதின் நடனத்தை மனம் தான் அறியும். மேலும் இந்த மனதின் நடனத்தில் எத்தனை பிஸியாக உள்ளோம். இந்த மனதின் நடனத்தில் வெளியில் கூட எத்தனை பேர் அமர்ந்துள்ளார்கள், ஆனாலும் மனம் சாந்தியாக உள்ளது. மனதின் போதையில் அனைவரது மனமும் மூழ்கியுள்ளது, ஆகையால் மனதின் நடனத்தில் வெளிப்படையான சப்தம் வருவதில்லை, ஆனால் இந்த மன நடனம், மனதில் அவ்வளவு நிறங்களைக் காட்டுகின்றது, இது அனைவருக்கும் மிகவும் பிடித்தமானது. அப்படிப்பட்ட மன நடனம் எப்பொழுதெல்லாம் நடக்கின்றதோ அப்பொழுது வெளியில் எந்த ஒலியும் வருவதில்லை. இவ்வளவு பேர் அமர்ந்துள்ளனர், ஆனால் சப்தமில்லை. ஏனெனில் மனதின் டான்ஸில் அனைவரும் பிஸியாக இருக்கின்றனர். இந்த டான்ஸ் நன்றாக இருக்கிறது அல்லவா! வெளிநடனம் அதிகமாகப் பார்த்தாகி விட்டது, ஆனால் இந்த மனநடனம் மிகவும் இனிமையானது. இந்த நடத்தை மேலும் அதிகரியுங்கள். மனதின் டான்ஸ் பற்றி அறிந்துள்ளீர்கள் அல்லவா அறிந்துள்ளீர்களா என்ன? யார் அறிந்துள்ளீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது! அனைவரும் அறிந்துள்ளீர்கள். மிகவும் நன்றாக கை உயர்த்திக் கொண்டிருக்கின்றீர்கள். எனவே இப்பொழுது இந்த நடனத்தில் உங்கள் நம்பரை முன்னேற்றுங்கள். இந்த மனதின் டான்ஸ் நன்றாக உள்ளதா அல்லது வாயின் (பேச்சு) டான்ஸ் நன்றாக உள்ளதா? மனதின் நடனத்திற்கான பழக்கத்தை இப்பொழுது ஏற்படுத்துங்கள். இதில் பிஸியாக இருப்பதனால், மனதினால் டான்ஸ் செய்யும் பொழுது இந்த ஹாலிலும் எவ்வளவு சாந்தி ஏற்பட்டுவிடுகின்றது ஆனால் இந்த டான்ஸ் இப்பொழுது மிகவும் அவசியமானதாகும். ஏனெனில் நாளுக்கு நாள் வெளியில் பிரச்சனைகள் அதிகரிக்கிறது, அதிகரிக்கத்தான் செய்யும், அப்படிப்பட்ட நேரத்தில் வெளிப் படையான டான்ஸ் அல்லது வெளிப்படையான சப்தத்தில் வருவது கூட நல்லதல்ல, ஆனால் மன நடனத்தின் பயிற்சி மிகவும் அதிகமாகத் தேவை. இந்த பயிற்சி உள்ளுக்குள்ளேயே இருக்க வேண்டும். முழு நாளும் இதற்கான நேரத்தை முதலில் ஒதுக்குங்கள். ஒவ்வொருவரும் முழு நாளும் இரண்டுவிதமான நடனத்திற்கு நேரத்தை ஒதுக்குங்கள் மற்றும் பயிற்சி செய்யுங்கள். எவ்வளவு இந்த டான்ஸ் செய்கின்றீர்களோ, இந்த டான்ஸ் மூலமாக, மனதின் நடனத்தின் பிரபாவம். வாயின் நடனத்திலும் பட்டுக்

கொண்டிருக்கின்றது. எனவே மனதின் நடனத்தை அதிகரியுங்கள். பிறகு மிகுந்த ஆர்வமும் அதிகரித்துக் கொண்டே செல்லும். இப்பொழுது பாபா பார்க்கின்றார். அனேகரிடம் இந்த மனதாலான நடனத்தில் ஆர்வம் (இன்ட்ரஸ்ட்) அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. மேலும் நாலா புறமும் உண்மையான சாந்தியின் அனுபவம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. அனேகரின் அனுபவம் இதில் மிகவும் நன்றாக அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இந்த பயிற்சியை அதிகரிப்பது மிகவும் நன்மை பயக்கத் தக்கதாகும். யார் வெளி மௌனத்தில் இருக்கின்றார்களோ, அதிலும் மனதின் சாந்தி அதிகரிக்கின்றது. மன அமைதி அதிகரிப்பதனால் தானாக வாயில் வார்த்தையும் குறைய ஆரம்பித்து விடும், ஒவ்வொருவரும் இந்த சமயத்தில் என்ன கவனம் கொடுக்க வேண்டும் மனதின் மௌனத்தில். மனதின் அமைதி. மனதின் மௌனம் பற்றி அறிந்துள்ளீர்கள் தானே! அவ்வளவு அறிந்திருக்கவில்லையா? இதில் ஆர்வம் வைத்தால், மனதின் மௌனம் அதிகரித்துக் கொண்டேயிருக்கும். மனம் மௌனமாக இருந்தால் உடலின் மௌனமும் தானாகவே அதிகரிகிறது. இதில் நீங்கள் தனது உள் மனதின் மௌனத்தை அதிகரிப்பதற்கான புருஷார்த்தத்தை அன்போடு அதிகரியுங்கள். எவ்வளவு தூரம் இவ்விஷயத்தில் முயற்சி செய்வீர்களோ, ஆர்வத்தை அதிகரிப்பீர்களோ, தானாகவே மனதின் மௌனம் அதிகரித்து, சப்தத்திற்கு அப்பால் செல்வீர்கள். மேலும் உங்களுக்குள்ளேயும் அமைதியின் கிரணங்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கும். எனவே இப்பொழுது ஒரு வாரம் இந்த மனதின் அமைதிக்கான வாரமாக கொண்டாடுங்கள். வாயின் (பேச்சு) அமைதியை விடுத்து, மனதின் சாந்தியை அதிகரியுங்கள். இந்த மன சாந்திக்கான ஒத்திகையால் (ட்ரையல்) அனைத்து விதமான சாந்தியும் அதிகரித்துக் கொண்டே செல்லும். இப்பொழுது ஒரு மாதம் மனதின் சக்தியை அதிகரிக்க வேண்டும். மனதின் சாந்தியை அதிகரிப்பதனால் தானாக வாயின் சக்தி அதிகரித்துக் கொண்டேயிருக்கும். இந்த பயிற்சி அனைவருக்கும் பிடித்தமானதாக இருக்கிறதா? கை உயர்த்துங்கள். நல்லது, அதிக மட்சமாக அனைவருமே கை உயர்த்தி விட்டீர்கள்.

இப்பொழுது இந்த மனதின் சக்தி என்பது என்ன? மேலும் அதை எப்படி அதிகரிப்பது? இதையும் உள்ளுக்குள்ளேயே பயிற்சி செய்து கொண்டேயிருங்கள். இந்த மனதின் சாந்தியின் பாடத்தை அதிகரித்துக்

கொண்டேயிருங்கள். எவ்வளவு மனதின் சாந்தி அதிகரிக்குமோ அவ்வளவு மனசாந்தியின் பிரபாவம் வாயின் சக்தியின் மீதும் படும், மேலும் எவ்வளவு மன சாந்தி அதிகரிக்குமோ அவ்வளவு வாயின் சக்தி வெளியில் குறையும். சமீப நாட்களில், இடையில் இந்த போட்டி நடந்தது, அதனால் மனதின் சாந்தி அனைவருக்கும் அதிகரித்திருந்தது. மனதின் யோசிக்கும் சக்தியானாலும் சரி. வாயின் மூலமானாலும் சரி, அல்லது சூட்சம சக்தியை அதிகரிக்கும் பயிற்சியின் மூல மானாலும் சரி, எவ்வளவு அதிகரிக்கின்றீர்களோ அவ்வளவு சக்தி அதிகரித்து வாயின் (பேச்சு) சக்தி குறைந்துபோகும். கொஞ்சம் வார்த்தையில் மேல் கீழ் ஆவது, அல்லது அதிகமாகப் பேச முற்படுவது குறைந்து போகிறது. ஆக (மன சக்தியை அதிகரிப்பது) இதை செய்து கொண்டே போங்கள். இதுவே பாப்தாதா கூறுவதாகும்.

**சேவையின் முறை: பஞ்சாப், இராஜஸ்தான். மொத்தம் -22000 பேர் வந்துள்ளார்கள்:** மொத்தமாக இப்பொழுது என்ன பாடம் நடந்ததோ, அது சேவை மற்றும் நினைவாகும். இந்த இரண்டு பாடம் உள்ளது. இப்பொழுது சேவையையும் அதிகரிக்க வேண்டும். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். சேவையை அதிகரிக்க வேண்டுமா? கை உயர்த்துங்கள். சேவையும் அவசியமானது. ஒருவேளை சேவை செய்யவில்லை எனில், ஆங்காங்கே நேரம் கடந்து விடும். ஏனெனில் நேரத்தை கடத்தித்தான் ஆக வேண்டும். மேலும் நல்ல முறையில் கடத்தவேண்டும். எது எனக்கு (செய்ய) வருகிறதோ அதைச் செய்தேன் என்றல்ல. சட்டப்படி என்ன சேவைகள் கிடைத்ததோ அதன் அனுசாரம் ரிசல்ட் வெளிப்பட வேண்டும்.

(ரமேஷ் சகோதரரின் உடல் சிறிது சரியில்லை அவரை மருத்துவமனை அழைத்துச் செல்கின்றனர்); அவர் பாப்தாதாவை சந்ததித்தார், பாபாவிற்கு தனது புதிய புத்தகத்தை வழங்கினார். ஓம் சாந்தி. சேவை நடந்து கொண்டிருக்கின்றது. சேவையும் அவசியம் தான். சேவையின்றி நீங்களும் விடுப்பட்டு விடுவீர்கள் உங்களுக்கும் மற்ற பிற (வீணான) எண்ணங்கள் ஓடும். ஏதாவது புதிதாக இருக்க வேண்டும் ஆனால் முதலில் என்ன சேவைக்கான திட்டம் தீட்டினீர்களோ, என்ன சேவை ஏற்கனவே பாக்கி இருக்கின்றதோ அதை முடியுங்கள் -இதுவே பாபாவின் யோசனையாகும். நன்றாக ஆரம்பிக்கின்றீர்கள், சிறிது காலம்

சென்ற பிறகு ஆர்வம் என்பது சேவை செய்வதில் குறைந்து விடுகின்றது. நல்லது, ரமேஷ் உங்கள் சிந்தனை நன்றாக உள்ளது, ஆனால் செய்யும் பொழுது கவனம் கொஞ்சம் கொடுக்க வேண்டியது உள்ளது. உங்களிடையே உட்கார்ந்து இதை எப்படி நடத்துவது, எப்படி விருத்தி (அதிகரித்தல்) செய்வது என்பதைப் பற்றி விவாதம் செய்யுங்கள். அதிகமாக யோசிக்க வேண்டியதில்லை. ஒரே அடியாக குறைக்கவும் வேண்டாம். இரண்டு பக்கத்திற்கும் இடையில் இருக்க வேண்டும். ஆகையால் முதலில் ஒரு சிறிய மீட்டிங் செய்யுங்கள், அதில் என்னென்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது என்று யோசனையை உருவாக்குங்கள், ஒவ்வொருவரும் கொடுக்கும் சிந்தனையின் ஆதாரத்தில் முதலில் திட்டத்தை உருவாக்குங்கள், ஏனெனில், அப்பொழுது இந்த சேவையை மேலும் அதிகரிக்கலாமா? வேண்டாமா? என்று தெரிந்து விடும்.

**இரட்டை அயல் நாட்டவர்கள் 75-தேசங்களிலிருந்து சுமார் 800-பேர் வந்துள்ளனர்:** (பாப்தாதாவுக்கு சேவையின் திட்டம் அனுப்பப்பட்டது, பாப்தாதா அதன் அடிப்படையில் தனது மகாவாக்கியத்தை கூறிக் கொண்டிருக்கின்றார்) இந்த சேவைக்கான திட்டம் நன்றாக உள்ளது. எவ்வளவு சேவையில் முன்னேறு கின்றீர்களோ, அவ்வளவு மற்ற பாடங்களிலும் பின் தங்கி விடக் கூடாது. இதை பிறகு கலந்தாய்வு செய்து திட்டத்தை உருவாக்குங்கள். அப்பொழுது முடிவெடுக்கலாம். முதலில் யார் சேவைக்கான திட்டம் உருவாக்கினார்களோ அவர்களுக்கு முதலில் கூறுங்கள் பிறகு அதை முடிவெடுத்தால் செய்யுங்கள். இல்லையெனில், அதில் குறிப்பிட்ட சேவையை சேர்க்க வேண்டுமெனில் சேர்ப்பதற்கான வழிகளைக் கூறுங்கள். பிறகு அதை யோசித்து சேவைக்கும் யோகத்திற்கும் உள்ள திட்டத்தையும் உருவாக்குங்கள். இந்த இரண்டு பாடமும் அவசியம். இதை உருவாக்கி விட்டு பிறகு என்ன செய்யவேண்டும் என்ன செய்யக் கூடாது என்று முடிவெடுங்கள். இந்த சேவை அவசியமானது என்று புரிந்து திட்டத்தை உருவாக்கி முதலில் பாஸ் செய்யுங்கள். பிறகு அனைவருக்கும் வெளியில் கூறுங்கள். (தாதிகள் பாப்தாதாவை சந்தித்தார்கள்)

பாபா தாங்களுடையவர் எனில் முதலில் சேவையும் தங்களுடையது. ஏனெனில் பாபாவிற்கு சேவையில் ஆர்வம் உள்ளது. சேவையின்

பக்கமே கவனம் செல்கின்றது. ஆகையால் சேவையும் செய்ய வேண்டும் மற்றும் சேவையை அதிகரிக்கவும் வேண்டும். ஒருபுறம் பாபா கூறுகின்றார். சேவையை அதிகரியுங்கள். மறுபுறம் இவ்வளவு சேவை செய்ய வேண்டாம். கவனிக்க முடியாது என்றும் கூறுகின்றார். இதிலும் முதலில் சிஸ்டத்தை சரி செய்யுங்கள். சேவையின் முறைகள் (சிஸ்டம்) சரியாகி விட்டால் பிறகு தானாக அனைத்து டிபார்ட்மெண்டிலும் அது சரியாகி விடும் ஆனால் ஒவ்வொரு டிபார்ட்மெண்டையும் எப்படி உருவாக்க வேண்டுமோ அப்படியே செய்ய வேண்டும் அல்லது ஏதேனும் சேர்க்க வேண்டும் அல்லது நீக்க வேண்டும் என்பதில் கவனம் இருக்க வேண்டும். இதையும் முதலிலேயே முடிவெடுக்க வேண்டும்.

<u>வெளிநாட்டு மூத்த சகோதரிகளிடம்:</u> அனைவரும் வந்துள்ளீர்கள். தங்களுக்குள் கலந்துள்ளீர்கள்! தாங்கள் தங்களது திட்டத்தை உருவாக்கி விட்டீர்களா? (இப்பொழுது உருவாக்குவோம்) முதலில் உருவாக்குங்கள் பிறகு பாபா பார்ப்பார். என்னென்ன செய்ய முடியும், மேலும் இந்த சேவைக்கு நீங்கள் எவ்வளவு நேரம் கொடுத்தீர்களோ, அவ்வளவு நேரம் அனைவரும் ஒதுக்க வேண்டியது வரும். ஏனெனில், அவர்கள் ரிபோர்ட் செய்வார்கள் அல்லவா? இதிலும் அதிக பட்சமாக என்ன நோக்கம் வைத்துள்ளீர்களோ அதில் முக்கியமானதை முதலிலேயே கூறிவிடுங்கள், இரண்டாவது முறை உட்கார வேண்டாம். யார் சேவாதாரிகளோ அவர்கள் சேவைக்காகத்தான் யோசிப்பார்கள். வந்ததே சேவைக்கான திட்டத்திற்குதான். அதனால் எவ்வளவு சேவை மீது கவனம் கொடுக்கிறோமோ அவ்வளவு சேவைக்கான இலாபத்தை எடுக்க முடியும். தங்களுக்குள் உட்கார்ந்து ஏதேனும் புதுமையை உருவாக்குங்கள். எது நடக்கின்றதோ அதை சற்று சரி செய்யுங்கள். மேலும் சில புதுமையையும் கொண்டு வாருங்கள்.

ஜெர்மனியில் ரிட்ரீட் சென்டர் கிடைத்துள்ளது, சுதேஷ் சகோதரி பாபாவிற்கு அதற்கான வரைபடத்தைக் காட்டினார்: நல்லது, அனைவரும் பாருங்கள். பிறகு முடிவெடுங்கள்.

<u>நியூயார்க்கின் மோகினி சகோதரி:</u> அனைவரின் நினைவுகளை பாப்தாதாவுக்கு கொடுத்தார். மோகினி சகோதரிக்கு பிளாட்டினம்

ஜூப்பிலி, (75வது ஆண்டு) பாப்தாதா அவர்களுக்கு மாலை அணிவித்தார்).

<u>பெங்களூரு சரளா தாதி:</u> பாப்தாதாவிற்கு மலர்ச்செண்டு கொடுத்தார். உடல் நலம் சரியாக உள்ளதா? நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 15.11.2016 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## இன்று பாப்தாதா சாந்திவனத்தில் வந்தார்; ஆனாலும் குழந்தைகளை எதிர்கால இராஜ்யம் டெல்லிக்கு பயணிக்க வைத்தார், ஆகையால் டெல்லிக்கான இடங்களை அடிக்கடி நினைவு கூர்ந்தார்!

ஓம் சாந்தி. பாருங்கள், இத்தனை சமயத்திற்குப் பிறகு எத்தனை அதிகமான சகோதர, சகோதரிகள் இங்கு வரை சந்திக்க வந்திருக்கின்றீர்கள். தந்தையுடன் சந்திப்பதற்காக எங்கேனும் ஏதேனும் விசயமிருந்தாலும், இங்கு தான் வந்தாக வேண்டும் மேலும் எத்தனையோ சாதனங்களை தங்களுடன் எடுத்துக் கொண்டு எத்தனை அன்புடன் சந்திக்க வருகிறீர்கள். பாப்தாதா ஒவ்வொரு ரத்தினங்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். இவர்கள் எல்லோரும் இவ்வளவு தூரத்திலிருந்து சந்திக்க வந்துள்ளார்கள், தந்தையும் கூட சந்திக்க வந்துள்ளார். குழந்தைகளும் கூட சந்திக்க வந்துள்ளார். இங்கு எந்த ஒரு சாக்குபோக்கு மற்றும் இரகசியமும் இல்லை, தந்தையும் வந்துள்ளார், குழந்தைகளும் வந்துள்ளார்கள். மற்றும் இருவரின் மனதிலும் எத்தனை அன்பு, எத்தனை ஊக்கம் உள்ளது! இவர்கள் சதா பறந்து கொண்டேயிருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் தனது மனதாலும் கேட்க முடியும் ஏனெனில், ஒவ்வொருவரின் மனதிலும் இந்த ஊக்கம் கட்டாயம் இருக்கும், அதாவது சாகாரத்தில் பாபா இவ்வளவு தூரத்திலிருந்து வந்துள்ளார். தந்தையும் தூரத்திலிருந்து வந்துள்ளார். குழந்தைகளும் தூரத்திலிருந்து வந்துள்ளார்கள். இந்த சந்திப்பும் கூட மற்றொரு (மட்டற்ற மகிழ்ச்சியின்) ஜொலிப்பை ஏற்படுத்துகின்றது. ஒவ்வொருவரின் மனதிலும் எத்தனை ஊக்கம், எங்கு சென்று கொண்டிருக்கின்றனர்? பாபாவைச் சந்திப்பிற்காக பாபாவைச் சந்திப்பது என்வோ நல்லது தான் ஆனால் எங்கிருந்து எங்கு

வந்தடைந்திருக்கின்றீர்கள், அதையும் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். (இன்று பாபா அனைவரையும் எதிர்கால இராஜ்யம் டெல்லியை நோக்கி பயணிக்க வைத்தார்) இன்று பாபாவுடன் சந்தித்தீர்கள் ஆனால் டெல்லியில் சந்தித்தீர்கள். மேலும் டெல்லியைச் சார்ந்தவர்கள், பகவான் நமக்காக வந்துள்ளார் என தங்களின் பெரிய பாக்கியமாக இதனை எண்ணுகின்றனர். முதலில் எல்லாம் இத்தனை பெரிய விழா நடந்ததில்லை, இப்படியாக பாபாவும் குழந்தைகளும் எங்கு சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியும் தானே? எங்கு சந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள்? பாப்தாதாவும் எத்தனை குஷியோடு எங்கு சந்திக்க வந்துள்ளார்? டெல்லியிலா அல்லது மதுவனத்திலா? அனைவரும் எவ்வளவு நிறைந்து விட்டீர்கள். மேலும் தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பு ஏற்படும் அந்த நாள் வரும் என்று எத்தனை காலங்கள் நினைவு செய்தீர்கள். எப்பொழுது வரும்? என்று எல்லோரும் அந்த நாளை நினைவு செய்து கொண்டிருந்தீர்கள். இன்று வந்து விட்டது! இந்த சந்திப்பின் நாள் கூட விசேஷமான நாளாகும். அனைவரின் உள்ளத்திலும் நாம் எங்கு வந்துள்ளோம்? என்ற அளவு கடந்த மகிழ்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. டெல்லியில் வந்துள்ளீர்களா? அல்லது மதுபனிற்கு வந்துள்ளீர்களா? மதுபனின் விசயம் வேறு ஆனால் இன்று டெல்லியில் வந்துள்ளீர்கள். பொதுவாக, யாரால் இவ்வளவு தூரம் செல்லமுடியாதோ அவர்கள் அனைவரும் எவ்வளவு குஷியடைந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு சொர்க்கத்திற்குப் போய்க் கொண்டிருக்கின்றோம் என்பதாகிறது. எத்தனை குஷியின் விசயம்! ஒவ்வொருவரின் உள்ளத்தையும் கேளுங்கள்! இப்பொழுது நீங்கள் வந்தடைந்து விட்டீர்கள். இந்த நாள் எத்தனை சுகமானது மற்றும் சுகத்திலும் சுகமானவர் நமது பாபா! டெல்லிக்கு வந்து விட்டீர்கள். டெல்லியில் இராஜ்யம் செய்யவேண்டும், ஆனால் முதலில் டெல்லியில் சேவையும் செய்ய வேண்டும். மேலும் பாபாவைச் சந்திக்கவும் வேண்டும். அனேகம் பேருக்கு பாபாவைச் சந்திப்பது கூட மிகவும் தூரமான விசயம். பாபாவும் வந்திருக்க முடியாது. இந்த ஒரு போதையும் (சந்திக்கும்) எடுத்துக்கொள்ளுங்கள். குழந்தைகளும் மிகவும் புத்திசாலிகள்! ஆனால் பாபா, குழந்தைகளின் அன்பாது அனைத்து பக்கங்களிலும் உள்ளது என்பதைப் பார்க்கின்றார். குழந்தைகள் அனைவரும் பார்க்க வேண்டும் என்று பாபாவும் யோசிக்கின்றார். இப்பொழுது அபுவில் இருக்கின்றார்கள் என்றால்,

அபுவில் என்னென்ன பார்ப்பார்கள் என்பதை பாபாவும் அறிந்துள்ளார். அங்கு இருக்கும் கொஞ்ச இடங்களையோ பார்த்து விட்டீர்கள். இப்பொழுது வேறு என்ன பார்ப்பீர்கள் எனவே தான் இந்த நிகழ்ச்சி! இங்கு பக்கத்திலுள்ள ஜெய்ப்பூர் போன்ற பிரபலமான இடங்களைப் பார்க்கலாம். உங்களுக்குப் பிடித்தமானதுதானே! பாபா, குழந்தைகளுக்கு சுற்றிக் காண்பிக்கவும் வேண்டும் தானே!

டெல்லி நமது இராஜ்யத்தில் நம்பர்-1. டெல்லியில் இராஜ்யம் செய்வீர்கள் தானே! உங்களின் இராஜ்யம் எங்கு நடக்கும்? டெல்லியில் இராஜ்யம் செய்வீர்கள் தானே! உங்களுக்காக இராஜ்யம் தயாராகிக் கொண்டிருக்கிறது. அனைவரும் குஷி-குஷியோடு சென்றடைந்து விட்டீர்கள். பாருங்கள். மேலும், இவர்கள் எல்லாம் இராஜ்யம் அங்கு தான் செய்யவேண்டும் என்பதால் பாபாவிற்கும் குஷி ஏற்படுகின்றது. டெல்லியில் இராஜ்யம் செய்வீர்கள் தானே. (இராஜ்யம் டெல்லியில் செய்வோம், தபஸ்யா சாந்திவனத்தில் செய்வோம்). நாம் எங்கு இராஜ்யம் செய்வோமோ அந்த நமது இராஜ்யத்தையும் பார்க்க வேண்டும் என்று அனைவரின் உள்ளத்திலும் நீண்ட நாளாக இருந்தது. இப்பொழுதே பாருங்கள், ஏதேனும் சேர்க்க வேண்டும், இதில் கொஞ்சம் குறை தென்படுகின்றது என்றால் பாபாவிடம் கூறிவிடுங்கள். பாபாவும் மகிழ்ச்சியடைவார், குழந்தைகளும் இதில் மகிழ்ச்சி அடைகின்றார்கள். நல்லது! பாபா அந்த இடத்தை அவசியம் பார்க்க வேண்டும் என்று குழந்தைகள் திறந்த உள்ளத்துடன் கூறினால், பாபாவே அழைத்துச் செல்வார். சிலருக்கு சிறிதேனும் களைப்பு அல்லது சோர்வு ஏதேனும் ஏற்பட்டால், அவர்களை 5-நிமிடம் ஏதாவது ஒரு யோகி குழந்தையிடம் சந்திக்க வைத்து, லட்சியத்தை வழங்கி, அவர்களுக்குள் சக்தியை நிறைக்கின்றார்கள். நடுவிலேயே அவர்கள் நின்று விடக்கூடாது இல்லையா! எவ்வளவு பேர் புறப்பட்டு வந்தனரோ, அவர்கள் அனைவரும் சென்றடைய வேண்டுமில்லையா!

நீங்கள் அனைவரும் கூட எங்கு இராஜ்யம் செய்வீர்கள். டெல்லி முக்கியமானது தானே! நாம் அங்கு தான் இராஜ்யம் செய்வோம் என்று தோன்றுகின்றது தானே? நமது இராஜ்யம் தயாராகிக் கொண்டிருக்கிறது. இது அனைத்தும் எதற்காக நடந்து கொண்டிருக்கின்றது? இயற்கை கூட நமக்காக தயாராகிக் கொண்டிருக்கிறது. இயற்கை கூட இவர்களுக்கு

நல்ல உதவியாளராக ஆகியிருகிறது என்பதை பாபாவும் பார்க்கின்றார்கள். ஏனெனில், இந்த குழந்தைகள் நன்றாக உழைக்கின்றனர் என்பதை பாப்தாதா பார்க்கின்றார். உதவி செய்வதில், ஞானத்தை புரிய வைப்பதில், அனைவரும் முயற்சி நன்றாக செய்து கொண்டிருக்கின்றனர். மேலும் அனைவரும் குஷியாக இருக்கிறீர்கள் மற்றும் இந்த சக்கரத்தை சுழற்றுவதிலும் குஷியாக இருக்கிறீர்கள். மகிழ்ச்சியாக உள்ளீர்களா? யார் குஷியாக உள்ளீர்களோ அவர்கள் கைகளை உயர்த்துங்கள். கைகளையோ நன்கு உயர்த்துகின்றனர். என்னதான் சொல்லுங்கள்... பாப்தாதாவும் கூடவேயிருக்கின்றார். இது அதிசயமான விசயம்! குழந்தைகள் கூடவே இருப்பது பாபாவுக்கும் கூட ஆனந்தமாக இருக்கிறது. எனவே குழந்தைகளும் மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றனர். இதோடு மட்டும் இருந்து விடாமல், ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்தையும் பார்க்க வேண்டும் என்று பாப்தாதாவே இந்த புரோக்கிராமை (நிகழ்ச்சி) உருவாக்கியுள்ளார். இராஜ்யத்தைப் பார்க்க வேண்டும் என்ற குஷி ஏற்படுக்கின்றதுதானே! இங்கு இராஜ்யம் நடக்கின்றது மற்றும் முக்கிய இராஜ்யத்தை பார்த்து விட்டீர்கள் என்றால், அனைத்தையும் பார்த்து விட்டீர்கள். அனைவரும் சுற்றிப்பார்க்க விரும்பு கின்றீர்கள், ஆனால் அனைவருக்கும் இடையில் சிறிது ஓய்வும் கொடுகின்றார்கள், அந்தக் களைப்பின் காரணத்தால் அந்தளவு சுற்றவர முடியவில்லை ஆனால் பார்க்க வேண்டுமென்றால் தனது ஆர்வத்தோடு, மனப்பூர்வமாக சுற்றிவந்தால், களைப்பு குறைந்து விடும். நீங்கள் அனைவரும் டெல்லியில் இராஜ்யம் செய்பவர்கள், அவர்கள் (வி.ஐ.பி) சொற்பொழிவு செய்ய வருகின்றார்கள், அவர்களிடம் என்ன தன்மையுள்ளது என்பதை நீங்கள் பார்த்து விட்டீர்கள். அனைவருக்கும் பிடித்திருந்ததா? எங்கு இராஜ்யம் செய்வீர்களோ அதை முன்கூட்டியே பார்த்து விட்டீர்கள். பார்த்து விட்டீர்களா? நன்றாக இருந்ததா? நல்லது.

சேவைக்கான வாய்ப்பு -கர்நாடகா, இன்தோர் மண்டலம்: பாப்தாதாவும் குஷியாக உள்ளார். அனைவரும் அன்போடு தனது இராஜ்யத்தை தயார் செய்து கொண்டிருக்கிறீர்கள், கொஞ்சம் செய்து விட்டீர்கள், கொஞ்சம் செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்களின் இராஜ்யத்தில் என்னென்ன நடந்து கொண்டிருக்கின்றது என்று நீங்கள் நன்றாகப் பார்த்து விடுங்கள். ஏதேனும் முக்கியமாக விடுபட்டிருந்தால், கூறுங்கள். விருப்பம் தானே

டெல்லி? ஏனெனில், பின்னால் இராஜ்யம் செய்ய வேண்டும் அல்லவா? அதுவும் டெல்லியில் தான் செய்ய வேண்டும். இத்தனை நேரமாக அமர்ந்துள்ளீர்கள். எனவே களைத்துப் போயிருப்பீர்கள். அனைவரும் மூன்று நிமிடம் அமருங்கள், மேலும் விடைபெறுங்கள்.

குளோபல் மருத்துவமனையின் வெள்ளி விழா நடந்து கொண்டிருக்கின்றது: மிகவும் நல்லது. இப்பொழுது என்ன செய்யவேண்டும்?

40-தேசங்களிலிருந்து 400-இரட்டை அயல்நாட்டவர்கள் வந்துள்ளார்கள்: அனைவரும் மவுண்ட் அபுவைப் பார்த்து விட்டீர்கள் அல்லவா? ஆனால் நீங்கள் கேட்டீர்கள் தானே, இன்று இந்த ஹாலில் நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கின்றது, இப்பொழுது உங்கள் முன்னே தெரிய வந்தது. பார்த்து விட்டீர்கள், அது எதிரிலேயே தோன்றியது. பார்க்கும் பொழுது போதையும் வருகின்றது. இப்பொழுது இந்த புரோக்கிராம் இன்னும் நடக்கவில்லை, நடக்க வேண்டும், ஆனால் இதே ஹாலில் அனைத்தும் முறைப்படியாக நிகழ்ச்சிகள் நடக்கும். (மோகினி சகோதரியின் நினைவு அதிகமாக வருகின்றது. அவர்கள் எங்குள்ளார்கள் என்று முன்னி சகோதரி பாப்தாதாவிடம் கேட்டார்). இப்பொழுது அவர் சேவை செய்து கொண்டிருக்கின்றார், நல்லது.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

# 05.12.2016 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனைவரது உள்ளமெனும் படத்தில் முதலில் அவ்யக்த சந்திப்பின் நினைவுகள் நிறைந்துள்ளது, அவரது வாயிலும் உள்ளத்திலும் என்னுடைய பாபா, இனிமையான பாபா, அன்பான பாபா!

ஓம் சாந்தி. இன்றைய தினம் பிரம்மாபாபாவின் நினைவு அதிகமாக வருகிறது. இதே நாளில் தான், அவ்யக்த ரூபத்தில் பாப்தாதாவின் சந்திப்பு சூட்சும வதனத்தில் பாகம் நடந்தது, மேலும் அனைவரது முகத்திலும் பாப்தாதாவின் குணம் தெளிவாக வெளிப்பட்டது. அனைவரது வாயிலிருந்தும் ஒரே ஒரு வார்த்தையே வெளிவந்தது. நமது பாபா நமது பாபாவுடன் சந்திக்கிறோம்! அதே நாளில் தான் அனைத்து குழந்தைகளாகிய நீங்கள் அவ்யக்த ரூபத்தில் சந்தித்தீர்கள், எப்படி இப்போது அனைவரும் பாபாவைச் சந்தித்துக் கொண்டிருக்கிறீர்களோ. அப்படி அதுவே முதல் நாள், அவயக்த ரூபத்தில் பாபா குழந்தைகளைச் சந்தித்தார். அனைவரது மனதிலும் அந்த நாள், அப்பக்த சந்திப்பு, அவ்யக்த ரூபத்தில் சந்திப்பும் நிகழ்ந்தது. அவ்யக்த ரூபத்தில் பாபாவின் கண்களில் அவ்யக்த சந்திப்பின் முதல் தினம். அனைவரது உள்ளத்திலும் அவ்யக்த சந்திப்பின் இந்தக் காட்சியைப் பார்த்தார். மேலும் அனைவரும் அவ்யக்த சந்திப்பின் அந்த நாளைக் கொண்டாடினர். ஒவ்வொரு நாளின் லீலையும் தனித்தனி யானது. ஆக இந்த அவ்யக்த தினம் உள்ளத்திற்கு மிகவும் அன்பாக இருந்தது. வியக்த உலகத்தில் இருந்தும் அவ்யக்த சந்திப்பு, அவ்யக்த நாள், அவ்யக்த காட்சி நாலா புறமும் அனைவரது கண்களிலும் தென்பட்டது. அப்படிப்பட்ட அவ்யக்த சந்திப்பின் சபையில், அவ்யக்த ரூபத்தில் பாபா மற்றும் குழந்தைகளின் சந்திப்பு நாள் கொண்டாடப்பட்டுக் கொண்டிருந்தது. அனைவரது வாயிலிருந்தும்

பாபா, ஓ பாபா, இனிமையான பாபா, சாகாரத்தில் பௌதீக நிலை) கூட அவ்யக்த ரூபத்தைப் பார்த்தார். மேலும் இந்த அவ்யக்த தினம் அதே சினேகத்தில், அதே ரூபத்தில் கொண்டாடிக் கொண்டிருந்தனர். அனைவரது உள்ளத்திலும் இந்த அவ்யக்த சந்திப்பு, சாகார ரூபத்திலான சந்திப்பு, இந்த இனிமையான சந்திப்பு உள்ளத்தை மிகவும் கவர்ந்து கொண்டிருந்தது. யாரெல்லாம் சாகாரத்தில் சந்தித்தனரோ அவர்களுக்கு தற்பொழுது அதே சந்திப்பு அவ்யக்த சந்திப்பு அற்புதமான இனிமையான அனுபவத்தை நினைவூட்டிக் கொண்டிருந்தது. என்னுடைய பாபா, இனிமையான பாபா. நினைவிருக்கிறதல்லவா? இந்த சந்திப்பு யாரெல்லாம் இருந்தீர்கள் அந்த முதல் நாளில்? இவ்வளவு பெரிய சபையில் யார் வந்திருந்தீர்கள்? சந்திப்பதற்காக? கை உயர்த்துங்கள்.

பாருங்கள், அந்த சந்திப்பின் நாளானது பரந்த மனதோடு கொண்டாடினீர்கள். ஆக கொண்டாடிக் கொண்டிருக்கும்போது அந்த சமயத்தில் அனைவரும் பார்த்திருந்தீர்கள், அப்பொழுது தான் பாப்தாதா சாகார நிலையில் சந்தித்துக் கொண்டிருந்தார், உடனேயே அவ்யக்த பிரம்மாவின் ரூபத்திலும் சந்தித்தார். அனைவரும் அந்த நாளை நினைவு செய்து கொண்டிருந்தனர். அது அவ்யக்த பாப்தாதாவின் முதல் நாளாக இருந்தது. அனைவரது கண்களிலும் சந்திப்பினுடைய முதல் தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். எப்படி இன்று அவ்யக்த சந்திப்பை கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்களோ, அப்படியே அவ்யக்த நாளைக் கொண்டாடிக் கொண்டிருந்தீர்கள். ஒவ்வொருடைய மனதிலும் அவ்யக்த சந்திப்பின் குஷியைக் கொண்டாடிக் கொண்டிருந்தீர்கள். அனைவரது உள்ளம் என்னும் படத்தில் தானாகவே அந்த நாள் வந்தது. குழந்தைகளை பாபா மற்றும் பாபாவை குழந்தைகள் எந்த ரூபத்தில் சந்தித்திருப்பார்கள்? அந்த நாளின் நினைவு வந்து கொண்டிருந்தது. எதிரில் குழந்தைகள் அமர்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் அந்த நாளை நினைவு செய்து கொண்டிருந்தனர். அதாவது பாபா மற்றும் குழந்தைகளினுடைய தெளிவான சந்திப்பு நினைவிலிருக்கும், எப்படி வதனத்தில் இந்த முதல் நாள் சந்திப்பு நிகழ்ந்து என்று. அந்த சந்திப்பு சற்று நேரம் தான் நிகழ்ந்தது. உடனே அனைவரது முகமும் அந்த மாதிரி இருந்தது, எப்படி என்றால், இந்த நாள் நமக்கு நிரந்தரமாக நினைவூட்டக்கூடியதாக இருக்கிறது என்று நினைக்கும் வகையில் இருந்தது. ஆக அனைவரும் இந்த நாளை சந்திப்பின்

கொண்டாட்டமாகக் கொண்டாடினர். அனைவரது உள்ளத்திலும் என்னுடைய பாபா, என்னுடைய பாபா, என்னுடைய பாபா என்பதோடு கண்களும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. இங்கே அமர்ந்திருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் இரண்டு கண்கள் உள்ளன, ஒரு சிலருக்கு பாவம் அவர்களால் பார்க்கமுடியாமல் இருக்கலாம் ஆனால் பாபாவும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். மேலும் குழந்தைகளும் பாபாவைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இருவரது வாயிலிருந்தும் மேரா பாபா, மேரா பாபா, மேரா பாபா என்ற வார்த்தை வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. நீங்கள் நினைத்துப் பாருங்கள், அந்த சமயத்தின் சந்திப்பில் என்ன இருக்காது அந்த நாளை மறப்பது கூட கஷ்டமே! அந்த நாளை நினைவு. செய்கின்றனர் என்றால் நினைவு வருகிறது, அந்த நாள் நினைவில் இருக்கிறது. முக்கியமாக ஏனெனில், முதல் நாளாக இருந்தது. நிராகாரத்திலிருந்து சகாரத்திலிருந்து, சகாரத்திலிருந்து சூட்சும பிரம்மாவின் ரூபத்தில் பாபா அனைத்து குழந்தைகளையும் சந்தித்துக் கொண்டிருந்தார். அந்தக் காட்சியானது அனைவருக்கும் நினைவில் உள்ளதல்லவா! கண்களில் நீர், கண்களில் அந்த நாளை நினைவூட்டுகின்றன. அனவைரது உள்ளமும் கூறுகின்றது, இந்த நாள் நினைவு செய்வதற்கான மிக முக்கியமான நாள்! மேலும் எந்த சமயம் அந்த அவ்யக்த சந்திப்பு குழந்தைகள் பாபாவைக் கொண்டாடிக் கொண்டிருந்தனர் என்றால், நினைத்துப் பாருங்கள். முழு சபையின் நிலை எப்படி இருந்திருக்கும்! அனைவரும் அந்த நாளின் நினைவில் சென்று விட்டனர். அப்படி அனைவரும் நினைவில் மூழ்கியிருந்தனர், அந்த நாளும் அனைவருக்கும் நினைவிருக்கும். யார் வந்திருந்தனரோ அவர்களுக்கு மிகவும் நினைவு இருக்கும். அந்த நினைவானது மிகவும் ஆழமானது. அனைவரது கண்களும் கங்கை யமுனை நதிகள் போன்றாயிற்று. ஆக இந்த தினம் விசேஷ தினமாகும் அச்சமயத்தில், எப்படி நாம் (எதிர்காலத்தில்) இருக்கப்போகிறோம் என்று அனைவரும் நினைத்தனர் ஆனால் பாபா அறிவார், பாபா கூறினார். இந்த அன்பான தினம் அழுவதற்கான தினம் அல்ல. அன்பின் சொரூபம் எப்படி இருக்கும்? அதனை உணரவைப்பதற்கான காட்சியை காண்பித்துக் கொண்டிருந்தார். ஆக அனைவரும் தங்களது உள்ளத்தின் அன்பை வெளிப்படுத்தினர். நல்லது.

**சேவையின் முறை தில்லி, ஆக்ரா மண்டலம்: 15-ஆயிரம் பேர் வந்திருந்தனர். மொத்தம் 22-ஆயிரம் பேர் குழுமியிருந்தனர்:** நல்லது! யாரெல்லாம் தற்போது சந்திப்பதற்காக வந்திருக்கின்றீர்களோ அவர்கள் அனைவரும் எழுந்து நிற்கின்றனர். மற்றவர்கள் அமர்ந்திருக்கின்றனர். நல்லது பாப்தாதா முக்கியமாக கையை உயர்த்தச் செய்தது எதற்கு என்றால், எவ்வளவு பேர் வந்திருந்தாலும் அனைவருமே சந்திப்பைக் கொண்டாடினர். அனைவரும் கொண்டாடினீர்கள் அல்லவா! இந்த சந்திப்பு உங்களுக்கு ஒரு வீட்டுப்பாடம் (ஹோம் ஒர்க்) தந்துள்ளது. மேற்கொண்டு நாம் (நீங்கள்) என்ன செய்ய வேண்டும் அதையும் (அன்று) கூறினோம். ஆகப் பார்த்தீர்களா! எந்த அளவு குழந்தைகளினுடைய சுபமான நாள் பாபாவிற்கு நினைவிருக்கிறது. எவரையுமே மறப்பதில்லை, விதவிதமான ரூபங்களில் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர் ஆனால் நாமும் பாபாவும் ஒவ்வொரு நாளினுடைய விசேஷத்தையும் மறக்க முடியாது. ஒவ்வொரு நாளின் விசேஷம் நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கிறது. மேலும் விதவிதமான என்னென்ன லீலைகள் நடந்தனவோ அந்த தெய்வீகமான லீலைகளை அவ்வப்போது அனைவரும் பார்த்திருப்பீர்கள்.

**இரட்டை வெளிநாட்டினர், 30-நாடுகளிலிருந்து 300-சகோதர சகோதரிகள் வந்துள்ளனர்:** அனைவருமே மிக அருகில் வந்து விட்டனர். பாபாவின் நினைவில் எவ்வளவு குழந்தைகள் இருக்கின்றனர். ஒவ்வொரு குழந்தையும் அவ்வப்போது வருகின்றனர். நினைவு செய்தவுடன் இங்கே வந்து விடுகின்றனர். அவர்களுடைய விளையாட்டும் அற்புதமானது. வருகிறார்கள். பாபாவைச் சந்தித்து தங்களது உள்ளத்தின் விஷயங்களை திவாராம் பாபாவிற்கு முன்னர் வைக்கின்றனர் பிறகு சென்று விடுகின்றார்கள் ஆனால் அந்த விசயம் மிகவும் மனப்பூர்வமானது இல்லையா? ஆக முழு சபையின் வாயுமண்டலம். இந்த ஹாலின் சூழ்நிலை நினைவு என்னும் சுவர்களினால் அலங்கரிக்கப்பட்ட காட்சியாக இருந்தது அனைத்து சுவர்களிலும் (நினைவு என்னும்) என்னுடைய பாபா! என்னுடைய பாபா அன்பான பாபா இதுவே எழுதியிருந்தது. மிகவும் அழகான டிசைன்களில் எழுதி இருந்தது. உங்கள் பார்வைக்குத் தெரிகிறதா? பார்வையில் வந்ததல்லவா? யாருக்கு அந்த காட்சி தென்படுகிறதோ அவர்கள் கையை உயர்த்துங்கள். ஆக நீங்களும் உங்களது அன்பின்

அடையாளங்களாக என்ன பார்த்தீர்களோ, அதுவே நினைவுச்சின்னமாகி விட்டன. நினைவார்த்த அந்த நாளை எப்பொழுதுமே (கஷ்டப்பட்டு) நினைவு செய்ய வேண்டியதில்லை, ஆனால் அந்த நாள் நினைவுச்சின்னமாகவே ஆகி விட்டது.

தாதிகளுடன்: சபையைப் பார்த்தீர்களா? (ஜானகி தாதி கூறுகின்றார் -பாபாவைப் பார்த்தேன்) பாபாவைப் பார்த்தீர்கள் என்றால், அனைத்தையும் பார்த்தீர்கள்! அனைவரின் உள்ளத்திலும் அன்பு என்னும் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்தனர். அனைவரது முகத்தையும் பாருங்கள். இப்பொழுதே ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கின்றனர். அனைவரும் எங்கே அமர்ந்திருக்கின்றனர். அனைவரும் ஊஞ்சலில் அமர்ந்திருக்கின்றனர். அனைவரும் பாபா, பாபா என்று உள்ளத்தில் கூறிக் கொண்டேயிருக்கின்றனர். இல்லையென்றால், மிகுந்த குழப்பமாகி விடும். தற்போது அனைவரது உள்ளத்திலும் என்ன ஓடிக் கொண்டிருக்கிறது. பாபா, பாபா. பாபா நல்லது அல்லவா! பாபாவும் குழந்தைகளினுடைய அன்டைப் பார்த்து குஷி அடைகிறார். எவ்வளவு அன்பு இவர்களது உள்ளத்தில் நிறைந்துள்ளது. மேலும் எவ்வளவு மனப்பூர்வமாக வர்ணனை செய்து கொண்டிருக்கின்றனர். பாருங்கள் பாப்தாதாவின் உள்ளம் என்ன கூறிக் கொண்டிருக்கிறது. சொல்லட்டுமா? நீங்கள் கூறவில்லை என்றால் பாபா கூறுகிறார். ஒவ்வொருவருடைய முகமும் பேசுகிறது. மிகவும் தூரம் தூரமாக உள்ளனர். புரிந்துக் கொள்ள முடியாது ஆனால் அனைவரும் உள்ளத்தால் பேசுகின்றனர். உள்ளத்தின் விசயங்கள் முதலில் பாப்தாதாவிடம் வந்தடைகிறது. அனைவரது முகங்கள் இருக்கின்றனவே அவைகளை போட்டோ எடுப்பவர் தன்னுடைய சிறு கேமராவில் அடைத்துக் கொள்கிறார். மேலும் பாருங்கள் சிலரது முகங்கள் சோர்வாக உள்ளது, என்னென்ன எண்ணிக் கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை, ஆனால் பாபாவிற்கு அந்த குழந்தைகளைப் பார்க்கும்போதும் எப்பொழுதுமே மகிழ்ச்சியாக இருப்பது போல் தெரிகிறது. உள்ளத்தில் எப்பொழுதும் ஏதேனும் படம் சந்திப்பைப் பற்றியதாக இருக்கிறது. (பாபாவை சந்திக்கும்) படமாக இருக்கிறது. நீங்கள் இருக்கிறீர்கள் இல்லையா, இப்பொழுது முக்கியமாக சந்திப்பின் தினத்தன்று (இரத்தன் மோகினி தாதியுடன்) உங்களது உடல் ஆரோக்கியம் சீராகிக் கொண்டிருக்கிறது அல்லவா!

பாபா நம்மை சந்தித்துக் கொண்டிருக்கின்றார் என்று நினைப்பீர்கள் என்றால், பாபா நம்மை சந்தித்துக் கொண்டிருக்கின்றார் என்ற உணர்வு (அனுபவம்) ஏற்படும். பாபா சூட்சுமாக தூரத்தில் இருக்கிறார் ஆனால் சூட்சுமத்தில் பாப்தாதாவின் முகம் உள்ளத்தில் நிறைந்திருக்கிறது. உள்ளத்திலோ ஒவ்வொருவரும் நிறைந்திருக்க முடியும் அல்லவா! என்ன ஆனாலும் சரி, புயல், சூறாவளி வந்தாலும் சரி, ஆனால் உள்ளத்தின் சந்திப்பு உள்ளத்தினுடைய நிலை, உள்ளத்திற்கான உணவு. அனைத்தும் மிகவும் அன்புடன் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அனைவரும் குஷி அடைகிறார்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

**31.12.2016 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்**

**உள்ளம் கவர்ந்தவர் ஒருவர், உள்ளம் படைத்தவர்கள் அனேகர், அனைவரது உள்ளத்திலும் எனது பாபா நிறைந்துள்ளார். இந்த சுகமான வாழ்வில் தான் ஆனந்தம்! எதுவானாலும் சரி, சைகை கிடைத்தவுடன் ஒரே ரசனையின் நிலையில் ஸ்திரமாகி விடும் பயிற்சி செய்க! ஆர்டர் பிரகாரம் அதீந்திரிய சுகத்தில் திளைத்திடுங்கள்!**

ஓம் சாந்தி! அனைவரது மனதினுள் யார் நிறைந்திருக்கிறார்? முழு சபையில் இவ்வளவு பேர் இருந்தாலும், அனைவரும் பாபாவிடமிருந்து எவ்வளவு அன்போடு திருஷ்டியை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரின் பார்வையிலும் பாபா மற்றும் பாபாவின் குழந்தைகள் மிகவும் சிநேகத்துடன் நிறைந்துள்ளனர். அனைவரது உள்ளமும் என்னுடைய பாபா! என்னுடைய பாபா! என்னும் ஒரே விஷயத்தை மட்டுமே கூறிக் கொண்டிருக்கிறது. அனைவரும் எவ்வளவு அன்புடன் தமது நினைவைக் கொடுத்துக் கொண்டிருந்தனர். எவ்வளவு பேர் இருந்தாலும் சரி, எங்கிருந்தாலும் சரி. அனைவரது உள்ளத்திலும் ஒரே நினைவு, அது என்ன? என்னுடைய பாபா! அனைவரது உள்ளத்திலும் என்ன? என்னுடைய பாபா மட்டுமே! அனைவரது உள்ளத்திலும் பாபாவின் அன்பு கீதம் என்று சொன்னாலும் சரி, கவிதை என்றாலும் சரி, நிறைந்துள்ளது. ஆஹா! எனது உள்ளத்தின் பாபாவே! என்று அனைவரது உள்ளத்திலும் இந்த ஒரு கீதம் மட்டுமே ஒலித்துக் கொண்டிருக்கிறது. பாபாவும் நானும் இது தானே! அனைவரது உள்ளத்திலும் நான் மற்றும் எனது பாபா! இருவராக இந்த போழ்திலும்

ஒருவரே! ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஒரே பாபா நிறைந்துள்ளார். ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கேளுங்கள்: என்னுடைய உள்ளத்தில் யார் இருக்கிறார்? அற்புதம் இது தான்! உள்ளங்கள் அனேகம், ஆனால் அவைகளில் நிறைந்திருப்பவர் ஒரே ஒருவர். உங்கள் உள்ளத்திலும் யார் இருக்கிறார்? கை உயர்த்துங்கள்! உள்ளமுடையோர் எவ்வளவோ பேர் ஆனால் அனைத்து உள்ளங்களிலும் நிறைந்திருப்பவர் ஒரே ஒருவரே! இது அற்புதம் தானே! அனைவருடைய உள்ளத்திலும் ஒரே ஒருவர்! அவர் அவ்வளவு அன்பானவர், அவரை மறப்பதற்கான முயற்சி எவ்வளவு செய்தாலும், அவரை மறக்க முடிவதே இல்லை. நினைவு அதிகமாகிக் கொண்டேபோகிறது. இதுவே அற்புதம்! என்னவென்றால், முழு சபையும் கூறும் என்னுடைய பாபா. உள்ளத்திலும் ஒரே நினைவு தான், என்னுடைய பாபா, இனிமையான பாபா!, அன்பான பாபா!. இதில் எவ்வளவு அன்பு நிறைந்துள்ளது. அனைவரது உள்ளத்திலும் ஒரே பாபா நிறைந்துள்ளார். எவ்வளவு பேர் அமர்ந்துள்ளீர்கள், ஆனால் உள்ளத்தில் நிறைந்தவர் ஒரே ஒருவரே! அனேகர் இங்கு உட்கார்ந்திருக்கலாம் ஆனால் அனைவரது உள்ளத்திலும் ஒரே ஒரு பாபா நிறைந்துள்ளார். அனைவரது உள்ளத்திலும் யார்? என்னுடைய பாபா! பாபா எவ்வளவு அன்பானவர்? இவ்வளவு பேர் இங்கிருக்கலாம் ஆனால் பெரும்பாலும் அனைவரது உள்ளத்திலும் பாபாவே நிறைந்துள்ளார். என்னுடைய பாபா! உள்ளத்தில் அந்த அளவு நிறைந்துள்ளார், உள்ளத்திலிருந்து வெளியேறுவது மிகவும் கஷ்டம். அனைவரும் அன்போடு என்ன கூறுகின்றனர்? என்னுடைய பாபா எப்படி இருக்கிறார்? என்ன செய்து கொண்டிருக்கிறார்? என்னுடைய பாபா, என்னுடைய பாபா! பாடல் கூட உள்ளதல்லவா! பாட்டு பாடலாமா, அதுவும் ஒன்றாகத்தான் இருக்கும். இங்கே அமர்ந்து கொண்டு, இவ்வளவு பேருக்கு மத்தியில் கை தூக்கினால் அனைவரது உள்ளத்திலும் யார் இருக்கிறார்? அனைவருமே கூறுவார்கள். என்னுடைய பாபா! அனைவரும் நேராகக் கைத் தூக்குங்கள். அனைவரது நீளமான கைகளைப் பார்க்க எவ்வளவு ஆனந்தமாக உள்ளது. வெளியில் (வாய் மூலம்) பாடுவதில்லை, ஏனெனில், வெளியில் பாடும்போது வித்தியாசம் ஏற்பட்டுவிடுகிறது. மற்றபடி உள்ளத்தில் அனைவரதும் ஒன்றே! அனைவரது உள்ளமும் என்ன கூறுகிறது? என்னுடைய பாபா! என்னுடைய பாபா! மேலும் அனைவரும் ஒரே ஒரு பாபாவை நினைத்து மிகவும் மகிழ்ச்சி

அடைந்துக் கொண்டிருக்கின்றனர். அனைவரது முகத்தைப் பாருங்கள்! அனைவரது உள்ளமும் ஒரே ஒரு பாடலைப் பாடிக் கொண்டிருக்கிறது. மேரா பாபா மீட்டா பாபா! இவ்வளவு அநேக உள்ளங்கள் இருக்கும்போது, அனைவரது உள்ளத்திலும் யார் இருக்கிறார்கள்? என்னுடைய பாபா! எவ்வளவு ஆனந்தம் ஏற்படுகிறது, எதுவானாலும் சரி, நமது உள்ளத்தில் மேரா பாபா, மேரா பாபா! இவ்வாறு சதா என்னுடைய பாபா, என்னுடைய உள்ளத்தில் இருக்கிறார். இதனைப் பார்த்து அனைவரும் மகிழ்ச்சி அடைகின்றனர். இவ்வளவு பெரிய சபையில் இவ்வளவு பேர் அமர்ந்துள்ளனர். அனைவரது உள்ளத்திலும் ஒரே ஒருவர் தான் அப்படித்தானே! அனைவரது உள்ளத்திலும் யார் இருப்பார்? பாபா. ஒருவரே அனைவரது உள்ளத்திலும், நீங்களும் கூறுவீர்கள், என்னுடைய பாபா அவரும் (பிரம்மாபாபா) கூறுவார் என்னுடைய பாபா! அவரும் கூறுவார் (சிவபாபா) மேரா பாபா! எவ்வளவு ஆனந்தம்! ஆக சதா இவ்வாறே உள்ளத்தில் பாபா இருக்கவே இருக்கிறார். யாராவது பார்த்தார்கள் என்றால் என்ன தென்படும்? என்னுடைய பாபா வீற்றிருக்கிறார். நாலா புறங்களிலும் பார்த்தால் யார் அமர்ந்திருக்கிறார்? எனக்குள் பாபா அமர்ந்திருக்கிறார் என்னுடைய பாபா!

பாபா எப்போதும் கூறுகிறார், என்னுடைய பாபா என யாரும் வெளியே எடுத்து விடாதபடி மறைத்து வையுங்கள். எல்லோருடைய முகத்தையும் பாருங்கள். இங்கே அமர்ந்திருப்பவர்கள் அனைவரது உள்ளத்திலும் என்னுடைய பாபா. அனைவரது முகத்தை யும் பாருங்கள். எவ்வளவு மலர்ச்சியுடன் இருக்கிறது! எவ்வளவு உள்ளுக்குள்ளேயே நடனமாடிக் கொண்டிருக்கிறார்கள் என்னுடைய பாபா, என்னுடைய பாபா வந்து விட்டார். எனது உள்ளத்தின் பாபா: கூறும்போதே எவ்வளவு இனிமையாக இருக்கிறது என்னுடைய பாபா! அவ்வாறே எப்போதும், என்ன செய்து கொண்டிருந்தாலும் என்னுடைய பாபா என்பதை மறக்கவே மறக்காதீர்கள். அனைவரது உள்ளத்தின் அடியிலும் ஒருவரே உள்ளார். யாராவது ஒரு சிலரிடம் இல்லாதிருந்தாலும் ஆனால் உண்மையில் இந்த சபை எப்படிப்பட்ட உள்ளத்தில் உள்ளம் கவர்ந்தவர்! அனைவரது உள்ளத்தையும் பாருங்கள், என்ன இருக்கிறது? உள்ளம் கவர்ந்தவர்! அவ்வாறே பாபா விரும்புகிறார். என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். என்னுடைய

பாபா. இது உள்ளத்தில் நிறைந்திருக்க வேண்டும். அனைவரது உள்ளத்திலும் என்ன இருக்கிறது? சடையின் அனைவரது உள்ளத்திலும் இப்போது என்ன இருக்கும்? இனிய எனது இனிமையான பாபா: இவ்வாறு உள்ளத்தில் உள்ளம் கவர்ந்தவரை வைத்திருக்கும் சபை இது. உள்ளம் கவர்ந்தவர் ஒருவர்! உள்ளம் உடையவர்கள் எவ்வளவு பேர்? அனைவரது உள்ளத்திலும் ஒரு பாபாவே நிறைந்திருக்கிறார். யார் எவ்வளவு தான் கூறினாலும் சரி. இல்லை உள்ளத்தில் வேறு ஏதோ இருக்கிறது என்று கூறினாலும் அது நிற்காது. என்னுடைய பாபா என்பது தான் உண்மை. எவ்வளவு ஆனந்தமாய் இருக்கிறது! அனைவரது உள்ளத்திலும் ஒரே ஒருவர் இந்த சூழ்நிலை. பாருங்கள்! எவ்வளவு சுகம் நிறைந்ததாக உள்ளது அதீந்திரிய சுகத்தின் சபையைப் பார்க்க வேண்டுமென்றால், இங்கே பாருங்கள் என்ன நடந்தாலும் அனைவரது உள்ளமும், இதையே கூறும். ஆஹா! பாபா! ஆஹா! அனைவரது உள்ளத்திலும் யார் வீற்றிருக்கிறார்? இதில் ஆனந்தம் என்னவென்றால், இவ்வளவு பேர் இருந்த போதிலும், இடையிடையே வேறு சிலர் கூட இருக்கலாம் ஆனால், பெரும்பான்மையோர் இந்த சமயத்தில் பாபா, பாபா என்று கூறும் போது அனைவரது உள்ளத்திலும் பாபா உறைந்திருக்கிறார். இதில் எவ்வளவு ஆனந்தம் பிறக்கிறது: அது மாதிரி, இந்த சபையினுள் என்ன அதிர்வலைகள் (வைப்ரேஷன்) எழுகின்றன! ஒரே ஒரு பாபாவின் நினைவு! அனைவரிடமும் கேட்போம். உங்களது உள்ளத்தில் யார் இருக்கிறார்? அனைவருமே கூறுவர், என்னுடைய பாபா! ஆக பேரானந்தம் தானே! சபை ஒன்றே ஒன்று ஆனால், ஒவ்வொருவரிலும் அந்த ஒருவரே. ஒரே சபை, ஒரே மந்திரவாதி, அனைவரின் உள்ளமும் என்ன பாடிக் கொண்டிருக்கிறது? ஆஹா! என்னுடைய பாபா! ஆஹா! இப்பொழுதே கூறுங்கள். ஆக தினமும் அதிகாலையில் தயாராகி விட்டு போகிறீர்கள். பொதுவாக, அனைத்து காரியங்களையும் செய்து கொண்டே பாபா நினைவில் இருக்கிறார் என்றாலும், தயாராகிக் கொண்டிருக்கும் போதே. அவர் நினைவில் வேலை செய்தால் எவ்வளவு ஆனந்தமாய் இருக்கிறது! அந்த மாதிரி யாராவது இப்போது இருக்கிறீர்களா? சத்யுகத்தில் அல்ல. இங்கே பாபா நினைவில்லாது அந்த மாதிரி இருக்கிறீர்களா? அல்லது வேறு யாராவது பாபாவை நினைவு செய்யக் கஷ்டப்பட்டு முயற்சி செய்து கொண்டிருப் பவர் இங்கே இருக்கிறீர்களா? கையை உயர்த்துங்கள்! முழு சபையும் பாருங்கள்! எவ்வளவு நன்றாக இருக்கிறது. நினைவு செய்வதில் வேறு

என்ன உள்ளது? ஆனந்தமே ஆனந்தம் தான்! வேறு நமக்கு என்ன வேண்டும் உங்களது மனதில் என்ன இருக்கிறது? என்று யாராவது கேட்டால் என்ன பதில் சொல்வீர்கள்? பாபா! பாபாவிற்கு உள்ளத்தைத் தந்து விட்டேன். எப்பொழுது நினைவு செய்தாலும் சரி, அப்பொழுது எனது பாபா. ஆக ஒரே ஒருவரின் நினைவில் ஆனந்தம் ஏற்படுகிறது அல்லவா! ஆனந்தம் ஏற்படுகிறதா? ஏனெனில், ஒரே ஒருவரின் நினைவல்லவா! நினைவு வந்ததா? வரவில்லையா? என்று சொல்வதற்கு பல பேருடைய அல்ல இது: ஒரே ஒரு பாபா. இந்த நினைவின் மூலம் என்ன கிடைப்பதில்லை நமக்கு? மாருக்கு என்ன வேண்டுமோ. குஷி வேண்டுமா? அல்லது துக்கம் வேண்டுமா? அனைவரது உள்ளத்திலும் குஷியின் அலைகள். ஏனெனில், இப்பொழுது நம் நேரமே குஷியின் நினைவாகும். ஆக ஒரு வினாடியில் குஷி வந்ததா? அல்லது கஷ்டப்பட்டு முயற்சிக்க வேண்டி உள்ளதா? எவ்வளவு அன்பிருக்குமோ. அங்கு கடினமான முயற்சி தேவையிராது. இப்பொழுது பாபாவையே நினைவு செய்யுங்கள். பிற அனைத்தையும் மறந்து விடுங்கள். ஆக ஒரு விநாடியில் நீங்கள் அனைவரும் செய்து விடுவீர்கள் தானே! இது கஷ்டமா? பாபா இப்பொழுது ஓம் சாந்தி என்று சொன்னால், நீங்கள் அனைவரும் ஒரே வினாடியில் அந்த ஓம் சாந்தியின் சொருபத்தில் நிலைத்து விட முடியுமா? ஆம் அல்லது இல்லை சொல்லுங்கள்! ஒரே வினாடியில் சொன்னீர்கள் என்றால், ஒரே வினாடியில் ஆங்காங்கிருந்து சரி என்கிற பதில் வரவேண்டும். அது தான் மகிழ்ச்சி! பயராவது சிலரிடமிருந்து வரவில்லையென்றாலும் அதுவும் சரியல்ல! மன் மனாபவ என்று சொல்லும் போது, மன்மனாபவ நிலையில் எல்லோரும் ஆகி விட வேண்டும் அல்லவா! இது நடக்க கூடியது தானே பாபா செல்லுங்கள். என்று சொன்னவுடனே அனைவரும் தங்கள் நினைவுப் பயணத்தில் ஒரே வினாடியில் சென்று விடவேண்டும். இங்கே இப்போது அமர்ந்திருப்பவர்கள் அனைவரும் ஒரு வினாடியில் பாபா நினைவில் அமர முடியும் தானே! அனைவரும் இவ்வாறு ஒரே ஒருவரது நினைவில் இருக்கும் போது எவ்வளவு ஆனந்தம்! எவ்வளவு சுகம் நிறைந்த வாழ்க்கை இது! தற்போதைய நமது ஸ்திதி (அவஸ்தா) சுகம் நிறைந்ததாக உள்ளது என்பவர்கள் கை உயர்த்துங்கள்: நல்லது. பாருங்கள்! முன்னாலும் பின்னாலும் தங்கள் முகத்தைப் பாருங்கள்! என்னவாக உள்ளது? அனைவரும் அன்பிலே, நினைவிலே நிறைந்துள்ளீர்கள். இந்த நிலையில் எவ்வளவு

நேரமானாலும் இருக்க முடியும் ஆனால் அதற்குப் பயிற்சி வேண்டும். தற்போது எல்லோருக்காகவும் கூறுகிறீர்கள். ஒரு விநாடியல்ல, ஒரு நிமிடத்தில் இந்த போதையில் ஆஹா? எனது அதீந்திரிய சுகம் நிறைந்த வாழ்க்கை! இவ்வாறு பாபா கூறினால், ஒரே விநாடியில் ஒவ்வொருவரும் தங்கள் மனோ ஸ்திதியை (அவஸ்தா) ஆக்கிக் கொள்ள முடியுமா? கை உயர்த்துங்கள். பார்ப்போம்! நேராக ஆக இந்த பயிற்சி மிக அவசியம். என்ன ஆனாலும் சரி, ஏதேனும் வலி அல்லது வேறு ஏதேனும் விஷயம் நடந்தாலும் சரி. நம் மூகத்தில் வித்தியாசம் வரக்கூடாது. புன்சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும். இந்த மாதிரியான பயிற்சி அவசியம் வேண்டும். இப்பொழுது அதீந்திரிய சுகத்தில் அமருங்கள் என்ற கட்டளை கிடைத்தால் அம்மாதிரி அமர முடியுமா? இப்பொழுதே 2-நிமிடம் அனைவரும் ஒரே ரசனையில் அமருங்கள்... (அனைவரும் டிரில் செய்கின்றனர்) அதீந்திரிய சுகம் என்ற இந்த அலையில் பயிற்சி செய்துப் பாருங்கள்! எவ்வளவு ஆனந்தம் ஏற்படுகிறது! இந்த அதீந்திரிய சுகம் என்ற ஊஞ்சலில் ஆடும்போது எவ்வளவு சுகம் கிடைக்கிறது! என்ன விஷயமானாலும் சரி, எதிரில் எது வந்தாலும் சரி. ஆனாலும் இந்த சுகத்தை மறந்து விடக் கூடாது. இது உங்களால் முடியும் தானே! நீங்கள் அவ்வாறு நடக்கக்கூடும் என்று அப்படிச் சொல்லக்கூட டாது. நடந்தே தீரும். ஏனெனில், நமது வாழ்க்கை என்பதே என்ன? உங்கள் மனதை நீங்கள் கேளுங்கள் என் மனதில் என்ன இருக்கிறது? நீங்கள் உங்கள் உள்ளத்தைப் பாருங்கள். அதில் ஏதேனும் துக்கம், அசாந்தி இருக்கிறதா? அவ்வாறு இருந்தால் அதற்கான காரணம் என்ன? என்பதை நீங்கள் கேட்கக் கூட செய்யலாம். அதன் பிறகு முற்றிலும் நீக்கி விட வேண்டும். பாபா, எனது குழந்தைகளே! என்று கூறுகிறார், அவ்வாறு கூறுகிறார்கள் தானே! என்னுடைய குழந்தை ஆனால் குஷி இல்லை என்று கூற முடியாது. என்னுடைய குழந்தைகள் பெரும்பாலானோர் குஷியாக இருப்பார்கள். அந்த பெரும்பான்மையான குழந்தைகளே கூறுங்கள் பாாப்போம். உள்ளுக்குள் ஏதேனும் குறைகள் இன்னும் இல்லையே? ஏனெனில் நமது வாழ்க்கை எம்மாதிரியான வாழ்க்கை? உங்களைப் பற்றிய அறிமுகம் கூறச் சொன்னால் என்ன சொல்வீர்கள்? சுகம், சாந்தி, ஆனந்தம், அன்பு இதுவே எமது வாழ்க்கை என்பீர்கள் ஆனால் அப்படி இருக்கிறதா? ஆனால் இப்போது அம்மாதிரி வாழ்க்கை இலலை என்றால், வேறு வித வாழ்க்கை ஏன் வந்தது? இந்த வாழ்க்கையில் தான்

இருக்க வேண்டும் என்பது தான் பாபாவின் கட்டளை. அப்படியிருக்க ஏன் அதனை நீங்கள் விட்டீர்கள்? இந்த சுகம் நிறைந்த நிலையான வாழ்க்கை சதா காலத்தி;ற்கும் இருக்க வேண்டும் அல்லவா? நாங்கள் அப்படித்தான் வாழ்கிறோம் என்று உங்களில் கூறுவோர் எத்தனை பேர்? கை உயர்த்துங்கள்: நன்றாக கையை உயர்த்துகின்றீர்கள். இன்னும் முயற்சி செய்வோம். அது என்ன பெரிய விஷயமா? எப்படி நம் நிலையை ஸ்திரமாக வைத்திருப்போமோ அப்படியே அது அமையும். கடைசியில் எஜமானர் யார்? எஜமானர் நமக்கு நாம் தானே இல்லையா: இதில் கவனம் மட்டும் தேவை. கவனம் என்பது இங்கும் அங்கும் தாவி விடுகிறது. இப்படி அதுவும் சுற்றிக் கொண்டு வருகிறது. ஆக நாள் முழுவதும் இதனை அனுபவம் செய்ய வேண்டும். ஏனெனில் இந்த அப்பியாசம் மிகவும் அவசியம். இறுதியில் ஏதேனும் விஷயம் வந்தாலும் உங்களது ஒரே ரசனையில் இருக்கும் நிலைக்கு என்ன சைகை கிடைக்கிறதோ அதிலேயே உறுதியாகி விட வேண்டும். இந்த அப்பியாசத்தை நாள் முழுவதும் ஒவ்வொருவரும் ஒத்திகைப் பார்க்க வேண்டும். நல்லது. ஒரு மணி நேரம் அந்த மாதிரி நிலையில் அமர்ந்தால் அது ஒன்றும் பெரிய விஷயமில்லை. என்னுடைய நிலை தானே! அவ்வாறு அமரவில்லையென்றால், அது நமது குறையே (பலவீனம்) ஆகும். இந்த நிலையில் உறுதியாக நிலைத்திருக்க முயற்சித்தீர்கள் என்றால். உங்கள் வாழ்க்கையில் சுகமான படுக்கையில் ஆனந்த சயனத்தில் இருப்பது போன்று அனுபவமாகும். இந்தப் பயிற்சி அவசியம் தேவை. என்ன ஆனாலும் சரி. என்னுடைய ஸ்திதி (மனோ நிலை) என்னுடைய கைவசம் இருக்க வேண்டும். ஆக இவ்வளவு பேர் அமர்ந்துள்ளீர்கள். அந்த சமயத்தில் (சற்று நேரத்திற்கு முன் டிரில் செய்தபோது) உங்களது ஸ்திதியை சரியாக வைத்திருக்க முடிந்ததா? இந்த உங்களுடைய புருஷார்த்தத்தை (முயற்சி) சோதியுங்கள். அல்லது எனது இந்தப் பக்கத்தவர் சரியாக அமர்ந்திருக்கிறார் ஆனால் அந்தப் பக்கத்தில் அமர்ந்திருப்பவர் சரியாக அமரவில்லை என்று சிந்திக்க ஆரம்பித்தீர்களா? உங்கள் ஸ்திதி உங்கள் கையில் தானே இருக்க வேண்டும்! நல்ல ஸ்திதியில் ஸ்திரமாக (உறுதியாக) நிலைத்திருக்க விரும்பு கிறீர்கள் என்றால் அவ்வாறு நடக்க வேண்டும் அல்லவா! அவ்வாறு நிலையாக வைத்திருக்க முடியவில்லை என்றால், இதனை என்ன வென்று சொல்வது? யோகி? மேலும் மெது மெதுவாக இந்தப் பயிற்சி நடந்துக் கொண்டே

இருக்குமானால், எப்பொழுது விருப்பமோ, அப்போது இதில் நிலைத்திருக்க முடியும். நாள் முழுவதும் நிலைத்திருப்பதற்கான முயற்சி செய்து கொண்டிருப்பீர்கள். அதனை ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே சுய சோதனைச் செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு நாள் முழுவதும் செய்ய முடியும் என்றால், அது நம் கையில் தான் உள்ளது. நமது புத்தியை ஸ்திரமாய் வைத்திருப்பது நமது கையில் தான் உள்ளது. மேலும் செய்யவும் முடியும். தற்போது அனைவரும் அமர்ந்திருந்தீர்கள் (டிரில்) ஆக, தங்களது நல்ல நிலையை அனுபவம் செய்தீர்களா? யார் செய்தீர்கள், உங்கள் இதயம் அதை ஒத்துக் கொள்கிறதா? கை உயர்த்துங்கள். நல்லது. கை என்னவோ அனைவரும் உயர்த்தினீர்கள். நல்லது. சிலருக்கு சிறிய அளவில் அனுபவம் ஏற்பட்டிருக்கும். சிலருக்கு அதிக அளவில் (அனுபவம்) ஏற்பட்டிருக்கும் ஆனால் எவ்வளவு நேரம் வேண்டுமோ, அவ்வளவு நேரம் நிச்சயம் அனுபவம் ஏற்பட வேண்டும். அனைவரும் ஒரு சிறு முயற்சி மட்டும் செய்துள்ளீர்கள். இதனை மீண்டும் கட்டாயம் தொடர்ந்து செய்து கொண்டிருங்கள். எந்த சமயத்தில் வேண்டுமோ, அந்த சமயத்தில் நிலையை அனுபவத்தில் கொண்டு வர முடிகிறதோ, அவரையே யோகேஷ்வருடைய வரிசையில் கொண்டு வர முடியும். யாருக்கேனும் விருப்பம் இருப்பின் நான் இந்த சமயத்தில் இம் மாதிரியான சூழ்நிலையிலும் கூட எப்படிப்பட்ட ஸ்திதியை விரும்புகின்றேனோ, அதனை அடைய முடியும். அப்படிப்பட்டவர்கள் கையை உயர்த்துங்கள். அவ்வாறு செய்ய முடியும் தானே? அநேகம் பேர் கையை உயர்த்தினார்கள். நல்லது. எப்போது நமக்கு விருப்பமோ அப்போது அரை மணி நேரமாவது அமர முடியும் என்கிற அப்பியாசத்தை இடையிடையே உங்களுக்கு நீங்களே செய்து வரவேண்டும். சிறிதளவு கவளத்தை அதிகமாக தர வேண்டும். ஏனெனில், இறுதியில் மனதின் கட்டுப்பாட்டின் நிலைக்கு முன்னால் முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும். இவ்வளவு அதிகம் பேர் நீங்கள் கட்டாயமாக அமர்ந்திருக் கிறீர்கள். ஆனாலும் குழுவாக அமர்ந்தும் கூட அரை மணி நேரம் அல்லது கால் மணி நேரத்திற்கு கட்டளை கிடைக்கிறது என்றால், அம்மாதிரி எவ்வளவு நேரம் வேண்டுமோ அவ்வளவு நேரம் தன்னைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். இந்த அப்பியாசம் கூட அவசியமாகும். எப்பொழுதாவது நமது நிலை (ஸ்திதி) எப்படி இருந்தாலும், எவ்வளவு நேரம் நமக்கு விருப்பமோ, அவ்வளவு நேரம்

அந்த ஸ்திதியில் நாம் நிலைத்திட வேண்டும். இப்போது பகல் நேரமாக இருக்கலாம். பிறகும் கூட இச்சமயத்தில் கட்டுப்பாட்டுடன் இருக்க விரும்பினால் நம்மால் கட்டுப்படுத்த இயல வேண்டும். இந்தப் பயிற்சியும் செய்ய வேண்டும். அவ்வாறு செய்ய முடியுமா? இவ்வளவு செய்ய முடியுமா? சாதாரண ரூபத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். இப்போது உடனேயே கட்டுப்படுத்த வேண்டும் என்ற ஆர்டர் கிடைக்கிறது. நீங்கள் அரை மணி நேரம் இந்நிலையில் ஸ்திரமாய் இருக்க வேண்டும் என்றால், உங்களால் முடியுமா? அல்லது அடிக்கடி கவனம் கொடுக்க வேண்டுமா? அதுவும் இருக்கும் ஆனால் எப்போது விருப்பமோ, அப்போது நம்மை நாமே தடுத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பயிற்சியும் வேண்டும். தடுக்க வேண்டிய விருப்பம் இருக்கும் போது தடுக்க முடியும் என்பவர்கள் கையை உயர்த்துங்கள். தடுக்க விருப்பம் இருக்கும் பட்சத்தில், அந்த நிலையில் நிச்சயமாக நிலைத்து நிற்க முடிய வேண்டும். இதுவும் பயிற்சியில் கொண்டு வர வேண்டும். ஏனெனில் நேரம் அந்த மாதிரி வர இருக்கின்றது. கட்டளைக் கிடைத்தவுடன் அதைச் செய்து முடிக்க வேண்டும். ஆர்டர் என்றால் ஆர்டர். கட்டளை இப்போது கிடைத்தது. நடைமுறையில் வருவதற்கு நேரம் ஆகிறது என்று அப்படி இருக்கக்கூடாது. ஒரு நாளில் எந்த சமயத்தில் ஓய்வு கிடைக்கிறதோ அந்த சமயத்தில் கட்டளைக் கிடைக்கும்போது அது நிறைவேற்றப்படுகிறது. அம்மாதிரி புருஷார்த்தம் முயற்சி செய்ய வேண்டும். இந்த அப்பியாசம் மிகவும் அவசியம். உதாரணமாக பத்து நிமிடங்கள் நான் அமர்வதற்கு எண்ணினால் ஐந்து நிமிடம் உட்கார முடிந்தது. எப்படி இருந்தாலும் கட்டளையை ஏற்றுக் கொள்வது (கீழ்ப்படிவது) வரவேண்டும். இது அவசியம். தற்போது அவ்வாறு நடக்கக்கூடும் என்று நினைக்கிறீர்களா? நல்லது.

**சேவையின் முறை உ.பி. பனராஸ், கிழக்கு நேபாளம்: 11000-பேர் உ.பி.யிலிருந்து வந்துள்ளனர். மொத்தம் 23,000-பேர்.** அனைவரும் இப்படிப்பட்ட முயற்சியை செய்து கொண்டிருக்கிறீர்களா? மேலும் செய்து கொண்டிருக்க வேண்டும். ஏனெனில் பயிற்சி இருந்தால் தான் பிறருக்கு எடுத்துரைக்க முடியும். அப்படி இல்லையென்றால், பிறருக்குக் கூறுவதற்கு வெட்கமாய் இருக்கும். எனவே இந்தப் பயிற்சி மிகவும் தேவை. எப்போது வேண்டுமானாலும் நமக்கு சோதனை

ஏற்படக்கூடிய நேரம் வரலாம். எனவே இந்தப் பயிற்சி அவசியம். அனைவரும் குஷியாக இருக்கிறீர்களா? கை உயர்த்துங்கள். பயிற்சி செய்து அனைத்தும் எளிதாகி விடும். எந்த விதமான கஷ்டமும் இருக்காது. செய்து கொண்டே இருக்க வேண்டும். சற்று நேரம் இடைவேளையாகக் கிடைக்கின்ற அந்த சமயத்திலும் கூட பயிற்சி செய்ய வேண்டும். அந்த பயிற்சியை விட்டு விட வேண்டும். இந்தப் பயிற்சியை எனக்கு நானே செய்வித்துக் கொண்டே இருக்க வேண்டும். எவ்வளவு சமயம் விருப்பமோ அந்த சமயத்திற்குள் செய்து முடிக்க வேண்டும். இப்பொழுதோ முழு நாளின் களைப்பில் இருப்பீர்கள். எனவே பாபா இப்பொழுது உங்களைச் செய்ய சொல்ல மாட்டார். பிறகு ஓய்வாகச் செய்யுங்கள் ஆனால் கட்டாயம் செய்து வர வேண்டும். எவ்வளவு நேரம் விருப்பமோ, அவ்வளவு நேரம் மெது மெதுவாக பயிற்சி செய்து வாருங்கள், பிறகு எளிதில் நடந்தேறும். இது பாபாவின் வரதானமாகும்.

**வெளிநாட்டு சகோதர சகோதரிகளுக்கு:** வெளி நாட்டு சகோதர சகோதரிகள் 50-நாடுகளிலிருந்து 600-பேர் வந்துள்ளனர். (சிறு குழந்தைகள் பாபா முன் பாடலைப் பாடுகின்றனர்) பரவாயில்லை. வேகமாகப் பாடுங்கள்.

**தாதிகளுடன்**: இது நடக்கக்கூடும் என நீங்கள் நம்புகிறீர்களா? கவனம் வைத்தோமென்றால், எது தான் நடக்காது? அனைத்துமே நடக்கக் கூடும். திடமான நிச்சயம் இருந்தால் செய்தே ஆக வேண்டும்! சரி தற்போது நீங்கள் ஆரம்பிக்கவில்லை, திடீரென்று கூறும்போது நாளையிலிருந்து ஒரு மணி நேரம் செய்ய வேண்டும் என்றால் அவ்வாறு செய்ய முடியுமா? செய்ய முடியும் என்பவர்கள் கை தூக்குக்குங்கள். ஒரு சிலரே கை உயர்த்துகின்றனர், சரி, பரவாயில்லை. பாபா, புதிய ஆண்டு (நிர்வயர் சகோதரர் பாபாவிடம்) நீங்கள் ஹாப்பி நியூ இயர் என்றால் அனைவருமே செய்வார்கள். அனைவரும் மிகவும் உற்சாகம், ஆர்வத்துடன் கொண்டாடினர். மிகவும் நன்று. ஹாப்பி நியூ இயர்!

**பிரிஜ் மோகன் சகோதரர்** கூறுகிறார்: (தாதி ஜானகி அவர்களுக்கு 101வது பிறந்த நாள். அவரது பிறந்த தினத்தை நாளை மாலை

விமர்சையாகக் கொண்டாடப்படும். தாதிஜிக்கு அனைவரது தரப்பிலும் வாழ்த்துக்கள்)

ரமேஷ் சகோதரர் (சாந்தி வனத்தில் மருத்துவ மனையில் உள்ளார். பாப்தாதாவிற்கு தனது அன்பினைத் தெரிவித்துள்ளார்). ரமேஷ் சகோதரருக்கு புது வருடத்தின் அன்பு நினைவுகளைத் தெரிவியுங்கள். மருத்துவர்கள் எந்த சிகிச்சை அளித்து வருகின்றனரோ அதனைத் தொடர்ந்து செய்யுங்கள். அந்தக் குழந்தை பாப்தாதாவின் கண் பார்வையிலேயே உள்ளார். பாப்தாதா சக்திகளை வழங்கிக் கொண்டிருக்கின்றார்.

பாப்தாதா அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைக் கூறினார்! அனைவருக்கும் புதிய ஆண்டின் வாழ்த்துக்களைக் கேட்டு மகிழ்ச்சியாக உள்ளது அல்லவா! அனைவரும் உள்ளுக்குள் குஷி அடைந்து கொண்டிருக்கிறீர்கள் ஆனால் அப்படியாக உள்ளது. அனைவருக்கும் பசி எடுத்துக் கொண்டிருக்கும். எனவே நாங்கள் விடை பெறுகிறோம். புதிய ஆண்டு தற்போது ஆரம்பம் ஆகிக் கொண்டிருக்கிறது. உங்கள் அனைவருக்கும் புத்தாண்டின் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! அனைவருக்கும் வாழ்த்துக்கள் கிடைத்ததா? அதனை நன்கு பத்திரமாகக் காப்பாற்றிப் பிறருக்கும் வழங்குங்கள்.

நிர்வயர் சகோதரர் கூறினார்: பாப்தாதா நம் அனைவருக்கும் வழங்கிய வாழ்த்துக்களுக்காக உங்கள் அனைவரின் சார்பில் பாப்தாதாவிற்கு கோடி கோடி நன்றிகள்!

தாதிஜி கூறினார்: பாபா உங்கள் அனைவருக்கும் அன்பு நினைவுகளை அனுப்பியுள்ளார். உங்கள் அனைவரின் சார்பில் நானும் பாபாவிற்கு வாழ்த்துகளைக் கூறுகிறேன்!

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂
☂☂☂☂☂☂